65

Regd. No. M. 2569

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 8

# HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 ஜமாதுல் அவ்வல்மீ 1935 ஆகஸ்ட்மீ

1. அல்குர்ஆன் ... 281
2. நாயகவாக்கியம் ... 286
3. மதத்தின் அவசியம் ... 288
4. நுபுவ்வத்தா? அல்லது பரிகாசமா? ... 292
5. மிர்ஸாயிச் செய்தி ... 294
6. காதியானிக் கொள்கையும் முஸ்லிம்களும் ... 297
7. இஸ்லாத்தின் விசேஷங்கள் ... 299
8. 20 கோடிப் பெண்கள் கைதிகளா? ... 304
9. திருகுர்ஆன் அபாரசக்தி ... 307
10. ஹஸ்ரத் ஷேக் நஜ்முத்தீன் (றஹ்) ... 310
11. ஸீரத் பிரசங்கத்திலும் தடுமாற்றமா? ... 312
12. சத்திய இஸ்லாத்தின் அசத்திய பிரசாரம் ... 314
13. பாவலரின் விடை மழுப்பல் ... 317
14. ஓர் இனிய கதை ... 319

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 AUG 1935
MADRAS

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. S. SARMA

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

## சந்தா விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ... | ரூபா 3 | 0 | 0 |
| பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு... | ” 4 | 0 | 0 |
| தனிப் பிரதி ... | ” 0 | 4 | 0 |

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

## நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியர்க்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

23 AUG 1935
MADRAS

حفاظة الإسلام

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவி)

| | | |
|---|---|---|
| மலர் 6 | ஹிஜ்ரி 1354 ஜமாதுல் அவ்வல் மீ<br>1935 ௵ ஆகஸ்ட்டு மீ | இதழ் 8 |

## அல் குர்ஆன்

### திருகுர்ஆன் ஆதாரமற்ற கதையா? முஅஜிஸாக்கள் பொய்க்கூற்றா?

மேலும், அவர்களிடம் நமது றஸூல்கள் தெளிவான அத்தாட்சிகளை நிச்சயமாகக் கொண்டுவந்தார்கள். (திருகுர்ஆன்.)

மன்பதைகளுய்ய மாநிலந் தனிவிறைவனால் அருளப்பட்ட சத்திய திருமறையாம் புருக்கானுல் ஹமீது எனும் குர்ஆன் ஷரீபின் ஸூரத்துமாயிதா வென்னும் அத்தியாயத்தில், இறைவன் தனது தூதர்களான றஸூல்மார்களுக்கு அத்தாட்சிகளென்னும் முஃஜிஸா—அற்புத நிகட்சிகளை அளித்திருப்பதாக மேற்கண்ட ஆயத்தின் மூலம் நமக்கறிவித்திருக்கிறான். ஆதலின், நபிமார்களுக்கு இறைவனால் அற்புதங்கள் அளிக்கப்பட்டிருந்தன வென்பதில் முஸ்லிம்கள் எள்ளத்தனையும் சந்தேகங் கொள்வதற்கில்லை. எனவே, நபிமார்களுக்கு இறைவன் அற்புதங்களை அளித்திருந்தான் என்பது முஸ்லிம்களின் ஈமானுமாகும். ஆதலின், முஸ்லிம்களைப் பொறுத்தவரை நபிமார்களின் முஃஜிஸாக்களைப்பற்றி நாம் அதிகம் எழுததேவையில்லை. ஆயினும், இஸ்லாத்தின் விரோதிகள், சண்டாளர்கள், முல்ஹிதுகள், காபிர்கள், ஜிந்தீக்குகள் முதலிய வழிகேடர்கள் தங்கள் மனம்போன போக்குக்கு மதம் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறதென்று கருதி பொதுவாக உலகத்திலுள்ள எல்லாமதங்களிலும், முக்கியமாக நம் இஸ்லாம் மதத்திலும் தலையிட்டு இல்லாததும் பொல்லாததுமான பற்பல விஷயங்களைக்கூறி தங்கள் கைகொண்ட மட்டிலும் பலப்பல தினுசாக எழுதி வருகின்றனர். முஸ்லிம்களிலுள்ள சில பாமர ஜனங்கள் மார்க்க விஷயத்தில் தங்களுக்கு போதிய அறிவாற்றலில்லாக் குறைவால் இதனை மெய்யென நம்பி ஏமாற்றமடைவது முண்டு. இந்த ஜிந்தீக்குகளும் முல்ஹிதுகளும் காட்டிய இப் பொய்வழிகளை, குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்புகளேபோல் முளைத்த சில விஷமிகள், தங்களை முஸ்லிம் என்று கூறிக்கொண்டே இஸ்லாத்துக்கு விரோதமான இவ் இல்ஹாதுப் பிரசாரத்தைச் செய்யத்துணிந்து

தாங்கள் சன்மார்க்கத்தை விட்டுத் தூரமாய் விடுவதுடன் உலகில் பல பல குழப்பங்களையும், மாச்சரியங்களையும், வேற்றுமைகளையும் விகர்ப்பங்களையும் யுண்டுபண்ணிவிடுகின்றனர். இவ்வாறு செய்துவரும் கூட்டங்களில் காதியானீ வகுப்பாரும் ஒன்றாகும். இக்காதியானீ கூட்டத்தார் தாங்கள் நபி என்று கூறும் குலாம் அஹ்மது என்பார் முஃஜிஸாக்களைக் காண்பிக்க முடியாமல் அவமானமடைந்ததை மறைப்பான் வேண்டி, நபிமார்களுக்கு முஃஜிஸாக்கள் வேண்டியதில்லை என்றும், நபிமார்களால் நிகழ்பெற்ற முஅஜிஸாக்களான அற்புதச் செய்கைகளுக்குத் தப்பான வியாக்யானம் செய்து அவைகளை முஃஜிஸாக்களல்லவென்றும் கூற முயற்சி செய்து வருவது பகிரங்கமாக யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

வடநாட்டில் முளைத்த அந்தக் காதியானிகள் மார்க்க விஷயத்தில் வழி தவறி இருந்தாலும் உலக விஷயத்தில் சிறிது சமர்த்துள்ளவர்களாதலின் நபிமார்களின் முஃஜிஸாக்களை மறுக்கும் விஷயத்தில் அன்னோர் அதிக ஜாக்கிரதையாக இருந்து விவாதம் செய்துவருகின்றனர். அதாவது, அன்னோர் நபிமார்களுக்கு முஃஜிஸாக்களே இல்லை என்று அடியோடு மறுத்துக் கூறாது சில குறிப்பிட்ட முஃஜிஸாக்களுக்கு மட்டிலும் தவறான —குதர்க்கமான —குயுக்தி வியாக்யானஞ் செய்து மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். இவ்வழி கெட்ட கூட்டத்தார் செய்ததும், செய்துகொண்டிருக்கிறதுமான தாவாக்களைச் சரியாகப்படித்துணர்ந்துகொள்ளச் சக்தியற்ற சில அறிவிலிகள், தங்களை அதிகம் தெரிந்தவர்களென நினைத்துக் கொண்ட 'ஜஹ்லமுறக்கப்'கள் மார்க்கவிஷயத்தில் வீணே தலையிட்டு கண்டதையெல்லாம் எழுதிவிடுகின்றனர். இவர்கள் எழுதிவருவதற்கு ஆதாரமென்னவென கேள்வி கேட்டால், இவர்களது நிலைமை பரிதபிக்கத் தக்கதாக ஆகிவிடுகிறது. அந்தோபரிதாபம்! இது நமது நாட்டில் நடைபெற்றுவரும் பொதுவான விஷயமாகும். இக்குழாத்தினரின் இஸ்லாத்துக்கு முரண்பட்ட, வழிகெட்ட, அஞ்ஞானப் பிரசாரத்தால் நம்முஸ்லிம் பொதுமக்கள் ஏமாற்றமடையக் கூடாதென்பதற்காகவே நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் துண்டு பிரசுரம் பத்திரிகை மூலமாயும், பிரசாரகர்கள் வாயிலாகவும் சத்தியப்பிரசாரம் செய்து வருவதுடன் இத்தகைய வியாசங்கள் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டால் அதற்குத்தக்கமறுப்பு எழுதியும், இக்கெட்ட கொள்கையுடையோர் பிரசங்கத்துறையிலீடுபட்டுப் பிரசாரம் புரியுங்கால் அக்கெட்ட கொள்கைகள் பரவவிடாமல் பிரசங்கிகள்மூலம் தடுத்துக்கொண்டும் வருகிறது. இக்கூட்டத்தார் சிலகாலத்திற்குமுன் பகிரங்கமாகப் பிரசங்கம் செய்ய வெளிப்புறப்படத் தலைப்பட்டதாலேயே "ஹிஸ்புல்லா"க்கள் சத்தியப்பிரசாரம் புரியமுன்வந்து அசத்தியத்தை ஒழித்தார்களென்பதும், இவர்களது பிரசாரம் நடைபெற்றபோதுஇக்கூட்டத்தினர் அடங்கி ஒடுங்கி, இருக்கிறமூலை தெரியாமலே ஒளித்துக்கொண்டு இது காலம்வரை இவ்வழிகெட்ட கொள்கையைப் பத்திரிகையில் பகிரங்கமாக எழுதிப் பிரசுரிக்காமலிருந்து வந்தார்களென்பதும் உலகறிந்த உண்மையாகும்.

ஆனால், அக்கூட்டத்தினர் மக்கள் அயர்ந்திருப்பார்களெனக் கனவு கண்டுகொண்டு, இதுபொழுது சிலநாட்களாகக் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்களது வழி கெட்டகொள்கையைப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்று நினைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இரண்டு மூன்று வருஷங்களுக்குமுன் இக்கூட்டத்தினர் எங்கேனும் பிரசங்கம் செய்யப் போவதாக இருந்தால் முற்கூட்டியே பத்திரிகையில் வெகு படாடோபமாகப் பிரசுரித்து டாம்பீகமாக அவ்விடத்துக்குச் செல்வதும், அங்கு சாமான்ய முறையிலே பிரசாரம் செய்தாலும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கி வரவேற்புகளென்றும், ஊர்வலங்களென்றும், உபசாரப் பத்திரங்களென்றும், பிரசங்கங்களென்றும் பத்திரிகையில் பத்திபத்தியாக எழுதிப்பிரசுரிப்பதும் வழக்கமாக இருந்தது. ஆனால் ஹிஸ்புல்லாக்கள் சத்திய பிரசாரம் புரியமுற்பட்ட ஒரு வருஷம் வரை எந்த இடத்துக்கும் பிரசங்கம் செய்யச் செல்லாமலே மறைந்திருந்தனர். இதுபொழுது மெள்ளமெள்ள சிற்சில இடங்களுக்குச் செல்ல முற்படுகிறார்களாயினும், அவைகளைப் பத்திரிகையில் முற்கூட்டியே பிரசுரியாது பிரசாரம் செய்து வருகிறார்கள். அவைகளில், தங்கள் பிரசாரத்தின் உள் குட்டுகளைத் தெரிந்துகொள்ளாது தங்களுக்கு எதிர்ப்புச் செய்யாமல் விட்டுவிட சில கிராமங்களில் நடைபெற்ற பிர

சாரத்தை மட்டிலும் பத்திரிகையில்படாடோப மாகப் பிரசுரித்து வருகின்றனர்.

இவ்வித நிலைமையில் தா. இ. ஹிஜ்ரிமலரில் "தூத்துக்குடி ஷெய்குஇப்ராஹீம்" என்ற பெயரால் "பெருமானூர் செய்த புதுமைகள்" என்னும் மகுடம் சூட்டப்பெற்ற ஒரு வியாசம் வெளியாகியிருக்கிறது. அவ்வியாசத்தைப்படித் துப் பார்த்தால் ஒரு முஸ்லிம் இவ்வாறான சன் மார்க்க முரணான கட்டுரை எழுதத்துணிவு கொள்ள முடியுமாவென ஐயுறவேண்டியதாக இருக்கிறது. ஏனெனில், அவ்வியாசத்தில் சொல்லப்பட்ட விஷயம் இஸ்லாத்திற்கு முற்றி லும் மாறானதாக இருக்கிறது. ஷை வியாசத் தில் கூறப்பட்ட விஷயங்களிற் சில வரு மாறு :—

1. "நபிகள் பெருமான் முஹம்மது முஸ் தபா (ஸல்) அவர்களுக்கு முன்னர் இவ்வவனி யில் அவதரித்த நபிமார்களென்னும் பெரியார் களின் வாழ்க்கையை-ஆதாரமற்ற கதையைக் கவனிக்கும்போது அவர்கள் பற்பல அற்புதங் களைச் செய்து காட்டினார்கள் என்ற செய்தி கூறப்படுகின்றது. மூஸா (அலை) கோலைக்கீழே போட்டார்கள் ; அது பாம்பாகி விட்டது. ஈஸா (அலை) "எழுந்திரு" என்றார்கள் ; செத்தவன் பிழைத்தான் என்றெல்லாம் அற்புதம் கூறப் படுகின்றன." என்பதாம்.

முதற்கோணல் முற்றுங்கோணல் என்ற படி இவ்வியாசக் கர்த்தா எடுத்த எடுப்பி லேயே தன்னுடைய உள்ளக்கிடக்கையை வெளியிட்டுக் கூறிவிட்டார். அதாவது, நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றி இருந்த நபிமார்களின் வாழ்க்கையை இவ்வியாசக் கர்த்தா "ஆதாரமற்ற கதை" என்று வாதிக்கிறார். ஆனால் ஹஜ்ரத்மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் பிர்ஔனிடம் சென்று பனு இஸ்ராயில்களுக்காக வாதாடிய காலை பிர்ஔன் என்பான் தனது தேசத்திலுள்ள சூனியக்காரர்களை அழைத்து கயிற்றைப் பாம் பாக்கிக் காட்டியபோழ்து ஹஜ்ரத்மூஸா (அலை) அவர்கள் தங்களது கைத்தடியைக் கீழே போட்டதும், அது பெரும் பாம்பாகி சூனியக் காரர்களால் உண்டாக்கப்பட்ட மாயப்பாம்பு களையெல்லாம் விழுங்கிய விஷயமும் திருகுர் ஆனின் ஸூரத்துல் அஃராபின் 12—13-வது ருக்குஉகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இதுவன்றி வேறுபல ஸூரத்துகளி லும் இவ்விஷயம் தெளிவாக விளக்கப்பட் டிருக்கிறது.

ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹுத ஆலாவின் கட்டளைப்படி, மரித்தவர்களை உயிர்ப் பிப்பார்கள் என்ற விஷயம் திருகுர்ஆனின் "ஆல இம்ரான்" என்ற ஸூரத்தில் கூறப் பட்டிருக்கிறது.

இவ்விரு காரியங்களையும் இறைவன் ஹஜ் ரத் மூஸா, ஈஸா (அலைஹிமா) அவர்களுக்கு அற்புத சக்தியாக அளித்திருந்தான் என்ற விபரத்தை, இவ்வியாசத்தின் ஆரம்பத்தில் எடுத்தெழுதப்பட்ட திருகுர்ஆன் வேத வச னத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம். உண்மை இங்ஙனமிருக்க, இவ்வியாசக் கர்த்தா வுக்கு இந்த அற்புதச் செய்கைகள் எழுதப் பட்ட சன்மார்க்க சம்மந்தமான புத்தகங்கள், நூல்கள், வேதங்கள் அனைத்தும் ஆதாரமற்ற கதையாகவே தோன்றுகிறது போலும். இத னால்தான் அவரால் எழுதப்பட்டிருக்கிற மேற் கண்ட வாக்கியத்தில் இம்முஅஜிஸாக்களை "ஆதாரமற்ற கதை" என்றே கூறி இருக் கிறார். ஆகவே, திருகுர்ஆனில் இந்த அற்புதச் செய்கைகள் நடைபெற்றதாக எழுதப்பட்டிருப் பதால் இவரது கூற்றுப்படி திருக்குர்ஆனும் இவ்வியாசக் கர்த்தாவிடம் ஆதாரமற்ற கதை யாகவே தோன்றுகிறது போலும். (நஊது பில்லாஹி மின் தாலிக்) அல்லது திருகுர்ஆனில் இவ்வாறான முஅஜிஸாக்கள் எழுதப்பட்டிருக் கும் பாகங்களை மட்டிலும் இவ்வியாச கர்த்தா கட்டுக்கதை என்று நம்புகிறார்போலும். இத னால் இவ்வியாசக் கர்த்தாவுக்கு திருகுர்ஆனின் மீதோ, அல்லது அதன் சில பாகங்கள் மீதோ நம்பிக்கை இல்லை என்பது நன்கு புலனாகிறது. திரு குர்ஆனை நம்பாதிருப்பவர் எவ்வாறு முஸ்லிமாக இருக்கமுடியுமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

மேலும் அவர்,

"இவைகள் முஅஜிஸாக்களென்று அழைக் கப்படுகின்றன" எனக் கூறியிருக்கிறார்.

இவ்வியாசக்கர்த்தா இஸ்லாம்மத சம்பந்த மான விஷயங்களை ஒரு கடுகளவேனும் தெரிந் திருப்பாராயின் இவ்வாறான வாக்கியத்தை எழுத முன்வந்திருக்க மாட்டாரென்பது திண் ணம். ஏனெனில், இவர் முஅஜிஸா என்ற அரபிப்பதத்தின் கருத்தைக் கொஞ்சங்கூடத் தெரிந்துகொள்ளாதவர் என்பதை இவரது

இந்த வாக்கியம் அறிவிக்கின்றது. இந்தவாக்கியத்திலிருந்து, முற்காலத்து நபிமார்கள் மேலேகண்ட இருவிதமான முஅஜிஸாக்களைப் போல் செய்துகாட்டிய அற்புதங்கள் அனைத்தையும் இவர் முஅஜிஸா என்று ஒப்புக்கொள்வதில்லை என்றே புலப்படுகிறது. ஆனால், இறைவன் இவ்விதமான அற்புதக் காரியங்களைத்தான் முற்காலத்து நபிமார்களுக்கு அவர்கள் உண்மையான நபிமார்கள் என்பதை அறிவிக்கும் திருஷ்டாந்தங்களாக அளித்திருக்கிறான் என்பதை மகுடத்திலெடுத் தெழுதப்பட்ட வாக்கியத்திலிருந்துநாம்தெரிந்துகொள்கிறோம். எனவே, இவைகளை இவ்வியாசக்கர்த்தா முஅஜிஸாக்கள் என்று ஒப்புக்கொள்ள வில்லையாயின், மகுடத்தில் கண்ட ஆயத்தின்படி இறைவன் முற்காலத்து நபிமார்களுக்கு அளித்திருந்த அற்புதச் செய்கைகளை-முஅஜிஸாக்களை-விளக்கிக் கூறுமாறு அறைகூவி அழைக்கின்றோம்.

மேலும் அதில்,

“இங்ஙனம் கூறப் புகும்போது முஅஜிஸாக்களை நாம் மறுக்கிறோமென எவரும் “வேற்று வேட்டு” க்களைக் கிளப்ப வேண்டியதில்லை என்றே வேண்டுகிறேன்” எனக் கூறியிருக்கிறார்.

இவ்வியாசக் கர்த்தா, “மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை” என்றதுபோல் நபிமார்களின் அற்புதச் செய்கைகளை மறுத்துக் கூறவும் ஆசைப்படுகிறார்; அதேசமயம் தம்மை முஅஜிஸாவை மறுப்பவர் என்று எவரும்கருதிவிடக் கூடாது என்றும் அஞ்சுகிறார் என்பது இவ்வாக்கியங்களிலிருந்து புலப்படுகிறது. இவர் உண்மையிலேயே குர்ஆனை அங்கிகரிப்பவராக இருப்பாராயின் நபிமார்களின் முஅஜிஸாக்களை மறுக்கமாட்டார் என்றுதான் நாம் கூறுகிறோம். ஆயினும், அவர் தம்மை ஒரு மேதாவி என்று பிறர் நினைக்கும்படிச் செய்து, முஸ்லிம் பொது ஜனங்களை வழிகேட்டிலாழ்த்தச் செய்யும் குயுக்தியைத் தவிர வேறொன்றுமில்லை. இம்மாதிரிதான் காதியானிகள் தங்களை முஸ்லிம்களென்று கூறிக்கொண்டு காதியானீ மதக் கொள்கையைப் பரவச்செய்து வருகிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட வாக்கியத்தைக் கண்டு ஏமாற்றமடைந்துவிடும் காலம் மலையேறிவிட்டது என்பதை வியாசகர்த்தாவும் வியாசந் தாங்கி நிற்கும் பத்திரிகையின் ஆசிரியர்களும் நன்கு தெரிந்து கொள்ளுவார்களாக.

மேலும் அவர் வரைந்திருப்பதாவது:—

“ரசூல் நாயகம் (ஸல்.) அவர்களது சரிதையை வரைந்துள்ள சில ஆசிரியர்களும் சில பலமுஅஜிஸாக்களைக் கூறியிருக்கின்றனர். கேவலம் தெருக்கூத்தாடும் கழைக் கூத்தரும்கூடத் திக்பிரமை யடையவல்ல பல அரிய பெரிய வேலைகளைச் செய்துகாட்டும்போது, ஆத்ம பரிபக்குவமடைந்துள்ள பெரியார்கள் சாதாரண மனிதர்களைவிடப் பல அரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியுமென்பதை எவராலும் மறுக்கமுடியாது” என்பதே.

வியாசக் கர்த்தாவின் இக்கூற்றுகளிலிருந்து, றஸூல் (ஸல்.) அவர்கள் செய்து காட்டிய அற்புதச் செய்கைகளெல்லாம் தெருக்கூத்தர் செய்துவரும் அரியபெரிய வேலைகளுக்குச் சமமானதென்றே அவர் நினைத்திருக்கிறாரெனக் கருத இடமேற்படுகிறது. அல்லாஹ்வின் கட்டளைப்படி நபிமார்கள் செய்துகாட்டிய முஅஜிஸாக்களுக்கும், தெருக்கூத்தர் செய்யும் சில ஜாலவித்தைகளுக்குமிடையிலுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளச் சக்தியற்ற இவர், “பெருமானார் செய்த புதுமைகள்” என்று மகுடமிட்டு வியாசம் எழுதத் துணிந்தது சுத்தத் தவறாகும். பெருமானார் அவர்களின் தன்மை என்ன? அவர்களது அந்தஸ்தென்ன? அவர்கள் செய்துகாட்டிய முஅஜிஸாக்களென்ன? அம்முஅஜ்ஸாக்களின் தன்மை என்ன? என்ற விஷயங்களை எல்லாம் அவர் தெரிந்துகொள்ளாமல் இவ்வியாசமெழுதியது வருந்தத்தக்க விஷயமாகும். இப்படிப்பட்ட மனப்பான்மை வழிகெட்ட காதியானிக் கூட்டத்தாரின் மனப்பான்மையினும்கூட அதிக மோசமானது என்பதை பொது ஜனங்கள் உணரவேண்டும். இன்ஷா அல்லாஹ் சமயம் வாய்ப்பின் நபிமார்கள் வலிமார்கள் செய்த அற்புதங்களுக்கும், மெஸ்மெரிஸ்ட்களும், ஜாலவித்தைக்காரர்களும்செய்யும் வேலைகளுக்குமிடையிலுள்ள வித்தியாசங்களைப்பற்றித் தனி வியாசமெழுதப்படும். மேலும் அவர்,

“இவர்கள் உலகத்துக்கே விசுவப் பொதுத் தீர்க்கதரிசி யென்றிருக்கும்போது, இவர்களது வாழ்க்கையின் அம்சங்கள் எக்காலத்திற்கும் எத்தேயத்திற்கும் ஏற்றனவாய், பிறர் குற்றம் காணமுடியாதனவாய் அமைந்திருத்தல் அவசியமேயன்றோ? எனவேதான் நபிகள் நாயகமும் (ஸல்.) தங்களைத் தெய்வீகத் தன்மை

வாய்ந்தவர்கள் என்ற நிலைமையில் கொள்ளாது "மனித முஹம்மதாகவே" உலகத்தார்க்கு வழிகாட்ட விரும்பினார்கள். ஆண்டவனும் கூட அவர்களை நோக்கி "நீர் ஒரு மனிதனைத் தவிர வேறில்லை" என்பதை உறுதிப்படுத்தியுள்ளான்" எனக் கூறியிருக்கிறார்.

ஹுஜூர் அக்ரம் (ஸல்.) அவர்களது வாழ்க்கையின் அம்சங்கள் பிறர் குற்றங் காணமுடியாதனவாக இருக்கின்றன என்பதுதான் முஸ்லிம்களின் அசைக்க முடியாத நம்பிக்கையும் தாவாவுமாகும். இந்நிலைமையில் பெருமானார் (ஸல்.) அவர்களது வாழ்க்கை சம்பந்தமாய் பிற மதத்தாரும்கூடக் குற்றங் காணவில்லை என்பதும், அறியாமல் குறைகூறிய சிலருக்கும்கூட முஸ்லிம்கள் தக்க பதில் சொல்லி அவர்களது வாயை அடக்கிவிட்டார்கள் என்பதும் உலகறிந்த உண்மையாகும். ஆனால், இவ்வியாசகர்த்தாவோ சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது வாழ்க்கை அம்சங்களில் பிறர் குற்றங் காணக் கூடாது என்பதற்காக, பல சரித்திராசிரியர்கள் கூறியுள்ள முஅஜிஸாக்களை அகற்றி வேறு ஒரு சரித்திரம் எழுத விரும்புகிறார்போலும். எனவே, இவர் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தங்களது உலகவாழ்க்கைக் காலத்தில்செய்த அற்புதங்களை அவர்களதுவாழ்க்கையின்அம்சங்களுக்குக் குறைவான அதாவது பிறர் குற்றங்காணக் கூடியனவென்று கருதுவதாகத் தெரிகிறது.

தவிரவும், பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் முஅஜிஸாக்களைச் செய்து காட்டியதால் அவர்கள் தெய்வமாக இருக்கிறார்கள் என்றோ, அல்லது தெய்வத்துக்குப் பங்காளி என்றோ எந்த முஸ்லிமும் கூறுவதுமில்லை;அவ்வாறு கருதுவதுமில்லை. அவர்களுடைய கலிமா "நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சாக்ஷியங் கூறுகிறேன்; நிச்சயமாக முஹம்மதானவர் (ஸல்.) அவனுடைய அடியாராகவும் தூதராகவுமிருக்கிறார் என்று சாக்ஷியங் கூறுகிறேன்" என்ற வாக்கியமாகவே இருக்கிறது. ஆகவே, இவ்வியாசகர்த்தா முஸ்லிம்களின் கொள்கை இன்னதென்று கூடத் தெரிந்துகொள்ளாது தடுமாற்ற மடைகின்றார். இவரின் தடுமாற்றத்தின் போக்குத்தானென்னே! மேலும்,

"எனவே, ரசூல் நாயகம் (ஸல்.) எத்தகைய புதுமைகளை-இயற்கைக்குச் சற்றும் மாற்ற மற்ற புதுமைகளைக்—காட்டிச் சென்றார்களென்பதை முஸ்லிம்கள் உணர்ந்து, அந்தப் புதுமைகளைக் கடைப்பிடித் தொழுகுவார்களானால், அதிலேதான் சாபல்யத்திற்குரிய பாதை கிட்டும்."

என்று வியாசகர்த்தா கூறுகிறார். புதுமையிற் புதுமை இயற்கைக்கு மாற்றமற்றபுதுமை. புதுமை என்ற வார்த்தையே அது வெளியாகும் தேதிவரை அம்மாதிரியான காரியமெதுவும் நடைபெறுவது அசாத்தியம் என்று மக்களால் கருதப்பட்டு வந்திருக்கவேண்டும் என்பதை அறிவிக்கின்றது. சந்திரன் இருதுண்டுகளாய் பிளந்துபோனது, பெருமானார் நடந்து செல்லுங்காலை, மலை கல் மரங்களிலிருந்து ஸலாம் வெளியானது, மிம்பர் அசைந்து அழுதது, சயிக்கினையைக் கொண்டு விக்கிரகங்கள் குப்புற அடித்துவிழுந்தது, பெருமானார் (ஸல்.) அவர்கள் மலபாதைக்குச் செல்ல நாடியபோது மைதானத்தில் தூரத்திலுள்ள இருமரங்கள் ஒன்று சேர்ந்து திரை ஏற்பட்டது, பேரீத்தங்குலை தானே கீழேவந்தது, மரம் நடந்து சென்றது, மலடான ஆடு பால் கொடுத்தது, மிருகம் சஜ்தாச்செய்தது, கொஞ்ச சாப்பாட்டை அநேகர் சாப்பிட்டது, பெருமானார் (ஸல்.) அவர்களது கைவிரலுக்கிடையிலிருந்து தண்ணீர் பெருகி வடிந்தது முதலியவைகளெல்லாம் இயற்கைப்படி நடைபெற்றனவா? இவ்வாறு நடைபெறுவதுதான் இயற்கையா?

இயற்கைக்கு மாற்றமில்லாமல் நிகழும் காரியம்புதுமையேயல்லவென்பதைச்சிறுகுழந்தைகள்கூட அறியும். சிறுகுழந்தைகளுக்குள்ள அறிவைக் கூடப் பெற்றில்லாத இவ்வியாசகர்த்தா, இயற்கைக்குச் சற்றும் மாற்றமில்லாத புதுமை என்று, புதுமைக்கு புதுவியாக்யானம் செய்ய முன்வந்திருக்கிறார். இப்புதுவியாக்யானிக்கு புதுமை என்ற பதத்துக்கு சரியான பொருளாவது அல்லது இயற்கை என்ற பதத்திற்குள்ள சரியான கருத்தாவது தெரியுமா என்று வினவுகின்றோம். இவர் இயற்கை என்பது இன்னது, இன்னின்னவைகள் தாம் இயற்கைகள், இவையல்லாதவைகள் இயற்கைஅல்ல என்ற விஷயங்களை அடுத்த வியாசத்தில் விளக்கிக் கூறுவாரா? என்று வினவுகின்றோம்.

கற்றறிந்த பெரியார்கள் கூறியவைகளிலுள்ள இரண்டொரு பதங்களை நமது நாட்டிலுள்ள சில அறிவிலிகள் மனனஞ்செய்து அதனைவிடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டு,

பாமரமக்களிடம் அப்பதங்களைக் கூறி ஏமாற்றி வருகிறார்கள். இத்தகைய தோரணையிலேதான் 'இயற்கை' என்னும் பதத்தையும் இவ்வியாசகர்த்தா உபயோகித்திருப்பதாக பொதுமக்கள் கருதுவதால் அப்பதத்தின் கருத்து இன்ன தென்பதை அவர் தெளிவுபடுத்துவாராக.

இதுவன்றி இவ்வியாசத்தில் இன்னும் ஆக்ஷேபிக்கத்தக்க பல விஷயங்கள் இருக்கின்றன வாயினும், இவ்வியாசகர்த்தா இயற்கைக்கு வியாக்யானம் செய்து அவைகளை வரையறுத்துக் கூறியபின் இன்ஷா அல்லாஹ் அவைகளையும் பொதுஜனங்கள் உணரும்பொருட்டு வெளியிடுவாம். ஆனல், இந்த இடத்தில் ஹிபாஜத்துல் இஸ்லாம் வாசக நேயர்களுக்கு முக்கியமாகவும், முஸ்லிம் மகாஜனங்களுக்குப் பொதுவாகவும் நாம் அறிவித்துக் கொள்வதொன்றுண்டு. இக்காலத்தில் தோன்றிய வழிகெட்ட காதியானிக் கூட்டத்தார் பலவகையிலும் நாட்டில் பரவி தங்கள் வழிகெட்ட கொள்கைகளை முஸ்லிம்களிடயே பரப்பி வருகின்றனர். இவர்கள் இஸ்லாமியப் போர்வையில் தங்கள் பிரசாரத்தை நடத்திவருவதால், முஸ்லிம் பொதுஜனங்கள் இதனைக்கண்டு ஏமாற்றமடைந்து இவர்களது கொள்கைகளைச் சுலபமாக நம்பிவிடுவதற்கு ஹேதுவேற்பட்டுப் போகிறது. இதுவுமன்றி இவர்களுக்குத் திருக்குர்ஆனைத் திருத்தமாக ஓதத் தெரியாவிட்டாலும் தங்களது சம்பாஷணைகளில் கொஞ்சமும் சங்கோஜமின்றி திருகுர்ஆன், ஹதீது ஷரீபு ஆகியவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கூறுவதால், இவர்கள் கூறும் கூற்றுகளை முஸ்லிம்கள் எளிதில் நம்பிவிடுவதற்கு ஹேது வேற்பட்டுப்போகிறது. ஆதலின், காதியானிக் கொள்கையை முஸ்லிம் வேஷத்தில் பரப்ப முயலும் கசடர்களைக் காணும்போது அவர்கள் கூறுவனவற்றிற்கு குர்ஆன் ஹதீது கிரந்தங்களிலிருந்து எழுத்து மூலமான ஆதாரத்தைக் காண்பிக்கவேண்டும் என்று கூறி அவர்கள் காண்பித்தும் கூறியும்வரும் விஷயம் அக்கிரந்தங்களிலிருக்கிறதா? என்று கவனிக்கும்படி வேண்டுகிறோம். ஷெயார்கள் கூறும் மேற்கோள்கள் அனைத்தும் காதியானிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும், உருதுவிலும் எழுதிவைத்திருக்கும் புத்தகங்களாகவே இருக்குமாதலால் பொதுஜனங்கள் முன்ஜாக்கிரதையுடன் அந்தப் புத்தகங்களை நன்கு தெரிந்துகொள்வதுடன் உண்மையாகவே குர்ஆன் ஹதீதில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறதா என்பதைக் காண்பிக்கும்படி அவர்களை வற்புறுத்தப்படுங்காலை அவர்களது சாயம் வெளுத்து அன்னோர் இம்டேஷன் மௌலானுக்களென்பது உலகத்தாருக்கு நன்கு தெரிந்துவிடும்.

---

## நாயக வாக்கியம்

### அல்லாஹ் தன் அடியார்மீது கிருபையுள்ளவனக இருக்கிறான்

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று எஜமான் அடியார்களுக்கிடையிலுள்ள சம்மந்தா சம்மந்தங்களை எடுத்து விளக்கிவருங்காலை, முஸ்லிம்காள்! உங்களுடைய நாயன் உங்கள்மீது அதிகப் பிரீதியுள்ளவனக இருக்கின்றானதலின் உங்களுடைய முழுப்பிரயாசையையும் அவன் வணக்கத்தின்பக்கல் செலவிடுங்கள்; அவனுடைய பொருத்தம் விருப்பம் எதனாலேற்படுமென்பதைத் தெரிந்து அதற்குத் தலை சாயுங்கள்; அதுபொழுது அல்லாஹ் தன்னுடைய கிருபையின் வாயிலை உங்களுக்காகத் திறந்து அளவற்ற பாக்கியங்களை அபரிமிதமாய் அளிப்பான்; நீங்கள் எவ்வளவு தூரம் அவனுக்கு மாறு செய்தபோதிலும் உண்மை மனத்தோடு பாப மன்னிப்புத் தேடுவீர்களாயின் உங்கள் பாவங்களை மன்னித்தருள்புரிகின்றான். இது சம்மந்தமாயுள்ள அவனது அறிக்கை வருமாறு:—

"எனது அடியான் ஏதாகிலுமொரு கேடதியைச் செய்ய நாடுவானகில் அதனை எழுதிவிடாதீர்களென, எனது மலக்குகளுக்கு சட்டளையிடுகிறேன்; அதற்குப்பின் அந்தக் கேட்டகாரியத்தை அவன் செய்துவிடுவானகில் அவன் மீது ஒருபாவம் எழுதப்படுகிறது. அவன் நன்மையான காரியம் செய்யவேண்டுமெனக் கருதி

அதனைச் செய்வானாகில் அவனுக்காக 10 நன்மைகள் எழுதப்படுகிறது '' என அல்லாஹ்த ஆலா தெரிவிப்பதாக அறிவித்தார்கள். ''

ஹஸ்ரத் ஷேக் முஹையித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், “ஏ அல்லாஹ்வின் பாதையில் செல்லவேண்டுமென்னும் நாட்டங் கொண்டிருப்பவனே! பலவாறும் உமது நாயனுக்கு வழிப்பட்டு நடப்பதற்கு முயற்சி செய்வாயாக! அவன் உன் செயல்களைப் பொருந்திக் கொண்டு உம்மீது திருப்தியடைந்துவிடுவானாகில் உலகமுழுதும் உம்மீது திருப்தி கொண்டுவிடும். அவன் உம்மீது அதிருப்தி கொள்வானாகில் உலகின் எந்தசக்தியும் அதற்கு மாற்றஞ் செய்யமுடியாது; வானம் பூமியிலுண்டான எந்தவஸ்துவும் உம்மீது பிரீதி கொண்டதாக இருக்கமாட்டாது. ஏ மறதி கேடு என்னும் போதையில் மூழ்கிக்கிடப்பவனே! எது வஸ்து உன்னை ஏமாற்றத்திலாக்கிவைத்திருக்கின்றது? இந்த காசு பணம் சாமான் பெருமை முதலியவைகள் உன்னுடன் கூட வரமாட்டாதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சதாகாலமும் நீடித்திருக்கக்கூடிய சுவண்டியின் பக்கல் முகத்தைத்திருப்பி உனது எஜமானின் நன்றியுள்ள மனிதனாகிவிடு '' என்று தெரிவித்திருக்கின்றார்கள்.

அயல்பாகக்காரர்களுடன் சிநேகங்கொள்ளுவது மேலான வணக்கமாகும்

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஒருநாளன்று அயல்பாகக்காரர்களுக்கு உபகாரஞ் செய்வதனாலேற்படும் பிரயோசனங்கள் சம்மந்தமாய் சொற்பெருக்காற்றிவருங் காலை,


“என்வாணுள் எவன் கைவசமிருக்கிறதோ அந்த அல்லாஹ்வின்மீது பிரமாணமாக, உங்களில் எவனும், தனக்கு எதைப்பிரியம் வைக்கிறானே அவ்வாறான வஸ்துவையே தன் அயல்பாகக்காரனுக்கும் தேவையானதென கருதும் வரை அவன் மூமினாக இருக்கமுடியாது '' எனக் கூறியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் இமாம்ஷேக் அப்துஹுமிஸ்ரீ அவர்கள் இந்த ஹதீதை விரிதுரைக்குங்கால், நம் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனனமாவதற்கு முன் அனீதி அதிக்கிரமம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது, மூர்க்க குணமுடைய அறபியர்கள் மிருகங்களைப்போல் ஒருவரோடொருவர் சண்டைச் சச்சரவு செய்துகொண்டிருந்தனர்; அத்துடன் இம்மிருகச் செயல்கள்மீது அன்னோர் பெருமை பாராட்டுபவர்களாயு மிருந்தார்கள்; நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் இம்மிருகத்தன்மைகளையெல்லாம் நேர்மைபடுத்தி ஒருவரோடொருவர் அன்புற்றிருக்கவேண்டுமென போதித்து வருவதற்கிடையே மக்களைநோக்கி, “அல்லாஹ்வின் அடியார்களே! அன்பு பிரீதியோடு வாழ்க்கை நடத்துவது உங்களின் பிரதானக் கடமையாகும்; உங்களிலொவ்வொருவரும் இதரர்களின் சுகதுக்கங்களை அனுபவிக்க நாடுவீர்களாயின் நீங்கள் ஒருக்காலும் தாழ்மையடையமாட்டீர்கள்; இவ்வாறன்றி நீங்கள் தயாளத்தன்மையற்றவர்களாகிவிடுவீர்களாயின் உங்களுடைய மானம் மரியாதைகளெல்லாம் எடுபட்டுப்போய் மிகமிக கேவலமாக மதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன்தோன்றிய மக்களெல்லோரும் அவர்களுக்குள் பிரீதி அன்பு என்னும் சற்குணங்கள் மிளிர்ந்துகொண்டிருக்கும் காலம் வரை ஜெயசீலர்களாய் விளங்கினார்கள்; அவர்கள் வன்னஞ்சமுடையவர்களாகி தயாளகுணமற்றவர்களாய்விடவே அவர்களின் சங்கை மரியாதைகளெல்லாம் காற்றில் பறந்து தாழ்மைத்தனத்தின் பாதாளம்வரை சென்றுவிட்டார்கள். இந்நிலைமையைக்கண்டு தக்கபடிப்பினை கொண்டு இகபரபாக்கியசாலிகளாய்த் திகழ முன்வருவீர்களாக '' என கூறினார்களென்பதை சரித்திரக் கலைகளில் நாம் பார்க்கிறோமென அறிவிக்கின்றார்கள்.

---


கண்டி

கண்டியில் ஜனுப் N. E. அப்துல் கரீம் சாஹிப் அவர்களை நமது ஏஜண்டாக நியமித்திருப்பதால், அவரது வியாபார ஸ்தலமாகிய 371-நெ. திருக்கோணமலை ஸ்டீடில் நமது அரும்மாசிகை பெற்றுக்கொள்ளலாம்.



## மதத்தின் அவசியம்

உலகில் காணப்படும் பிறமக்களில் ஒரு லக்ஷியமு மில்லாதவர் ஒருவரு மில்லே. சிறியோர், பெரியோர், வயோதிகர், வாலிபர், இளைஞர், முதியோர், வெள்ளையர், கருப்பர் முதலிய எல்லோரும் அவரவர் சக்தி இயல்புக்குத் தக்கவாறு ஒவ்வொரு லக்ஷியமுள்ளவராகவே இருக்கின்றனர். இதை வாழ்க்கையின் லக்ஷியம் என்று கூறி அதற்கான திட்டங்களை வகுத்திருக்கின்றனர். இந்தத் திட்டம் ஒவ்வொரு தேசத்திற்கும், நாட்டிற்கும், காலத்திற்கும் ஒவ்வொரு மாதிரியாக இருந்து எத்தனையோ முறை அவைகள் மாறுதலடைந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கையின் இலக்ஷியத்திற்குத் தனிப்பட்ட முறையில் ஒரு பெயர் இருக்கிறதுடன் ஒரு கும்பல், கோத்திரம், வகுப்பு என்று பொதுவாக வகுக்கப்படும் பொழுது அந்த லக்ஷியத்திற்கு தேசாசாரம், ஜாதியாசாரம், குலாசாரம் என்று பெயர் வழங்குகிறது.

இத்தகைய ஆசாரங்கள் அந்தந்த வகுப்பினுள்ள, நாட்டினுள்ள, குலத்தினுள்ள அறிவாளிகள் தங்கள் புத்திக்கு எட்டியமட்டில் தங்களுக்கு நன்மை பயக்கக்கூடியவையெனக்கருதி தங்கள் அறிவுக்கு எட்டியதைக் கொஞ்சங் கொஞ்சமாக ஏற்படுத்தியதாகும். இவ்வாசாரங்கள் ஒரே சமயத்தில் பலர் கூடி ஆலோசனை செய்து எழுதிவைக்கப்பட்டவை யென்றோ, அல்லது ஏற்படுத்திவைக்கப் பட்டவையென்றோ சொல்லமுடியாது. அநேகம் தலைமுறைகளில் பற்பல மாறுதல்களை அடைந்துகொண்டே இவ்வாசாரங்கள் பற்பல வடிவமாக அவ்வக்காலத்தில் திகழ்கின்றன. எனவே, இவ்வாசாரங்களைப்பற்றி மக்கள் நன்கு சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். இவ்வாசாரங்கள் ஒரு குலத்திற்கோ அல்லது தேசத்திற்கோ, வகுப்பிற்கோ எல்லாக் காலத்திற்கும் நன்மை பயக்கக் கூடியனவாக இருந்திருப்பின், அவை அன்று ஏற்படுத்தப் பட்டதிலிருந்து எவ்வித மாறுதலையும் திருத்தத்தையு மடையாமல் இன்றுவரை வந்திருக்கும். ஆகவே, இவை திருத்தத்திற்கும், மாறுதலுக்கும் உட்படுத்தப்பட்ட ஒரு விஷயமே, இவை எக்காலத்திற்கும் ஏற்றவையல்லவென்பதை அறிவிக்கிறது. தவிர, இது ஒரு குலத்திலுதித்த மக்கள் அனைவருக்கும் ஒன்றுபோல் நன்மை பயக்கக் கூடியதாகவோ, அல்லது பொதுவாக மக்கள் அனைவருக்குமே ஒன்றுபோல் நலம் புரிவதாகவோ இருப்பின் இவ்வுலகில் எண்ணத்தொலையாத ஆசாரங்களை நாம் பார்க்கவும் கேட்கவும் நேர்ந்திராது. அன்றியும் ஒருவருடைய ஆசாரத்தை இன்னொருவர் குறை கூறவும், வெறுக்கவும், எதிர்க்கவும் வேண்டிய அவசியமும் நேர்ந்திராது. ஏழை, பணக்காரர், எஜமான், கூலிக்காரர், ஸ்திரி புருஷர் என்று பலவாறு பிரிந்து ஒவ்வொருவரும் தத்தம் உரிமைக்காகப் பிறரிடம் மல்லாடுவதும் பெரும் பெருங் கலகமும், கிளர்ச்சியும், புரட்சியும் உண்டாவதும் ஏற்பட்டிருக்காது. ஆகவே, இக்கிளர்ச்சியும், புரட்சியும் உண்டாகி இருப்பது

ஒன்றே இவ்வாசாரங்கள் மக்கள் யாவருக்கும் அவரவருக்குரிய உரிமைகளை, பாத்தியதைகளைச் சரிவர அளிக்கவில்லை என்பதை ருஜுப்படுத்துகிறது.

இதற்குக் காரணமென்னவெனில், இவ்வாசாரங்கள் மனிதன் ஏற்படுத்தியதுதான்; மனிதனுக்குள் அறிவு உட்பட்டு விடவில்லை; பிறக்கும்போதே மனிதன் எல்லா அறிவுகளையும் தெரிந்து கொள்ளவில்லை; ஒவ்வொருவரும் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை புதுப்புது அனுபவங்களை அடைந்துகொண்டே இருப்பதால் மனிதனுடைய அறிவும் ஞானமும் தினந்தினம் மாறிக்கொண்டும் வளர்ச்சியடைந்துகொண்டு மிருக்கிறது; நாளைக்குத் தேவைப் பயக்கக்கூடியது எது என்பதை எவரும் இன்றைக்கே நிச்சயமாகக் கூறக்கூடிய நிலைமையிலில்லை; ஏனெனில், நாளையத்தினம் சம்பவிப்பது எது? தனக்கு எவ்வித நிலைமை ஏற்படும்? என்ற விஷயத்தை நிச்சயமாக எவரும் உணர்ந்ததில்லை. இது போலவே மனிதன் உற்பத்தியானது முதல் இன்றுவரை மனித வர்க்கத்தின் அறிவும், ஞானமும், அனுபவமும் மாறுதலடைந்துகொண்டும், வளர்ச்சியடைந்து கொண்டுமிருக்கின்றன. ஆதலால், உலகிற்றோன்றிய எவரும் தனக்குள்ள தேவைகளனைத்தையுமோ அல்லது தன் குலத்துக்கு வேண்டியவைகளனைத்தையுமோ அறியவில்லை என்பது நிதரிசனம். ஆகவே, மனிதன் தனது சொந்த யுக்தியால் ஏற்படுத்தும் எந்தஆசாரமும், திட்டமும், நிர்ணயமும், சட்டமும் பரிபூரணமானதாகவோ, அல்லது நிரந்தரமானதாக இருக்கமுடியாது.

இப்படிப்பட்ட நிரந்தரமான, பரிபூரணமான சட்டத்தை, ஆசாரத்தை, நியதியை, நிர்ணயத்தை, திட்டத்தை ஏற்படுத்த வல்லவன் இம்மனித வர்க்கத்தை உற்பத்திசெய்து, அதனை ரட்சித்துக் காத்துப் பரிபாலிக்கின்ற அவ்வல்லோன் ஒருவனேயாவன்; அவனால் தான் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய முடியும்; அவன் வகுத்த திட்டந்தான் மக்களுக்கு நன்மை பயக்கவும், யாவரும் க்ஷேமமாக வாழக்கூடிய வழியைக் காட்டவும் கூடும்; வேறெத்தகைய திட்டமும் நன்மை பயக்கா, இப்படிப்பட்ட திட்டத்தைத் தான் மக்கள் 'மதம்' என்றும், மார்க்கமென்றும் கூறிவருகின்றனர். எனவே, மக்களுக்கு நன்மைபயக்க வல்லது இறைவனேற்படுத்திய திட்டமாகிய மார்க்கமே யல்லாது வேறெதுவுமின்று.

ஆனால், இற்றைநாளில் உலகத்தில் ஹிந்துமதம், ஜைனமதம், புத்தமதம், ஜௌராஷ்டிர மதம், கிறிஸ்து மதம், யூத மதம் என்று பல பெயர்களால் நூற்றுக்கணக்கான மதங்கள் இருப்பதை நாம் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். இத்தகைய மதங்களை அனுஷ்டிப்பவர்களும் உரிமைகளுக்காக ஒருவரை ஒருவர் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்றனர். இம்மதங்களிலுள்ள சிற்சில சட்டங்கள் மனித வகுப்பிலுள்ள ஒரு பிரிவாருக்கு அதிக நன்மையும், மற்றொரு பிரிவாருக்குப் பெருங் கஷ்டத்தையும் விளைவிப்பனவாக இருக்கின்றன. ஆதலால், மதங்களிலுங்கூட மக்கள் யாவருக்கும் நன்மை அளிக்கவல்ல அம்சங்கள் பரிபூரணமாக இல்லை என்று சிலர் கூறி, பொதுவாக மதங்களை ஒழிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இவ்வாறு கிளர்ச்சி செய்பவர்களை நீங்கள் எத்தகைய பெயர் கொண்டழைத்தாலும் சரி அவர்களுடைய கிளர்ச்சி முற்றிலும் சரியானதென்று கூறி விடுவதற்குமில்லை; முற்றிலுந் தவறு என்று மொழிவதற்குமில்லை. ஆகவே, அது விஷயத்தை அவர்களது மனத்திற்படும்படி நன்கு எடுத்துரைப்பது அவசியமாகும்.

மதம் என்ற பெயரால் இக்காசினியில் இருந்துவரும் மார்க்கங்கள் அனைத்தும் தெய்வ சம்மதமான மதங்களென்றோ, தேவனால் இயற்றப்பட்ட திட்டங்களென்றோ கூறிவிடுவதற்கில்லை. ஆகவே,

ஒரே ஒரு மதம்தான் மக்களனைவருக்கும் பொதுவாக இறைவனலேற்படுத்திக் கொடுக்கப்பட்ட மதமாகும். மற்றவை யனைத்தும் அவ்விதநிலைமையிலில்லை என்பது பிரத்தியக்ஷம். எனவே, இவ்விதமான மதம் எது என்பதை இவ்வாக்ஷேபனைக்காரர்கள் கண்டுபிடித்து அதில் சொல்லப்பட்ட விஷயங்களைக் கடைப்பிடித்து நடக்கவேண்டுமே யன்றி பொதுவாக மதங்களனைத்தையும் அடியுடன் மறுத்துவிடுவது சரியன்று.

உதாரணத்திற்காக இரண்டொரு மதங்களைப்பற்றிச் சிறிது கூறுவோம். ஹிந்துமதம் இந்தியாவுக்கு மாத்திரமுள்ள மதமாகும். அதாவது, ஒரு தேசத்திற்கு மட்டுமுள்ள மதமாகும்; உலகத்திற்குப் பொதுவாகவுள்ள மதமன்று. இதனல்தான் அதில் பிறமதத்தாரைச் சேர்ப்பதற்கான சட்ட திட்டமோ அழைப்போ எதுவுமில்லாமலிருந்து வருகிறது. தவிரவும், அதில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற வர்ணாசிரம தர்மம் ஒரு ஜாதியாருக்குள்ளிலேயே பல பரிவுகளை யுண்டுபண்ணி ஒரு பிரிவாருக்கு அதிகச் சலுகைகளையும், மற்றொரு பிரிவாருக்கு அதிகக் கஷ்டங்களையும் கொடுத்து வருவதுடன் ஸ்திரீகளுக்கு சம உரிமை அளிக்காமலுமிருந்து வருகிறது. இவ்வொரு விஷயத்தைப்பற்றி மட்டிலும் நாம் பொதுவாகக் கவனித்துப் பார்க்குமிடத்து இது தேவனல் இயற்றப்பட்ட மதமாகவோ அல்லது அவன் இந்தியருக்கு மட்டிலும் ஏற்படுத்திக்கொடுத்த திட்டமாகவோ இருக்க முடியாது என்பது திண்ணம். ஆகவே, இதனை இயற்றியவர்கள் முற்காலத்திலுள்ள அறிவாளிகளாகவே இருக்க வேண்டும். ஹிந்துமத தர்மத்தைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யும் பக்ஷத்தில் இவ்விஷயத்தை நாம் அதில் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

இனி கிறிஸ்து மதத்தை எடுத்துக் கொள்வோம். இதுவும் உலகத்திற்குப் பொதுவாக மக்கள் யாவருக்கும் பொதுவான தனிமதமன்று. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் இஸ்ரவேல் கூட்டத்தாரிடம் நபியாக அனுப்பப்பட்டார்களேயன்றி உலகத்திலுள்ள மக்களனைவருக்கும் பொது நபி என்ற அந்தஸ்திலனுப்பப்பட்டில்லை. தவிரவும் தேவனலளிக்கப்பட்ட தௌராத் வேதத்திலுள்ள சில சட்ட திட்டங்களை ஊர்ஜிதம் செய்து, அவைகளிலுள்ள சிலவற்றை மாற்றி யமைக்கவே வந்தார்கள். இவ்விஷயம் பைபிளில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, கிறிஸ்துமதம் தேவனலளிக்கப்பட்ட மதமாக இருந்தாலும் குறிப்பிட்ட ஒருவகுப்பாருக்கு மட்டிலும் அருளப்பட்ட மதமேயன்றி உலகத்திற்குப் பொதுவான மதமாக இருக்கவில்லை. ஆதலின், அதில் கூறப்பட்ட சட்டதிட்டங்கள் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

பிறகு, யூதமதத்தை எடுத்துக்கொள்வோம். இது ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் மூலமாக இஸ்ரவேல் புத்திரர்களுக்கு இறைவன் அளித்த தோரா என்ற வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மதமாகும். ஆதலின், இது உலகுக்குப் பொதுமதமல்ல.

ஜெளராஷ்டிர மதம், புத்தமதம், கன்பூஷியஸ் மதம், ஜைனமதம் ஆகியவைகளுக்கு மதம் என்ற பெயர் அலங்காரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதேயன்றி உண்மையில் அவைகள் தேவனலளிக்கப்பட்ட மதம் என்பதற்குத் தக்க சான்றுகளிருப்பதாகத் தெரியவில்லை. சில தேவனலளிக்கப்பட்ட மதம் என்பதற்குச் சான்றுகளிருந்த போதிலும் அவை மக்களனைவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்ற மதங்களென்பதற்குத் தக்க சாக்ஷியங்களிருக்கவேண்டும். இப்படிப்பட்ட சாக்ஷியம் அவைகளிலில்லை என்பது நிச்சயம்.

ஆகவே, உலகில் மதம் என்ற பெயரால் சொல்லப்படும் மார்க்கங்களில் பெரும்பாலானவை தனிப்பட்ட வகுப்பினருக்கு அவ்வக் காலத்திற்கு மட்டும் அருளப்பட்டவைகளாகவே இருக்கின்றன. சில மதங்களெனச் சொல்லப்படுபவைகள் தேவனுல் அருளப்படாமல் சில அறிவாளிகளினுல் ஏற்படுத்தப்பட்டவைகளாக இருக்கின்றன. ஆதலின், அவைகள் உலகத்திற்குப் பொதுவான மதங்களாக இருக்கத் தகுந்தனவன்று. அவைகளைப்பற்றி இக்காலத்திலுள்ளவர்கள் கூறும் ஆக்ஷேபனைகளும் ஒரு விதத்தில் சரியானவைகளாகும். ஆனல், அக்கூட்டத்தினர் சில மதங்களிலிருக்கிற சிற்சில குறைகளை அடிப்படையாகக் கொண்டு அடியுடன் எல்லா மதங்களையும் மறுப்பதும், மதத்தையே ஒழித்துவிட வேண்டுமென்று பேசுவதும் கண்டிக்கத் தக்க விஷயமாகும்.

தவிர, மற்றொரு விஷயத்தையும் நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இவர்கள் மதத்தை ஒழித்துவிட்டு, மக்கள் அனைவருக்கும் சர்வசுதந்திரமும் உரிமையுமளிக்கக்கூடிய ஒரு திட்டத்தைச் சுயமே இயற்ற முயலுகின்றனர். இவர்களுக்கு முன்னுள்ள ஜனங்கள் இம் மாதிரி சுயமே இயற்றிய திட்டங்களை இவர்கள் இப்பொழுது திரஸ்கரித்து விட்டுப் புதிய திட்டம் இயற்றுவதுபோலவே, இவர்கள் ஏற்படுத்தும் திட்டத்தை மற்றொரு சாரார் இன்றில்லையாயினும் நாளைக்கு மாற்றிவிட்டு புதியதொரு திட்டத்தை ஏற்படுத்த முயற்சிப்பர். இதனுல், உலகம் முடியும்வரை நிரந்தரமான ஒரு திட்டமில்லாமல் அடிக்கடி மாறுதல்களேற்பட்டுக்கொண்டே இருக்கும். ஆதலால், இவர்கள் புதிய திட்டத்தைச் சுயமே ஏற்படுத்த முயற்சிக்கும் தொழிலை விட்டுவிட்டு மக்கள் யாவரையும் படைத்துக் காக்கும் ரக்ஷகன் வாழ்க்கைப் பெருங் கடலை நீந்தி முக்தி பெறுவதற்காக இருலோகத்திற்கும் உபயோகமான பொதுத் திட்டம் வகுத்துக் கொடுத்திருப்பதைக் கண்டுபிடித்து அதன்படி நடக்க முயலுவார்களாயின், அது அவர்களுக்கும் உலகமக்களுக்கும் நன்மை பயக்குவதுடன் இரு லோகத்திலும் முக்தியளிக்கக்கூடிய நேரான பாதையைக் காட்டும் என்பதையும் அப்படிப்பட்ட திட்டம் இஸ்லாம் மதந்தான் என்பதையும் அறிவித்துக்கொள்கிறோம்.

இற்றை நாளில் ஹிந்துக்களிலும், கிறிஸ்துவர்களிலும், இதரமதங்களிலுமுள்ள சிலர் தங்கள் உரிமைக்காகவும், சமத்துவத்திற்காகவும் "சுயமரியாதை" என்ற பெயரால் கிளர்ச்சி செய்து வருகின்றனர். அவரவர் அனுஷ்டிக்கும் மதத்திள்ள பெருங்குறைகளை அவர்கள் எடுத்துக்கூறி அந்தந்த மதத்தைத்திருத்தவும், ஒழிக்கவும் முயற்சி செய்துவருகிறார்கள். இவர்கள் செய்யும் முயற்சிகள் நியாயமா? அநியாயமா? அந்த மதத்தை அழிக்க வேண்டுமா? திருத்த வேண்டுமா? என்பதைப்பற்றி முஸ்லிம்களாகிய நாம் அக்கரை செலுத்தவேண்டிய அவசியமில்லை. ஆனல், பிறமத நண்பர்கள் செய்யும் இக்கிளர்ச்சியைப் பின் பற்றி நமது முஸ்லிம் சகோதரர்களும், பொதுவாக மதத்தை ஒழிக்கவேண்டும் என்றும் திருத்தவேண்டும் என்றும் பேசிவருவது அர்த்தமில்லாத பேச்சாகும். பிறமதத்திலுள்ளவர்கள் தங்களுக்குள் செய்யும் சீர்திருத்தங்களுக்கு இஸ்லாமியச் சட்டங்களையும், திட்டங்களையும் அஸ்திபாரமாகக் கொள்கின்றனர். இதைப்பற்றிய விபரம் இவ்விதழில் "இஸ்லாத்தின் விசேஷங்கள்" என்ற மகுடத்தின் கீழுள்ள வியாசத்தில் தெளிவுபடக் கூறப்படுகிறது. ஆகவே, முஸ்லிம்கள் பிறரைப் பின்பற்றி தங்களது மதத்தின்பால்கண் மூடித்தனமாக குறை கூறுவதை விட்டொழித்து, இஸ்லாம் மதம் ஏற்படுத்தியுள்ள திட்டமென்ன, சட்டமென்ன

வென்பதை உணர்ந்து, அதன்படி நடக்க முயலுவார்களாயின் அதுவே அவர்களுடைய உரிமைகளைப் பரிபூரண மாக அளிக்க வல்லதாக இருக்கிறது. இப் பொழுது முஸ்லிம்களிலுள்ள குறை என்னவெனில், முஸ்லிம்களில் பலர் தங் களது இஸ்லாமிய சட்டதிட்டங்களின்படி நடக்காமலும், அவைகளை உணர்ந்து கொள்ளாமலும் இருப்பதேயாகும். இக் குறையை நிவர்த்திக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்யும் பக்ஷத்தில் முஸ்லிம் சமூகம் சகலபாக்கியங்களுடன் இன்புற் றிருக்கும் என்பதை தெறிவித்துக் கொள்கிறோம்.

---

## நுபுவ்வத்தா? அல்லது பரிகாசமா?

ஒரு பிரபுவினிடம் சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்த மடயனொருவன் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் சமை யல் செய்தவுடன் அவைகளை ருசிபார்ப்பதாகக் கூறி முக்கியமானவைகளை முதலில் விழுங்கி விடுவது வழக்கம். இந்நிலைமையில் ஒருமுறை அவன் தனது எஜமானனுக்கு முழுக்கோழி யொன்றைப் பொறித்தான். அதுபொழுதும் அவனுடைய பிறவிக்குணம் அவனை விட்ட பாடில்லை யாகையால், அக்கோழியின் கால் ஒன்றை ருசி பார்த்துவிட்டு எஜமான் சாப் பிட வந்தபோது முழுக்கோழியையும் எஜமா னிடம் கொண்டுபோய் வைத்தான். பொறிக்கப் பட்ட முழுக்கோழியில் ஒருகால் மட்டுமில் லாமலிருப்பதைப் பார்த்த எஜமான் பரிகாச மாக "எல்லாக் கோழிகளுக்கும் இரண்டு கால்க ளிருக்கின்றன; இது எந்த ஜாதிக் கோழி? இதற்கு ஒரு கால்மட்டிலும் இருக்கிறது" என்று கூறினன்.

மடப்பயலும் கெட்டிக்காரனாகவும் சமயத் திற்குத் தகுந்த விதமாகப் பேசும் வன்மை யுள்ளவனாகவு மிருந்ததால் எஜமான் கூறியவை களுக்கு மறுமொழியாக "எஜமானே! சாதா ரணமான கோழிகளுக்கு இரண்டு கால்கள் உண்டு என்பது மெய். ஆனால், நான் தங்களுக் காக நல்ல ஜாதிக் கோழியைப் பார்த்து வாங்கி னேன், அந்த ஜாதிக் கோழிக்கு ஒரு கால்தான் இருப்பது வழக்கம்" என்று பதில் கூறினன். இந்த பதிலைக் கேட்டதும் எஜமான் புன்சிறிப் புடன், இந்த ஜாதிக் கோழிகளிலெதுவும் உல கத்திலிருக்கிறதா? அல்லது இது ஒரு கோழி தானா? என்று வினவினன். அதற்கு அந்த மடயன் "இந்த ஜாதிக் கோழிகள் கிடைப்பது அபூர்வம் என்பதிற் சந்தேகமில்லை ஆயினும், அண்டிரண்டா பக்ஷியைப்போல் உலகில் இல் லாத பக்ஷியல்லவாதலால் ஒரு சமயம் நான் தங் களுக்கு இம்மாதிரியான ஒற்றைக்கால் கோழி யைக் காண்பிப்பேன்" என்று பதிலளித்தான்.

ஆகவே, மடயன் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டே இருந்து ஒருநாள் அவன் தனது எஜமானுடன் கோச் வண்டியில் போய்க்கொண் டிருந்தபோது ஒரு கோழி ஒற்றைக் காலில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே, எஜமானனை நோக்கி "பிரபு! இதோ பாருங்கள் ஒற்றைக்கால் கோழியை" என்ற னன். எஜமானும் தமாஷ்காரனாதலால் உடனே, அவன் கோழியை சூ என்று விரட்டினன். உடனே, கோழி மற்றொரு காலையும் பூமியில் ஊன்றிக்கொண்டு ஓடிற்று. பிறகு, மடயனைப் பார்த்து, "இதோ பார் இதுவும் இரட்டைக் கால் கோழியாயிற்று" என்று கூறினன்.

மடயனும் குறைந்தவனல்ல வாதலின், உடனே எஜமானிடம், "இந்த ஜாதிக் கோழி கள் இப்படித்தான் செய்கின்றன; தாங்கள் அந் தக் கோழியைப் புசிக்கும்போது இப்பொழுது சொன்னதுபோல் "சூ" என்று கூறி இருந் தால் மறைத்து வைத்திருந்த மற்றொரு காலை யும் அது வெளிப்படுத்தி இருக்கும்" என்ற னன். மடயன் கூறிய சாதுர்யமான பதில் எஜமானனைச் சந்தோஷப்படுத்தி விட்டதால் அவனுக்கு 100 ரூபாய் இனமளித்தான்.

மிர்ஜாயிகளும்கூட இந்த மடயனின் சிஷ்யர் கள்போல் தோன்றுகிறது. குவெட்டாவிலேற் பட்ட பூகம்பம்காதியானீ முத்தநப்பியின் நுபுவ் வத்துக்கு அடையாளம் என்று அன்று முதல்

காதியானிகள் கூறிவருகின்றனர். ஆகவே, காதியானிலுள்ள அத்தஜ்னு (அல்பஜ்னு) பத்திரிகையும், லாகூரிலுள்ள பைகாமேஜ்ங்(பைகாமேஸுல்ஹு) பத்திரிகையும் இச்செய்தியைப் பிரபலபடுத்துவதற்காக தன்னுடைய பத்திரிகையின் பல பத்திகளை ஒதுக்கி வைத்திருக்கின்றன போலும். சிற்சில இடங்களில் மிர்ஜாயிகள் இதைத் துண்டு பிரசுரமாகவும் அச்சிட்டு விளம்பரப்படுத்தி அந்த மடயன் கூறியதுபோல் கோழிக்கு ஒருகால்தானிருக்கிறது என்று வற்புறுதி வருகின்றனர்.

கியாமாத்து நாள் சமீபித்து விட்டதற்கு அடையாளங்கள் சொல்லப்பட்ட இடங்களில் பூகம்பங்களைப்பற்றியும் ஹதீது கிரந்தங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதுடன் நியாயத் தீர்ப்புநாளின் அதிர்ச்சி என்று திருகுர்ஆனிலும் கூறப்பட்டிருக்கிறது. மிர்ஜா குலாம் இவைகள் சம்மந்தமாக முன்னறிவிப்புச் செய்து இருப்பது ஒரு பிரமாதமான காரியமன்று. இவ்விதமான விஷயங்களை அறபி கற்கும் சாமான்ய மாணவன் கூடக் கூறமுடியும்.

நல்லது போகட்டும், இதை விட்டுவிடுங்கள்! மிர்ஜாகுலாம் கூறி இருக்கிற முன்னறிவிப்புகள் அவருடைய வார்த்தைகளின்படி சரியாக நிறைவேறி இருக்கிறதா இல்லையா? என்று பார்ப்போம். மிர்ஜாசாஹிப் கூறி இருக்கும் வாக்கியம் வருமாறு :—

" நான் உண்மையானவன் என்று சாக்ஷியம் கூறும்பொருட்டு அல்லாஹுதஆலா பயங்கரமான 5 பூகம்பங்களை ஒன்றுக்குப்பின் ஒன்றுகக் கொஞ்சங் கொஞ்சம் இடைவிட்டு உண்டாக்குவான் என்றும், இதைப் பார்த்து ஜனங்கள் இவ்வடியேனின் உண்மையையும், நான் அவனிடமிருந்து அனுப்பப்பட்டவனென்பதையும் தெரிந்துகொள்ளட்டும் என்றும் இறைவன் கூறி இருக்கிறான். இந்த பூகம்பம் ஒவ்வொன்றிலும் ஒரு பிரகாசமுண்டாகும்; அதைப் பார்ப்பதால் அல்லாஹுதஆலாவின் ஞாபகம் வந்துவிடும்; இருதயங்களில் அவனைப் பற்றிய பயமுண்டாகிவிடும்; இதைப் பார்ப்பதால் மனிதன் பிரமையடைந்து விடுவான்"

என்று "தஜல்லியாத்தே இலாஹிய்யாவில்" கூறி இருக்கிறார்.

ஆனால், மிர்ஜா குலாமின் வாணாளில் ஒரு முறைதான் பூகம்பமுண்டாயிற்று, பாக்கியுள்ள நாலுபூகம்பங்களும் உண்டாகிவிடும் என்ற மேலெண்ணத்திலே அவர் மடிந்துபோனார்.

ஆனால், காதியானிலுள்ள பாவாஜீ "ஒன்றுக்குப்பின் ஒன்று கொஞ்சம் இடைவிட்டு" என்ற வாக்கியத்திற்கு, கியாமத்து நாள்வரை உலகில் எந்த இடத்தில் எத்தனை பூகம்பங்கள் வருமோ அத்தனையும்தான் அதன் கருத்து என்று தாவாச் செய்கிறார். எனினும், மிர்ஜா குலாம் தன்னுடைய முன்னறிவிப்பு என்ற படகைத் தனது கையாலேயே மூழ்கடித்திருப்பதற்கு இந்த மிர்ஜாயிகள் என்னயுக்தி செய்கிறார்களென்று வினவுகின்றோம். "இந்தப்பூகம்பங்கள் என்னுடைய வாணாளிலேயே வராவிட்டால் என்னை நபியென்று ஒப்புக்கொள்ளவேண்டியதில்லை; என்னைப் பரிகாசக்காரன் என்று கூறவேண்டும்" என்பதாகக் கூறி இருக்கிறார். அவர் கூறி இருக்கும் வாக்கியம் வருமாறு :—

" இப்பொழுது நன்றாகக் காதுகொடுத்துக் கேட்டுக்கொள்ளுங்கள். வரப்போகிற பூகம்பங்களைப்பற்றி நான் கூறி இருக்கிற முன்னறிவிப்பில் கால நிர்ணயம் செய்யப்படவில்லையே என்று நினைப்பது சுத்ததவறு. அவ்வாறு நினைப்பது முன்யோசனை யின்மையும் அவசர புத்தியுமேயாகும். ஏனெனில், "வஹீயே இலாஹி"யானது எனக்குப் பலமுறை அறிவிக்கப்படிருக்கிறது; அந்த முன்னறிவிப்பு எனது வாணாளில் எனது தேசத்திலேயே என்னுடைய நன்மைக்காகவே வெளியாகும்; அதற்கு முன்னும் பின்னும் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் இருக்கிற சாதாரண விஷயங்களாகி விட்டால், கியாமத்து நாளின் அடையாளங்களை வெளிபாக்கும்படியான அற்புதமாக அது இல்லையாயின் அதை நீங்கள் முன்னறிவிப்பு என்று நம்பாதீர்கள். அதைப் பரிகாசமென்று கருதுங்கள் என்பதாக நான் ஒப்புக்கொள்கிறேன்" என்று தம்முடைய "பராஹீனே அஹ்மதியா" 5-வது பாகத்தில் கூறி இருக்கிறார்.

எனவே, மிர்ஜாசாஹிபின் முன்னறிவிப்பின்படி அவருடைய ஜீவியகாலத்தில் ஒரு முறைதான் பூகம்பமுண்டாயிற்று. பயங்கரமான நான்கு பூகம்பங்கள் அவருடைய வாணாளில் உண்டாகவில்லை. ஆகவே, மிர்ஜா குலாமின் கூற்றுப்படி அவர் நபியல்ல; "பரிகாசக்காரர்" என்றே அவரைக் கூறவேண்டும்.

### இஸ்லாத்தின் சத்தியத்தன்மை.

காதியான் முத்தநப்பியின் உண்மையைப் பற்றி மிர்ஜாயிகள் கூறும் அடையாளங்களைப் பார்த்து சிறுபையன்களுக்குக் கூடச் சிரிப்பு வந்து விடுகிறது. எங்கேனும், ஒரு முஸ்லி முக்கு தலைவலி வந்துவிட்டால் உடனே மிர் ஜாயிகள், "இதோ பாருங்கள், மிர்ஜாவைக் கெட்டவர் என்று கூறியதற்கு என்ன தண் டனை கிடைத்தது?" என்று கூறிவிடுகிறார் கள். எதோ ஒரு முஸ்லிமின் காலில் ஒரு முட்குத்தினால் உடனே அவர்கள் சந்தோஷத் தால் கூத்தாட ஆரம்பித்து விடுகிறார்கள். இது மிர்ஜாயியத்தை எதிர்த்ததால் வந்த வினை என்று கூறிவிடுகிறார்கள். எங்கேனும் ஓரிடத் தில் பிரவாகமோ அல்லது பூகம்பமோ எற் பட்டு விட்டால் அதனை மிர்ஜாவின் நுபுவ்வத் திற்கு அடையாளமென்று கூறிவிடுகிறார்கள். ஆனால், நாம் இன்று ஒரு சம்பவத்தைப்பற்றிக் கூறப்போகிறோம் அதனைப் பார்ப்பவர்கள் இது இஸ்லாத்தின் சத்தியத் தன்மைக்கும், மிர்ஜாயியத்தின் பொய்க்கும் பகிரங்க அடை யாளமென்று முடிவு செய்வார்கள்.

"டில்லியிலுள்ள அஹ்மதியா அஞ்சுமனின் காரியதரிசி மிகவும் படாடோபமாக ஒரு விளம் பரம்செய்தார். அதில் "குவட்டாபூகம்பம் மிர்ஜாசாஹிபின் நுபுவ்வத்தை அறிவிக்கும் பகி ரங்க முஅஜிஸா வாதலின், எல்லா முஸ்லிம்களும் மிர்ஜாசாஹிபை நபியென்று உடனே ஒப்புக் கொண்டு விடவேண்டும்; இல்லையேல், அவர்கள் எல்லோரும் அழிந்தொழிந்து போவார்கள்" என்று அவ்விளம்பரத்தில் தாவாச் செய்திருந் தார். அல்லாஹுத ஆலாவின் நாட்டத்தைப் பாருங்கள்! அந்த விளம்பரத்தைப் பிரசுரித்த அடுத்த நாளிலேயே இந்த நோட்டீசைப் பிரசுரித்த இவர் டிராம்காரினால் அடிபட்டு இவ்வுலகை விட்டுச்சென்று விட்டார்".

---

## மிர்ஸாயிச் செய்தி

### மிர்ஸாவின் மீது நடவடிக்கை

லாகூர் எங்மென் முஹம்மதிய்யா அஸ்ஸோஸி யேஷனின் கூட்டமொன்று நடை பெற்று அதில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. பஞ்சாப் அமீருஷ்ஷரிஅத் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்கள் சம்பந்தமாக குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ் டர் ஜி. டி. கோஸ்லா செய்த தீர்ப்பை லாகூர் எங்மென் முஸ்லிம் அஸோஸியேஷனின் இக் கூட்டம் பாராட்டுகிறது. சரித்திரப் பூர்வமான இத்தீர்ப்பு நீதிநியாயம் நேர்மை நிறைந்ததெனக் கருதுகிறது. மேலும் மிஸ்டர் ஜி. டி. கோஸ்லா தமது தீர்ப்பில் ருஜூப்பித்துக் காட்டி இருக்கிற சத்தியத்தை வெளியிடும் தன்மையும் துணிச்சலும் பாராட்டத்தக்கவை என இக் கூட்டம் கருதுகிறது.

2. இத்தீர்ப்பில் வெளியாகி இருப்பதை ஆதாரமாகக்கொண்டு, முஹம்மது அமீனைக் கொலைசெய்த பத்தஹ் முஹம்மதின்மீது பஞ் சாப் கவர்ன்மெண்ட் வழக்குத் தொடுத்து தன் னுடைய நீதியை நிலை நிறுத்தும்படி பஞ்சாப் கவர்ன்மெண்டை இக்கூட்டம் கேட்டுக் கொள் கிறது.

3. சக்கிரவர்த்தி பெருமானின் அரசாங் கத்திலுள்ள முக்கியமான ஒரு அங்கத் தினர் என்ற முறையிலேயே மிஸ்டர் ஜி. டி. கோஸ்லா இத்தீர்ப்பை அளித்திருப்பதால், இத்தீர்ப்புக்கு விரோதமாகமிர்ஜாயி ஜமாஅத்து கள் செய்துவரும் கூச்சல் சக்கிரவர்த்தி பெருமானை நேராக அவமதிப்பதாகும் என்று இக்கூட்டம் கருதுகிறது.

4. மேலே கண்ட தீர்மானங்களின் நகல் களை ஹிஸ் எக்ஸலன்ஸி இந்திய இராஜப்பிரதி நிதி அவர்களுக்கும், ஹிஸ் எக்ஸலன்ஸி பஞ் சாப் கவர்னர் அவர்களுக்கும், லாகூர் ஹை கோர்ட் ஆனரபில் சீப் ஜஸ்டிஸ் அவர்களுக் கும் அனுப்பவேண்டும்.

5. மௌலானா ஜுபர் அலிகான், "ஜமீந் தார்" பத்திரிகை, "இஹ்ஸான்" பத்திரிகை, அகில இந்திய அஹ்ரார்சபை ஆகியவைகளின் மதிக்கத்தக்க ஊழியத்தை இக்கூட்டம் பாராட்டுகிறது.

## பங்கா முஸ்லிம் மகாநாடு

பங்காவிலும், பங்காவைச் சுற்றியுள்ள கிராமங்களிலுமுள்ள முஸ்லிம்களின் மகாநாடு பங்கா ஜாமிஆ மஸ்ஜிதில் நடைபெற்று அதில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின :—

1. குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் ஜி. டி. கோஸ்லா அவர்களின் தீர்ப்பின் மூலம், மிர்ஜா பஷீருத்தீன் மஹ்முது குற்றமற்றவர்களைக் கொலை செய்வித்திருக்கிறார் என்றும், வீடுகளுக்கு நெருப்புவைக்கும்படிச் செய்திருக்கிறார் என்றும், மிர்ஜாயி அல்லாதவர்கள் மீது காரணமில்லாமல் கொடுமை செய்திருக்கிறார் என்றும், முக்கியமாக முஸ்லிம்கள்மீதும், பொதுவாக எல்லா ஜனங்களின் மீதும் அநியாய அக்கிரமங்களைச் செய்வித்திருக்கிறார் என்றும் தெளிவாகத் தெரியவருகிறது. அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த ஒரு உத்தியோகஸ்தர் தெளிவாகவும், தைரியமாகவும், துணிவாகவும் செய்திருக்கும் ஜட்ஜ்மெண்டிலிருந்து மேலே கண்ட விஷயங்கள் அரசாங்கத்திற்கு வெளியாகிவிட்டதால், அரசாங்கம் தனது பிரஜைகளைப் பாதுகாக்கும் முகத்தான், மிர்ஜாபஷீருத்தீன் மஹ்மூதுக்கு வளர்ந்து கொண்டுவரும் துணிச்சல்களைத் தடுப்பதற்காக பிரயோஜனப்படக்கூடிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பங்காவிலும் அதற்குச் சுற்று வட்டகையிலுமுள்ள முஸ்லிம்களைக் கொண்ட இப்பொதுக் கூட்டம் பஞ்சாப் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அவ்வாறு செய்யாவிடில் அதனாலேற்படும் சகல பலன்களுக்கும் அரசாங்கம் தான் பொறுப்பாளியாகும் என்பதையும் அறிவித்துக்கொள்கிறது.

1. ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்கள் விடுதலையைப்பற்றி பங்காவிலும் அதற்குச் சுற்று வட்டகையிலுமுள்ள முஸ்லிம்களின் இம்மகாநாடு மனப்பூர்வமாக வாழ்த்துக் கூறுகிறது. இந்தப் பித்னவை ஒழிக்கும் விஷயத்தில் அவர்களுக்கு கிருபை செய்ய வேண்டும் என்று அல்லாஹுத ஆலாவின் தர்பாரில் பிரார்த்தனை புரிகின்றது.

3. இந்துஸ்தானத்திலுள்ள பிரபல பத்திரிகையான "ஜமீந்தார்" தினசரியின் ஊழியத்தை முஸ்லிம்களின் இம்மகாநாடு உள்ளன்புடன் பாராட்டுகிறது. இப்பத்திரிகை நீடூழி வாழவும், இந்துஸ்தானத்திலுள்ள இதர சகோதரர்களும் இப்பத்திரிகையால் பிரயோஜனம் பெறவும் இறைவன் 'தௌபீக்' செய்யவேண்டு என்றும், இப்பத்திரிகைவாயிலாய் ஊழியம் செய்பவர்களுக்கு இன்னும் அதிகமான பரிசுத்தத்தன்மையை அளிக்கவேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறது.

4. 21-6-1935-ல் பிரசுரமான "ஸ்டார் ஆப் இந்தியா" பத்திரிகையில் "பிரமிக்கத் தக்க தீர்ப்பு" என்று மகுடமிட்டு எழுதி இருக்கும் வியாசத்தில், செஷன்ஸ் ஜட்ஜ் கூறி இருக்கும் தீர்ப்பு சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தினுடையவும் மிர்ஜாயிகளினுடையவும் கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பதை முஸ்லிம்களின் இம்மகாநாடு முற்றிலும் ஆதரிக்கிறது. இவ்வியாசத்தை எழுதியவரின் இவ்வபிப்பிராயம் நீதிவான்களுக்கு சிறந்த வழியைக் காண்பிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே "ஸ்டார் ஆப் இந்தியா"வின் நியாயமான இவ்வபிப்பிராயத்திற்காக வாழ்த்துக் கூறுகிறோம்.

## பஹவல்பூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் தீர்ப்பு

பஞ்சாப் மாகாண அமீருஷ்ஷரீஅத் ஜனப் மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் சாஹிப் புகாரி அவர்களது அப்பீலுக்கு குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் ஜி. டி. கோஸ்லா 6-6-35-ந் தேதி அளித்த தீர்ப்பின் விபரம் ஜூன்மீ 12உ வெளியான தினசரி பத்திரிகைகளில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அத்தீர்ப்பு மிகவும் நேர்மையானதாக இருப்பதன் காரணமாக அது புத்தக ரூபமாக அச்சிடப்பட்டு மிகவும் சொற்ப கிரயத்திற்குக்கொடுக்கப்பட்டுவருகிறது. இதே மாதிரியான மற்றொரு வழக்கு இவ்வருஷத்தின் ஆரம்பத்தில் பகவல்பூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் முன்ஷீ முஹம்மது அக்பர்கான் அவர்களது கோர்ட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை, இஸ்லாத்திற்கும் மிர்ஜாயியத்திற்குமிடையிலுள்ள வழக்கு என்று கூறுவது பொருந்தும். படித்த அறிவாளியான ஜட்ஜானவர் மிர்ஜாயி ஜமாஅத்தின் சாக்ஷிகளுக்கு விரோதமாக ஜனப் மௌலானா ஸெய்யித் முர்த்தஜா ஹுஸைன் சாஹிப், மௌலானா ஸெய்யித்

அன்வர்ஷாஹ் சாஹிப் ஆகியவர்களின் சாக்ஷியத்தை ஊர்ஜிதம் செய்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கணவன் முர்த்தத்தாகி விட்டதாக முடிவுசெய்து, வாதிக்கும்பிரதிவாதிக்குமிடையிலேற்பட்டிருந்த விவாக பந்தத்துவத்தை "பஸ்கு" (பிரித்து) செய்து விட்டார். இத்தீர்மானத்தின் அந்தஸ்து மிகவும் உயர்ந்தது. மிர்ஜாயீ ஜமாஅத்தார் இஸ்லாத்தின் வட்டத்திற்குப் புறம்பானவர்களென்றும், இந்தியாவிலுள்ள சிறுபான்மை வகுப்புகளைப்போல் அவ்வகுப்பைத் தனிப்பட்ட ஒரு சிறுபான்மை வகுப்பாக நிர்ணயித்துவிட வேண்டுமென்றும் இஸ்லாமிய உலகம் பிரிட்டிஷ் அரசாங்கத்திலிடம் கோரிக்கொண்டிருக்கிறது. ஒரு இஸ்லாமிய சமஸ்தானத்திலுள்ள திறமையான ஒரு நீதிபதி செய்திருக்கிற இந்த தீர்ப்பு இக்கோரிக்கைக்கு முக்கியமான அம்சமாக இருந்துவருகிறது. ஆகவே, முக்கியமானதும், ஆதாரத்துடன் எழுதப்பட்டதுமான இந்த முபாரக்கான தீர்ப்பு புத்தக ரூபத்தில் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது லௌகிக வைதீக காரியங்களுக்கு மிகவும் ஏற்றதாகும்.

பகவல்பூர் சமஸ்தான ஷெய்குல் ஜாமிஆ மௌலானா குலாம் முஹம்மது சாஹிப் அவர்களுக்கு கடிதமெழுதி அந்த நடவடிக்கை சம்மந்தமான முழுவிபரங்களையும் தருவித்து இத்தீர்மானத்தைப் புத்தக ரூபத்தில் அச்சிட்டுப் பிரசுரித்து இருலோகத்திலும் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளும்படியாக லாகூரிலுள்ள இஸ்லாமிய அஞ்சுமன்களையும் முஸ்லிம் பப்ளிஷர்களையும் வேண்டிக் கொள்வதோடு இத்தீர்மானத்தின் ஒரு நகலை "ஜமீன்தார்" பத்திராசிரியருக்கு அனுப்பி, அதன் மொழிபெயர்ப்பைக் கொஞ்சங் கொஞ்சமாக ஷை பத்திரிகையில் பிரசுரஞ் செய்யும்படிச் செய்வது பிரயோசனமளிப்பதாக இருக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## சௌத்ரீ ஸர். ஜுபருல்லா கானின் முயற்சி

காதியானிலிருந்து நம்பத்தகுந்த விதமாக அடியிற்கண்ட செய்தி கிடைத்திருப்பதாய் லாகூர் அகில இந்தியா அஹ்ரார் சபை தப்லீக் பிரிவின் காரியதரிசி அறிவிக்கிறார்:—

"சென்றவாரம் சௌத்ரீ ஸர். ஜுபருல்லா காதியான் வந்து மிர்ஜா பஷீருத்தீனிடத்தில் 3 மணி நேரம் தங்கி இருந்தார். சௌத்ரீ ஸர். ஜுபருல்லாவின் வருகை மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரியின் அப்பீல் வழக்கில் குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் ஜி. டி. கோஸ்லா அளித்த தீர்ப்பு சம்மந்தமானதென்றும், இது சம்மந்தமாக இந்தியா கவர்ன்மென்டின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களிடம் சம்பாஷணை செய்யப்பட்டிருப்பதாகவும், இத்தீர்மானத்தை ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யும்படி பஞ்சாப் கவர்ன்மெண்டைத் தூண்டி இருப்பதாகவும் தமது ஜமாஅத்துக்கு சௌத்ரீ ஸர். ஜுபருல்லாகான் உறுதிகூறி இருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

சௌத்ரீ ஜுபருல்லாகான் காதியானுக்கு வந்துவிட்டுப் போனபின் சிம்லாவில், பஞ்சாப் கவர்னரிடம் 2 மணி நேரம் இத்தீர்ப்பு சம்மந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார் என்றும், பஞ்சாப் கவர்ன்மென்டின் சார்பாக இத்தீர்மானத்தை ஆக்ஷேபித்து அப்பீல் செய்விக்க வேண்டுமென்று பஞ்சாப் கவர்னரை வற்புறுத்திவிட்டார் என்றும் காதியானிலுள்ள பொறுப்புவாய்ந்த இடத்தில் மிகப் பெருமையாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. ஸர் ஜுபருல்லாவும் பஞ்சாப் கவர்னரும் சம்பாஷணை செய்ததன் பலனாக இத்தீர்ப்பு பரிசீலனை செய்யப்பட்டு பஞ்சாப் கவர்ன்மெண்டாரால் கூடிய சீக்கிரம் மனு தாக்கல் செய்யப்படுமென்று தெரியவருகிறது. "ஜமீன்தார்"

---


## முக்கிய கவனிப்பு.

எங்களிடம் குர்ஆன் ஷரீப், அறபுத்தமிழ், சுத்தத்தமிழ், உர்து முதலிய பற்பல பாஷைகளிலுமுள்ள அநேக கிதாபுகளும், வழிகெட்ட காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கும் பற்பல நூல்களும் சகாயமான விலைக்கு கிடைக்கும். விபரம் தெரிந்துகொள்ள விருப்பமுடையோர் தபால் செலவுக்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி எங்கள் விபரமான கேட்லாக்கைப் பெற்று பயன்பெறுங்கள். தேவைக்கு உடனே ஆடர் செய்யுங்கள்.

K. M. மௌலவீ சுல்த்தான் அஹ்மது ஆலிம் சாஹிப்,
1/222 அங்கப்ப நாய்க்கன் தெருவு,
ஜி. டி. மதராஸ்

# காதியானிக் கொள்கையும் முஸ்லிம்களும்

மௌலானா ஜபர்அலிகான் அவர்கள் சென்ற 25 வருஷ காலமாக காதியானி பித்னா சம்பந்தமான கெடுதிகளை மக்கட்கு எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார்கள். இந்த பித்னாவை வேரறக் களைவதற்குள்ள தக்க உணர்ச்சியை முஸ்லிம்களிடம் உண்டுபண்ணுவதற்கு அந்த எழுத்துகள் போதுமானவைகளாக இருந்தன. ஆனால், தனிப்பட்ட முறையில் செய்த இம்முயற்சி அந்த பித்னாவை ஒழிப்பதற்குப் பிரயோஜனமளிப்பதாக இல்லை. இதுசம்பந்தமாக பஞ்சாப் முஸ்லிம்கள் ஒன்றுகூடி ஏதேனும் தக்கமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பல வருஷங்களாக முஸ்லிம் பொதுஜனங்கள் அபிப்பிராயந் தெரிவித்து வந்தார்கள். ஆனால், அதனைப் பலமாகத் தூண்டக்கூடிய காரணமெதுவுமேற்படவில்லை. கடைசியாக முஸ்லிம்களின் உள்ளத்திலிருந்த இவ்வுணர்ச்சி கொதிப்படைந்து காதியான் தப்லீக் மகாநாடு என்ற வடிவத்தில் வெளிவந்தது.

இக்கான்பரன்சு நடைபெறப் போவதாக அறிக்கை வெளியிடப்பட்டபோது காதியானிச் சாமியின் பூசாரிகள் கொல்லென நகைத்தனர். அசத்தியவான்கள் சத்தியவான்களைப் பார்த்து இம்மாதிரி நகைப்பது தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் வழக்கமேயாகும். ஆகவே, காதியானில் முஸ்லிம்களின் மகாநாடு நடைபெறுவது அசாத்தியமான காரியமாகும் என்று அக்கூட்டத்தார் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

"முபாஹலா" பத்திராசிரியர் மௌலவீ அப்துல்கரீம் சாகிபுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் காதியானில் நிகழ்ந்த கஷ்டசங்கடங்களையும் தொந்தரைகளையும், காதியானியத்துக்கு உலகில் செல்வாக்குண்டாகுவதற்காகக் கையாளப்பட்டுவரும் பலாத்கார முயற்சிகளையும் பார்த்த காதியானீ வாசிகளான ஏழை முஸ்லிம்களிலும், சீக்கியர்களிலும், ஹிந்துக்களிலும் காதியானில் தப்லீக் மகாநாட்டைக் கூட்டுவதற்காக இடம் கொடுத்துதவ தைரியம் வரவில்லை. இறுதியாக ஒரு சீக்கிய கனவான் இவ்விஷயத்தில் துணிவுகொண்டு தப்லீக் மகாநாட்டைக் கூட்ட தமக்குச் சொந்தமான ஒரு மனையிடத்தை அளிக்க முன்வந்தார்.

ஆனால், காதியானில் தப்லீக் மகாநாடு நடைபெறுவது காதியானீ கலீபாவுக்கு அவமானமேற்படுவதுடன் அவருடைய ஆதிக்கத்திற்குப் பங்கமேற்படுமன்றோ? ஆதலால், அதை அவர் எங்ஙனம் சகித்திருக்கமுடியும்? ஆகவே, அவர் காதியான்கிராமத்துக்குள் மகாநாட்டைக் கூட்டவிடலாகாது என்று கூறினர். உடனே, அக்கூட்டத்தார் தங்களிலுள்ள பெருந் திரளான ஜனங்களை ஒன்றுதிரட்டி மகாநாட்டைக் கூட்டுவதற்காக நிச்சயிக்கப்பட்டிருந்த மனையிடத்தைச் சுற்றிலும் ஒரே இரவில் சுவரெழுப்பிவிட்டனர். இதனால், அந்த இடத்தில் மகாநாட்டைக் கூட்டுவதற்கு வசதி இல்லாது போயிற்று.

எவ்வாறாயினும், கான்பரன்சு நடைபெற்று பஞ்சாபிலுள்ள பற்பல பகுதிகளிலுமிருந்தும் முஸ்லிம்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள காதியானுக்கு வந்தார்கள். இதனால், காதியான் கலீபா அளவற்ற கவலையும் விசனமுமடைந்தார். இறுதியாக, இக்கான்பரன்சில் பிரசங்கம் செய்தவர்களில் எவர்மீதேனும் நடவடிக்கை எடுத்து அவரை கஷ்டத்திலாக்கி விடவேண்டுமென்றும், இதைப்பார்த்து இனிமேல் முஸ்லிம்களில் எவரும் காதியானியத்துக்கு விரோதமாக வாய்திறக்கக்கூடாது என்றும் முடிவுசெய்தனர். இதற்காக, கலீபாசாஹிப் அதிகாரிகளின் வாசற்படியைக் காத்தார்; அவர்களிடம் கெஞ்சிக் கேட்டார்; தமது தந்தை பிரிட்டிஷாரை ஆதரித்து 50 அலமாரி நிறம்ப எழுதிய விளம்பரங்களைச் சொல்லிக்காண்பித்தார்; மௌலானா அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்கள்மீது வழக்குத் தொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இதன்படி வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே லூதியானாவிலும், ஸஹாரன்பூரிலும் மற்றிரு மகாநாடுகள் நடைபெற்றன.

இவ்வழக்கு விசாரணையின்போது காதியான் கலீபா சாக்ஷியம்கூறக் கோர்ட்டுக்கு வந்தார். அவருக்கு மாஜிஸ்டிரேட் ஆசனம் கொடுக்க அனுமதித்தார். மௌலானா ஸெய்யித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்கள் அவ்வழக்கில் ஸ்டேட்மென்ட் தாக்கல் செய்தபோது நின்று

கொண்டு தமது வாக்குமூலத்தை பதிவுசெய்ததைக்கண்டு காதியானி கலீபாவும், அவரது சிஷ்யர்களும் சந்தோஷங் கொண்டாடினர். பிறகு, மௌலான ஸெய்பித் அத்தாவுல்லா ஷாஹ்புகாரி அவர்களுக்கு மாஜிஸ்டிரேட் 6 மாத கடினகாவல் தண்டனை விதித்ததைக் கேட்டு காதியானில் நெய்விழக்கேற்றி வைத்தனர். "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சாயலாகவும் புரூஜியாகவும், அவர்களுடைய முழுதோற்றமாகவுள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஜ்றத் மிர்ஜா குலாம் அஹ்மதுசாஹிப் அவர்கள் அந்தஸ்தில் அத்தாவுல்லாஷாஹ் தூஷணையான வார்த்தைகளை உபயோகித்ததற்கு என்ன தண்டனை கிடைக்குமென்பது தனக்கு முன்பே தெரியும்" என்று கூறி தனக்கு இல்ஹாம் வருவதாகத் தமது சிஷ்யர்களிடம் காதியானி கலீபா அறிவித்துக்கொண்டார்.

ஆனல், செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில், மௌலான அவர்களின் 6 மாத தண்டனை 15 நிமிஷங்களாக மாற்றப்பட்டது. அத்துடன் வெகுகாலமாக காதியானிக்குள் திரைமறைவில் வைக்கப்பட்டிருந்த எல்லா இரகசியங்களும், மறைவான செய்திகளும் அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டும் விட்டது. குர்தாஸ்பூர் செஷன்ஸ் ஜட்ஜின்முன் மூடலாகவும் பொதுவாகவும் சமர்ப்பிக்கப்பட்ட சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் ஆதாரமாகக்கொண்டு அவர் காதியானியத்தின் இரகசியங்களனைத்தையும் உணர்ந்துகொள்ளத்தக்க ஆற்றலையும் சக்தியையும் இறைவன் அவருக்கு அளித்துவிட்டானுகையால் மிகவும் தைரியமாக காதியானிலுள்ள உண்மை நிலைமைகளைத் தமது தீர்ப்பில் பட்டவர்த்தமானமாகக் கூறிவிட்டார். இத்தீர்ப்பை ஒருமுறை படிக்கும் எவரும் காதியானிக்கொள்கைமீது நிரந்தரமாக வெறுப்புக்கொள்வது மட்டுமின்றி காதியானின் மூடு மந்திரத்தை முறிப்பதற்காக துணிவும் அவர்களது இருதயத்தில் உண்டாகிவிடும்.

இப்பொழுது முஸ்லிம்களின் நான்காவது கான்பரன்சு லயால்பூரில் நடைபெற்றிருக்கிறது. இக்கான்பரன்சு இதற்குமுன் நடைபெற்ற மூன்று கான்பரன்சுகளின் பலன் என்றே கூறவேண்டும். இப்பொழுது நிலைமை முற்றிலும் வேறுவிதமாக மாறிவிட்டது. முதலாவது கான்பரன்சு கூடும்போது காதியானீ கலீபா மிகப் பலமான நிலைமையில் முறுக்காக இருந்தாராகையால் முஸ்லிம்களுக்குப் பல பயமுறுத்தல்கள் செய்துகொண்டிருந்தார். சில சமயங்களில் அரசாங்கத்திற்குத் தமது ஊழியங்களையும், தமது பாபாவின் ஊழியங்களையும் சொல்லிக் காட்டி, "அரசாங்கம் எங்களுடைய நிகரற்ற ஊழியங்களையும் இணையற்ற ராஜபக்தியையும் மதிக்கவில்லையாயின் நாங்கள் காங்கிரசுடன் சேர்ந்துகொள்வோம்" என்று கூறிக்கொண்டிருந்தார். ஆனல், இப்பொழுதோ கலீபா சாஹிபின் வாயில் நா, இல்லையோ என்று நினைக்கும்படியான அளவிற்கு மௌனமாக இருக்கிறார். காதியான்சர்க்கார் பத்திரிகையான "அல்பஜ்லு" வழக்கம்போல் பிரசுரமாகிக்கொண்டிருக்கிறது. ஆனல், அதில் காதியானை விட்டு ஹிஜ்றத்துச் செய்துவிடுவதாகவோ அல்லது காங்கிரசுடன் ஒன்றுசேர்ந்துகொள்வதாகவோவுள்ள பிரஸ்தாபமெதுவும் வெளிவருவதாகக் காணவில்லை.

முதலாவது கான்பரன்சிஞ லேற்பட்ட பலன் காதியானின் இடுப்பை முறித்துவிட்டிருக்கும்போது இக்கான்பரன்சை முஸ்லிம்கள் பூரண வெற்றியுள்ளதாக ஆக்குவார்களாயின் இது மரணஅலை கொண்டுபோவதாக ஏற்படமாட்டாதென்று எவராலும் சொல்லமுடியுமா?

—"ஜமீன்தார்"

---

## அறிவிப்பு

காதியானீ கொள்கையின் கெடுதி சூக்ஷி முதலியவைகளை நன்கு சவிஸ்தாரமாய்த் தெரிந்துகொள்ள விரும்பும் நண்பர்கள், தென்காசி முஸல்மான் ஆசிரியர் ஜனப் மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் அவர்களால் இயற்றப்பெற்ற புத்தகங்களை வாங்கிப் படிக்குமாறு வேண்டுகிறோம்.

# இஸ்லாத்தின் விசேஷங்கள்

தேவனுலனுப்பப்பட்டதாகஇருந்துகொண்டு மனிதருக்குத் திமை யுண்டாக்கு வதைப் போதிக்கக்கூடியதாயுள்ள மதம் உலகி லில்லை. உலகத்தில்வந்த அநேகம் மதங்களின் போதனைகளில் மனிதனுடைய நிலைமைக்கும், அவனுடைய மூளைச் சக்திக்கும் பொருத்தமில் லாத விஷயங்கள் சொல்லப்படவுமில்லை. ஆரம்ப மாகப் படிக்கிற பிள்ளைகளுக்கு, அவர்களுடைய சக்திக்குத் தகுந்த புத்தகங்களையே கொடுக்கப் படவேண்டும். முதல் வகுப்பில் படிப்பவர் களுக்கு க்ஷேத்திரக் கணிதங்களையும், தத்துவ சாஸ்திரங்களையும் போதிப்பது படித்துக் கொடுப்பவரின் திறமையின்மையை ருஜூப் படுத்துமேயன்றி படிப்பவர் அதற்குத் தகுதி வாய்ந்தவர் என்று கருதும்படி ஏற்படுவதில்லை. ஆகவே, எல்லாம்வல்ல இறைவன் நமது சக் திக்கு மீறிய பாடங்களை நமக்குக் கற்பித்தான் என்று அவன்மீது நாம் குற்றங் கூறமுடியாது. எனவே, அவன் ஆரம்பகாலத்தில் அப்பொழு துள்ள ஜனங்களின் நிலைமைக்குத் தக்கவாறு மத விஷயங்களைக் கற்பித்தான். பின்னர், நாளுக்கு நாள் மனித அறிவு வளர்ச்சிபெற்ற அளவிற்கு மார்க்கச் சட்டங்களிலும் மாறுத லடைந்துகொண்டே இருந்தது. ஆகவே, இஸ் லாம் மதம் உலகத்திற்குப் புதியமதமென்றும், இதர மதங்களுக்கு முற்றிலும் வேறான மத மென்றும் சில ஜனங்கள் தவறாக மதித்திருக் கின்றனர். உண்மையில், இஸ்லாம் புதியமத மன்று. இதனால்தான் இஸ்லாம் எல்லா நபிமார் களையும் ஒப்புக்கொண்டு அந்த நபிமார்கள் போதித்தவைகளைச் சரியானவைகளென்றும் கருதுகிறது. இஸ்லாம் முற்காலத்திலிருந்த எல்லா நபிமார்களின் போதனைகளையும் ஒருங்கே தன்னுள்ளடக்கிக்கொண்டு இறைவன் பிறப் பித்த கட்டளைகளில் இறுதியான கட்டளையாக இருப்பதால் தற்போதைய காலம்வரை ஏற் பட்டுள்ள மாறுதல்கள், கட்டளைகள் ஆகிய வைகளையும் தன்னுள் வைத்துக்கொண்டிருக் கிறது.

இறைவனை வணங்குதல், நல்ல காரியங் களைச் செய்தல், கெட்டகாரியங்களைச் செய்யா மல் விலகி இருத்தல் ஆகிய விஷயங்களை எல்லா மதங்களும் போதிக்கின்றன. ஆனால், நமது நாகரீகம், வாழ்க்கைமுறை ஆகியவை சம்மந்தமாய் இதர மதங்களனைத்தும் மௌன மாகவே இருக்கின்றன. மனிதனுக்கு அல்லா ஹுதஆலாவினுடன் சம்மந்தமேற்பட்டபின் உலகில் மனிதன் அமைதியாகவும், சமாதான மாகவும், க்ஷேமமாகவும் வாழ்வதற்கான விஷ யங்கள் தான் முக்கியத் தேவையாக இருக் கிறது. உலகில் அமைதியாகவும் சமாதான மாகவும் க்ஷேமமாகவும் வாழ்வதற்கு என் னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமென் பதையே உலகத்திலுள்ள முஸ்லிம் அல்லா தாரிலுள்ள அறிவாளிகளும், மூளையிற் சிறந்த வர்களும் இரவு பகலாக யோசித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால், பல நூற்றாண்டுக ளாக இவர்கள் ஆலோசனைகளும் ஆராய்ச்சி களும் செய்தும்கூட இவர்கள் முன்னர் இருந்த இடத்திலேயே இப்பொழுதுமிருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை அனுபவம் நமக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது. அதா வது, அமைதி சமாதானம் முன்னர் இல்லாம லிருந்தது போலவே இப்பொழுதும் அவர் களிடம் இல்லாமலிருந்து கொண்டிருக்கிறது.

முன்னேற்றமடைந்த ஜனங்களில் அநேகம் பேர் தங்கள் மதத்தின்பால் வெறுப்புக்கொண் டுள்ளனர். இதற்குக் காரணம் அந்த மதத்தலை வர்கள் மதத்தின்பெயரால் கேவலமானதும் வெறுக்கத் தக்கதுமான காரியங்களைச் செய்யத் துணிந்ததேயாகும். ஆகவே, அவர்கள் தங்க ளுக்கு அமைதி சமாதானம் ஆகியவைகளின் மீதேற்பட்டுள்ள விருப்பத்தின் காரணமாக தாங்களாகவே தங்கள் மதிநுட்பத்தின் மூல மாக அமைதி, சமாதானம் ஆகியவைகளை நில வச் செய்வதற்கான சட்டதிட்டங்களை இயற்ற முன் வந்து விட்டனர்.

ஆனால், இவர்கள் ஏற்படுத்தி இருக்கிற சட் டங்களனைத்தும் பொதுவாக இஸ்லாம் நமக்குக் கற்பித்திருக்கிற மூலத்தையே அடிப்படையாக கொண்டிருக்கின்றன என்பதை நாம் காண்கின் றோம். ஆனால், முஸ்லிம்களாகிய நாம், முஸ்லிம் அல்லாதார்களைப்போல் இவ்விஷயங்களை அறி

யாதவர்களாகவே ஆகிக்கொண்டிருக்கிறோம். நேற்றுவரை முஸ்லிம் அல்லாதார் இஸ்லாத்திலேற்பட்டுள்ள விவாக விலக்குச் சட்டத்தை (தலாக்கை) ஆக்ஷேபனைசெய்து கொண்டிருந்தனர்; இது மனிதத்தன்மைக்கு ஒவ்வாதது என்று எண்ணிக்கொண்டிருந்தனர். ஆனல், காலத்தின் மாறுபாடான நிலைமை அவர்களுக்குப் பாடங்கற்றுக்கொடுத்துவிட்டதால் அவர்களுடைய மதம் விவாக விலக்குக்கு அனுமதி கொடுக்காமலிருந்துங் கூட அவர்கள் விவாக விலக்குச் சட்டத்தை தாங்களாகவே ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றனர்.

முஸ்லிம் ஸ்திரீகள் பர்தாவை அனுஷ்டிப்பதைப்பற்றிப் பிறமதத்தார் அதிகமாக ஆக்ஷேபித்தனர். அதைப்பற்றிக் குறைகூருத மதத்தார் இல்லை என்று கூறலாம். ஆனல், நாகரீகத்தின் உச்சஸ்தானத்தை அடைந்துள்ளதாக கூறிக்கொள்ளும் மேனுட்டின் சில இடங்களில், "ஆடவர்களும் பெண்களும் அனுவசியமாக எந்நேரமும் ஒரே இடத்தில் சேர்ந்திருப்பதானது சமூகத்தின் ஒழுக்கத்தையே கெடுத்து விட்டது; ஸ்திரீகள் தங்களது எல்லையைக் கடந்து பாதி ஆடவர்களாகிக் கொண்டிருக்கிறார்கள்; இதனல், அவர்களிடம் பெண்மை என்பது அகன்று வருகிறது; பிள்ளைகளைப் பரிபாலித்தல்; அவர்களை வளர்த்தல் ஆகிய காரியங்கள் ஸ்திரீகளுக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது" என்ற கூச்சல் கிளம்ப ஆரம்பித்திருக்கிறது. இவ்வபிப்பிராயம் ஏற்பட்டுள்ள ஜனங்கள் இன்னுஞ் சிறிதுகாலத்திற்குப் பிறகு ஸ்திரீகளையும் ஆடவர்களையும் கலந்திருக்க அனுமதிக்கக் கூடாது என்ற கொள்கையை ஒப்புக்கொண்டுவிடுவார்களென்பதிற் சந்தேகமில்லை.

வியாபாரத்தை விருத்திசெய்தல், வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல் செய்தல், செல்வத்தைத் திரட்டுதல் நாகரீகமடைந்த உலகில் மிகவும் மனேரம்மியமான தொழிலாக இருந்தது. இதே தொழிலின் காரணமாக தொழிலாளருக்கும் முதலாளிவர்க்கத்துக்கு மிடையில் உலக யுத்தம் ஆரம்பமாகி இருப்பதை நாம் காண்கின்றோம். "செல்வம் திரட்டுவதற்காக இல்லை, செலவளிப்பதற்காகவே இருக்கிறது" என்ற எண்ணம் மேனுட்டிலுள்ள எல்லாத் தேசத்தாரிலும் உண்டாகி இருக்கிறது. அத்தேசங்கள் அரசாதிபத்தியத்தையும் சக்கிராதிபத்தியத்தையும் ஒழித்து முதலாளித்துவத்திற்கு விரோதமாகக் கடும்யுத்தம் தொடங்கி விட்டன. அத்தேசங்கள் தானுக ஏற்படுத்தி வைத்திருக்கிற சட்டங்கள் இஸ்லாமியச் சட்டங்களுக்கு முற்றிலும் ஒத்திருக்கவில்லை என்பது மெய்யாயினும், அவைகள் இஸ்லாமிய சட்டங்களைத் திரித்தும் மாற்றியும் ஏற்படுத்தியவை என்பது மட்டும் நிச்சயம். செல்வத்தைக் கூடிய வரை பொதுவானதாக ஆக்கவேண்டும்; 'பைத்துல்மால்' ஏற்படுத்த வேண்டும் என்ற இஸ்லாமியச் சட்டமே அவைகளுக்கு அஸ்திபாரமான சட்டங்களாக இருக்கின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்திரீகளை ஏககாலத்தில் மனைவியர்களாக வைத்துக்கொள்ளுதல் நாகரீக உலகில் பெருங்குற்றமாகக் கருதப்பட்டு வந்தது. ஐரோப்பிய மகாயுத்தமானது மேனுட்டாரின் இவ்வபிப்பிராயம் சரியானதல்லவென்பதை அறிவுறுத்தி விட்டது. மகாயுத்தத்தின் பயனுக ஆடவர்கள் மடிந்து ஸ்திரீகளின் எண்ணிக்கை அதிகமானபோது பலதார மணத்தை அனுமதித்து இக்குறையைப் பரிகரிக்க வேண்டுமென்று பலதேசத்தாரும் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள்.

அடிமை வழக்கம் ஒரு காலத்தில் எல்லா தேசத்தாரிடத்திலுமிருந்து வந்ததாயினும் இஸ்லாம் மதம் அடிமையின் அந்தஸ்தை யுயர்த்தி அவர்களைச் சகோதரர்களாக்கி விட்டது. செல்வத்தை செலவு செய்வதற்குச் சரியான மார்க்கங்களை இஸ்லாம் நிர்ணயித்தபோது அடிமைகளை விடுவிப்பதற்காகப் பணங்கொடுப்பதையும் புண்ணியமான செலவென்றேற்படுத்தி விட்டது. ஆகவே, இதர வகுப்பாரும் இப்பொழுது இவ்வழக்கத்தை ஒழிப்பதில் சிரத்தைகொண்டு அடிமை வியாபாரம் செய்வதை குற்றமென்பதாக சட்டமுண்டு பண்ணி விட்டனர்.

இதுபோன்ற இன்னும் அநேகம் விஷயங்கள் இருக்கின்றன. அவைகளை இக்கால அவசியங்களுக்கு ஏற்றவாறு இத்தேசங்கள் மதத்தின் பெயராலன்றி தங்கள் சொந்த யுக்தியின் பெயரால், தேசச்சட்டம் ஒழுக்கச்சட்டம் என்று ஏற்படுத்தி வருகின்றன; இன்னம் ஏற்படுத்திக்கொண்டும் மிருக்கின்றன. இதர மதங்களில் இந்தச் சட்டங்களில்லையாகையால் அந்த தேசத்தாருக்கு இவ்விஷயங்களில் நிர்ப்பந்த மேற்பட்டதன் காரணமாக தாங்க

ளாகவே முஸ்லிம்களைப் பின்பற்றித் தங்கள் தேசங்களிலும் இம்மாதிரியான சட்டங்களை இயற்றிக் கொண்டிருக்கின்றனர். இஸ்லாம் பரிபூரணமான மதம் என்பதற்கு இதைப் பார்க்கினும் வேறு சிறந்த உதாரணம் வேண்டியதில்லை.

இஸ்லாம் மதந்தான் பரிபூரணமான மதம் என்பதற்கு அதிலுள்ள சில விசேஷங்களை ஈண்டு விவரிப்பாம் :—

1. ஏகதெய்வ வணக்கம் இஸ்லாத்திற்கு மிகவும் முக்கியமான விசேஷமாகும். ஏகதெய்வ வணக்கம்தான் சரியென்று பரிபூரணமான நம்பிக்கையும் உறுதியும் ஏற்படாதவரை எவரும் முஸ்லிம் என்றழைக்கப்படமாட்டார். அல்லாஹு தஆலா ஒருவன்தான் உண்மையான தெய்வமென்றும், அவன் தான் சர்வசக்தன் என்றும் களங்கற ஒப்புக்கொள்பவர்தான் முக்தியடைய முடியும் என்று நம்பவேண்டும்.

2. அல்லாஹு தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகில் குழப்பமும் கலவரமும் உண்டுபண்ணக்கூடாது; குழப்பத்தை யுண்டாக்கும் காரியங்களையுங்கூடச் செய்யலாகாதென்று இஸ்லாம் தடை செய்கிறதுடன் பந்துக்களாக இருந்தபோதினும் சரியே மனித வர்க்கத்தில் எவருடைய தாட்சண்யமும் பாராமல் நடுக்கண்ட நீதிவழங்க வேண்டும்; பிறர் செய்த குற்றத்தை மன்னித்தல், மானத்தைக் காப்பாற்றுதல் ஆகியவைகளைச் செய்ய வேண்டுமென வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், ஸ்திரீ புருஷர்கள் அநாவசியமாக கலந்து கொள்ளுதல், மதுபானமருந்துதல் முதலியவைகளும் தடுக்கப்பட்டிருக்கின்றன.

3. இஸ்லாம் மதத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு என்றபேதம் கிடையாது. நீக்ரோ வகுப்பைச்சேர்ந்த ஒரு அடிமை சக்கிரவர்த்தியின் தோளோடு தோள்சேர்த்து நின்று தொழ முடியும். ஒருபந்தியில் இருந்து உணவருந்தலாம். சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்கள் அவசியமற்ற வீணான ஆசாரமுறையில் மரியாதை செய்வதைப் பலமுறைகளிலும் விலக்கி இருக்கிறார்களாதலின் ராவுத்தர், மரைக்காயர், சாயபு, ஷெய்கு, பட்டாணி, முகல், கருப்பர், வெள்ளையர் என்ற வித்தியாசங்களுக்கு இஸ்லாத்தில் எவ்வித மதிப்புங் கிடையாது. ஆகவே, பயபக்தி அதிகமாக உள்ளவர்கள்தான் சிறந்தவர்கள் என்று இஸ்லாம் பொதுவிதி ஏற்படுத்தி இருக்கிறது.

4. ஸ்திரீகளின் உரிமைகளையும் பாத்தியதைகளையும் நிர்ணயித்து அவர்களுக்குரிய பாத்தியதைகளை அவர்களுக்குக் கொடுத்துவிடும்படி இஸ்லாம் திட்டம் செய்துள்ளது. முன்னேற்றமடைந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் நாட்டினர், ஸ்திரீகளுக்குப் பூரண சுயேச்சை யளித்துள்ளதாக தாவாச் செய்கின்றனராயினும், அவர்களுக்குள்ள உரிமைகளை அன்னோர் ஒப்புக்கொள்ளவில்லை. இன்னுங்கூட இங்கிலாந்தில் கணவன் மரித்தபின்பு ஸ்திரீகள் மூத்தமகனின் தயவு தாட்சண்யத்தின் கீழில் இருந்துவர வேண்டியதாக இருக்கிறது. இவ்வாறு தகப்பனின் மூத்த புதல்வன் எல்லாச் சொத்துக்கும் ஏகபாத்தியக்காரனாகி விடுகிறான். இந்தியாவிலுள்ள ஹிந்து சமூகங்களிலுள்ள விதவைகள் தங்களுடைய உயிர்வாழ்க்கையைப் பார்க்கினும் மரணத்தை அதிகம் விரும்புகின்றனர்.

ஆனால், இஸ்லாம் ஸ்திரீகளுக்கு இவ்வித மான சங்கடம் ஏற்பட இடங்கொடுக்கவில்லை. அவர்களுக்கு 'மஹர்' என குறிப்பிட்ட ஒரு தொகையைக் கணவனிடமிருந்து கொடுக்கும் படிச் செய்திருக்கிறது. பிறகு, இறந்துபோன கணவனின் சொத்துக்களிலிருந்து பாகம் கொடுக்கும்படியும் செய்திருக்கிறது. தாயின் காலடியில் சுவர்க்கமிருக்கிறது என்று கூறி ஸ்திரீகளின் அந்தஸ்தைஉயர்த்தி அவர்களுக்கு ஊழியஞ் செய்வதைப் புண்ணியமென்றேற்படுத்தி இருக்கிறது. விதவைகளையும், விவாக விலக்குச் செய்யப்பட்ட ஸ்திரீகளையும் விவாகம் செய்வதை ஆடவர்கள் கேவலமாக மதித்திருந்தனராதலின் இதை இஸ்லாம் அடியுடன் மறுத்து அவர்களை விவாகம் செய்வதைச் சட்டப்படி அனுமதித்தது. நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களே விதவைகளையும் விவாகவிலக்குச் சொல்லப்பட்ட ஸ்திரீகளையும் விவாகஞ் செய்து உலகத்துக்கு வழிகாட்டி இருக்கிறார்கள்.

5. அடிமை வர்த்தகத்தை ஒழித்து அவர்களுடைய உரிமைகளை நிர்ணயித்ததும் இஸ்லாம் மதந்தான். இவ்விஷயத்தில் இஸ்லாம் எவ்வளவு பெருமைகொள்ளுதலும் தகும். நாகரீகமடைந்த உலகம் அடிமை வியாபாரத்தைச் சட்டப்படி குற்றச் செயலென்று நிர்ணயித்து அதை அடியுடன் ஒழித்துவிட்டதாகக் கூறிக்

கொள்கிறது. ஆனால், இன்று, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளில் ஐரோப்பியர்களாலும் மற்றவர்களாலும் நடத்தப்படும் முறை அடிமைகளிலும் கேவலமான முறையென்பது உண்மையல்லவா? அடிமை வியாபாரத்தைச் சட்டத்தின்மூலம் தடை செய்துவிட்டதால் ஆடுமாடுகளைப்போல் மனிதன் கடைத்தெருவில் விற்பனை செய்யப்படுவது ஒழிந்ததாயினும், ஜனங்களுள்ளத்தில், ஒருவர் மற்றொருவரைக் கீழ்ப்பட்டவர்களாகவும் அடிமைப்பட்டவர்களாகவும் மதிக்கும் உணர்ச்சிமட்டும் இன்னமும் நீங்கியபாடில்லை. அடிமையின் அந்தஸ்து, அடிமையாகஇல்லாமல் சகோதர வாஞ்சையாக இருந்தால்தான் அடிமைப்படுத்தும் உணர்ச்சி நீங்கும். இஸ்லாம் மதம் இதைத்தான் செய்திருக்கிறது. எனவே, அடிமையை கூலிக்காரனின் அந்தஸ்திற்கு மாற்றிவிட்டது. கூலிக்காரன் வேலையில் மாத்திரம் முதலாளிக்குப் பணிந்து நடப்பானேயன்றி மற்ற விஷயங்களில் அவன் முதலாளிக்குச் சம அந்தஸ்துள்ளவனாகவே இருக்கிறான். இதே நிலைமையைத்தான் இஸ்லாம் அடிமைகளுக்கு ஏற்படுத்திவைத்திருக்கிறது. அடிமைகளைப் பணங்கொடுத்து விலைக்கு வாங்கி அவர்களை உரிமை விடுதல், இன்னும் அவர்களுக்குப் பண உதவி செய்து உரிமையடைந்து கொள்ள ஒத்தாசை செய்தல் ஆகிய இரண்டு வழிகளை ஏற்படுத்தி, மனிதனை அடிமையாக்குவதை இஸ்லாம் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

6. தனிப்பட்ட ஒருவர் அரசுரிமை செலுத்தி, தேசமக்களனைவரின்மீதும் ஏதேச்சாதிகாரம் செலுத்தி அடிமைப்படுத்துவதை இஸ்லாம் ஆதிமுதல் எதிர்த்துவந்திருக்கிறது. இவ்விதமான ஏதேச்சாதிகாரம் புரிவது இறைவன் ஒருவனுக்குத்தான் தகும் என்றும், முஸ்லிம்கள் தங்களது காரியங்களை ஒருவருக்கொருவர் கலந்தாலோசனை செய்துமுடிவுசெய்துகொள்ள வேண்டுமென்றும், தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர் ஒழுங்கானமுறையில் ஜனங்களை நடத்தும் விஷயத்தில் பொதுஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும் என்றும், பொதுஜனங்கள் இஸ்லாமியச் சட்டத்தைப் பின்பற்றி நடக்கும் விஷயத்தில் அத்தலைவருக்கு உத்தரவாதியாக இருக்கவேண்டும் என்றும் இஸ்லாம் விதித்துள்ளது.

தனிப்பட்டவர் தன்னுடைய பலத்தினால் பொதுஜனங்களை அடக்கி, அவர்கள்மீது தனக்கும் தனது சந்ததியினருக்கும் ஏதேச்சாதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்வதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. மேனாட்டிலுள்ளவர்கள் இதன் பிரயோஜனத்தை இப்பொழுது உணர்ந்து ஏதேச்சாதிகார உரிமையை ஒழித்து ஜனநாயக ஆட்சி என்றும், குடியாட்சியென்றும் பெயர்வைத்து, பார்லிமெண்டு சபைகளை ஏற்படுத்தி அன்று இஸ்லாம் போதித்தமுறையைச் சிறிது மாறுதலுடன் அனுஷ்டித்துவருவது இப்பொழுது யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

7. உலகத்திலுள்ள இன்பங்களையும் சுகங்களையும் அனுபவிக்காமல், துறவரம் பூண்டு, சந்நியாசியாகிவிடுவதை இவ்வுலகிலுள்ள அநேகம் மதங்கள் பாராட்டுகின்றன. ஆனால், இஸ்லாம் இதனை மறுத்துவிட்டது. ஏனெனில், இம்மாதிரியாக துறவரம் பூணுவதை மதம் ஆதரித்துக் கௌரவித்துப் போற்றுகிறது என்பதற்காக அச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உலக காரியங்களை விட்டுவிட்டு கானகங்களுக்கும், பர்வதங்களுக்கும் சென்று இலை தழைகளைத் தின்று தங்கள் காலத்தைக்கழிக்க ஆரம்பித்துவிடுவதால் உலக அபிவிருத்தி கெட்டுப் போகும் அல்லவா? ஆகவே, இஸ்லாம் துறவரம் பூண்டு சந்நியாசியாகிக் காடு வனாந்திரங்களிற்சென்று வசிப்பதை ஆதரிக்காமல் அதனைக் கண்டித்துணர்த்தி இருக்கிறது. இஸ்லாம் கண்டித்துணர்த்திய பின்புதான் மக்கள் இதிலுள்ள தவறையுணர ஆரம்பித்தார்கள். உலகத்திலுள்ள சகல இன்பங்களையும் நியாயமான முறையில் உண்டு, உடுத்திச் சுகம்பெற்றனுபவிக்கும்படியே இஸ்லாம் மதம் போதிக்கிறது.

கல்வி கற்பதை இஸ்லாம் முக்கிய கடமையாக ஏற்படுத்தி இருக்கிறது. அதாவது, சீனதேசம் சென்றேனும் கல்விகற்பது ஸ்திரீ புருஷர் ஆகிய எல்லா முஸ்லிம்கள்மீதும் கடமையாகும் என்று கூறி "தன்னையறிந்தவன் தலைவனை அறிவான்" என்று அறிவித்துளது. தன்னை அறியவேண்டுமாயின் கல்வி முக்கியமாக இருக்கவேண்டும் என்பதை எவர்தான் மறுக்கமுடியும்.

பலதார மணமும் இஸ்லாத்தின் விசேஷங்களிலொன்ருகும். சொற்ப புத்தியும் குருகிய திருஷ்டியுமுள்ள முஸ்லிம் அல்லாதார் இதனை எப்பொழுதும் ஆக்ஷேபித்தே வந்திருக்கிருர்கள். "ஒரு ஆடவனுக்கு ஒரு ஸ்திரீ தான்" என்ற முறை பார்வைக்கு மிகவும் கம்பீரமானதாயிருப்பதால், இஸ்லாம் பலதார மணத்தை அனுமதித்திருக்கிறது என்று இஸ்லாத்தின்மீது குறைகூறிப் பாமர ஜனங்களை இஸ்லாத்திற்கு விரோதமாகத் தூண்டிவிட முடியும். இவ்வாறுகூறி முக்கியமாக ஸ்திரீகளை மிகச்சுலபமாகத் தூண்டிவிடலாம். இஸ்லாத்தின்மீது குறை கூறவேண்டும், இஸ்லாத்திற்குக் கெட்டபெயர் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல், உண்மையையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாக்ஷேபனையைச் செய்வார்களாயின் மிகச் சுலபமாக இதற்குப் பதில் கூறமுடியும். இவ்வொருவிதியே இஸ்லாம்தான் கடைசிமதம் என்பதற்கும், பரிபூரணமான மதம் என்பதற்கும் போதிய அத்தாட்சியாக இருக்கிறது. சென்ற 1914-ம் வருஷத்தில் தோன்றிய மகாயுத்தம் இது சம்பந்தமாக நமக்கு நல்ல பாடத்தைக் கற்பித்துக் கொடுத்துவிட்டது. ஸ்திரீகள் அதிகமாகவும் ஆடவர்கள் குறைவாகவும் இருக்கக்கூடியகாலம் ஒரு சமயம் உண்டாகும் என்பதை அந்தயுத்தத்தின் பலனுக மக்கள் தெரிந்து கொண்டனர். மகாயுத்தத்தின் காரணமாக ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய தேசங்களில் லக்ஷகணக்கான ஆடவர்கள் கொல்லப்பட்டுப் போனதால் அத்தேசங்களில் ஸ்திரீகள் அதிகமாகி விட்டனர். ஆகவே, அங்குள்ள தலைவர்கள் ஏக பத்தினி விரதச் சட்டத்தை ஒழித்துப் பலதாரமணம் செய்துகொள்ள பொதுஜனங்களைத்தூண்டவேண்டும் என்று முடிவுசெய்தனர். எனவே, இப்படிப்பட்ட அவசியமான சந்தர்ப்பங்களிலும் கூட மக்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய சட்டங்களை இஸ்லாம்மதம் முற்கூட்டியே ஏற்படுத்திவைத்திருப்பது, இது உண்மையான மதமென்பதற்குள்ள அடையாளமல்லவா? தவிரவும், இஸ்லாம்மதம் பலதார மணத்தை அனுமதிக்கிறதேயன்றி ஒவ்வொருவரும் பலதார மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தல் செய்யாது ஏக பத்தினி விரதத்தைத் தான் அது சிலாக்கியமாகக் கூறி இருக்கிறது.

9 விவாக விலக்குச் சட்டம் இஸ்லாத்தில் இருப்பதைக் கண்டு சிலர் ஆக்ஷேபனை செய்து வந்தார்கள். ஆனால், ஆக்ஷேபனை செய்பவர்கள் எப்பொழுதும் கண்ணை மூடிக்கொண்டு ஆக்ஷேபனை செய்வதே அவர்களது வழக்கமாக ஏற்பட்டுவிட்டது. விவாக விலக்குச் செய்வதை இஸ்லாம் அனுமதித்திருந்தாலும் அதைக்கட்டாயச் சட்டமாக ஏற்படுத்தவில்லை. மனிதனுக்கு அளிக்கப்பட்ட காரியங்களில் அது இறைவனுக்குத் திருப்தியில்லாத காரியம் என்றும் கூறி விவாகவிலக்குச் செய்வதைத் தடுத்தும் இருக்கிறது. நிர்ப்பந்தமேற்பட்டு சதிபதிகளின் வாழ்க்கைக் கஷ்டத்தையுண்டாக்கும் விவாக பந்தத்தை விடுவித்துக் கொள்ள வசதியாக இருப்பதற்காகவே இஸ்லாம் இச்சட்டத்தை அளித்திருக்கிறது. விவாக விலக்குச் சட்டம் இல்லாமலிருந்த சமூகத்தாரும் இப்பொழுது இம்மாதிரியான சட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளும்படியான நிலைமைக்கு வந்து, சட்டங்களை ஏற்படுத்தி இருக்கிருர்கள் என்பதை இப்பொழுது நாம் சொல்லிக் காண்பிக்கவேண்டிய அவசியமில்லை. அன்று அவர்கள் இஸ்லாத்தைப்பற்றிச் செய்த ஆக்ஷேபனைகள் முட்டாள்தனமானவை என்பதை இன்று அவர்கள் உணர்ந்துகொண்டனர்.

10. செல்வத்தை மக்கள் யாவரும் சமமாக உபயோகிக்கவேண்டும் என்பதும் இஸ்லாத்தின் முக்கிய விசேஷங்களில் ஒன்று. முதலாளிவர்க்கம் என்ற பெயரால் இப்பொழுது உலகம் பிரலாபித்துக்கொண்டிருக்கிறது. யூதர்கள் வட்டித் தொழிலின்மூலம் செல்வத்தைச் சுரண்டி ஒன்றுச் சேர்த்துக் கொண்டதால் ஐரோப்பாவும், பனியாவகுப்பினரால் இந்தியாவும் திணரிக் கொண்டிருக்கிறது. ஐரோப்பா மகாயுத்தம் ஆரம்பித்ததற்கும் இதுவே முக்கிய மூலகாரணமாகும் என்பது பொருளாதார சாஸ்திர நிபுணர்களுக்கு மறைந்த விஷயமன்று.

செல்வம் ஒருவரிடத்தில் மட்டும் போய் சேர்ந்து விடுவதால் உலகில் சமாதானம் ஏற்படமுடியாது என்பதை இஸ்லாம் நன்குணர்ந்து ஏழைகளுக்கும் அச்செல்வத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கான திட்டத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இத்திட்டத்தை சாதாரணமான திட்டமாக ஏற்படுத்தாமல், தனவந்தர்கள் ஒவ்வொருவரும் அனுஷ்டிக்கவேண்டிய கட்டாயச் சட்டமாக ஏற்படுத்தி இருக்

றது. தவிரவும், வட்டிக்குப்பணம் கொடுப்பதை யும் வாங்குவதையும் அடியுடன் மறுத்து இக் கொடும் காரியத்தைத் தடைசெய்திருக்கிறது.

11. 'ஜிஹாது' செய்வதை இஸ்லாம் அனுமதித்திருக்கிறது. பிறமதத்தார் இதனைச் சரியாக உணர்ந்து கொள்ளாது அநேகம் ஆக்ஷேபனைகளைச் செய்கிறார்கள். இஸ்லாம் மதம் 'ஜிஹாது' செய்வதை அனுமதிக்காமல் தடைசெய்திருந்தால் அது இயற்கை மதமாக இருக்கமுடியாது. ஏனெனில், உலகில் நியாயம் யம் அநியாயம் என்ற பாகுபாட்டை நாம் சரியான முறையில் நிலைநிறுத்தவும் மதசுதந்திரத்தைக் காப்பாற்றவும் ஜிஹாதுதான் முக்கிய பலமாக இருக்கிறது. ஜிஹாது செய்வதை இஸ்லாம் தடைசெய்திருக்குமாயின் ஹிந்துக்களோ கிறிஸ்துவர்களோ இஸ்லாம் மத உரிமைகளை முஸ்லிம்களுக்குக் கொடுக்க ஒரு போதும் இணங்கவே மாட்டார்கள். எனவே, இஸ்லாம் மதம் பிறர்மீது கொடுமை செய்வதற்காக ஜிஹாதை அனுமதிக்கவில்லை. பிறர் முஸ்லிம்களது உரிமைகளை அளிக்காமல் கொடுமை செய்வதைத் தடுத்து தங்களுக்குள்ள மத உரிமையை நிலைநிறுத்திக் கொள்ளவே இஸ்லாம் ஜிஹாது செய்வதை அனுமதித்திருக்கிறது.

இவ்விதமாக இஸ்லாத்திற்குள்ள விசேஷங்களை விவரித்துக்கொண்டே இருப்பதாயின் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான விசேஷங்களை எடுத்துக்கூற முடியும். ஆயினும் இச்சிறுவியாசம் இடங்கொடுக்காதென்றஞ்சி இத்துடன் நிறுத்திக்கொண்டனம். சுருங்கக் கூறின், இஸ்லாம்,பிறவிப்பெருங்கடலில் மூழ்கி நம்மைத் தவிக்க விடாமல் காப்பாற்றுவதற்காக நமக்குச் சரியான கப்பலை அளித்திருக்கிறது. அக்கப்பலில் நாம் ஏறிக்கொள்வோமாயின் மிகச்சுலபமாக நாம் பிறவிப் பெருங் கடலைக் கடந்து விடலாம் என்பது திண்ணம்.

---

## 20 கோடிப் பெண்கள் கைதிகளா?

### குலாமின் குதர்க்கமான கூற்று

தா. இ. ஹிஜ்ரி மலரில் குலாம் என்னும் பெயரால் "20 கோடிப் பெண் கைதிகள்" என்ற மகுடத்தின்கீழ் நீண்டதோர் கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதில்நம்முஸ்லிம் பெண்மணிகள் அனுஷ்டித்துவரும் கோஷா முறை கல்வி அபிவிர்த்திக்குத் தடை கல்லாக இருக்கிறதென்றும், கோஷா அனுஷ்டிப்பது இறைவனது ஆணையை மீறுவதாகுமென்றும், கோஷாஅனுஷ்டிப்பதால் க்ஷயரோகம் முதலிய வியாதிகள் உண்டாகி பெண்கள் மரணமடையும் படி ஏற்படுகிறதென்றும், பெண்கள் கோஷா முறையை அனுஷ்டிப்பது அனாசாரமான காரியமென்றும், இவைகளைவிட்டுத் தவிழ்ந்துகொள்வதற்காக கோஷாவென்னும் நாற்றமெடுத்த குப்பட்டியினின்று பெண்கள் வெளியில் வர வேண்டும் என்றும் விரிவாக ஆபாசமானமுறையில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள் உண்மைக்கு எவ்வளவு தூரம் மாற்றமானதென்பது நேயர்களுக்குத்தெரிந்தவையே.

தா. இ. ஹிஜ்ரி மலரிலுள்ள இவ்வியாசம் ஆக்ஷேபிக்கத்தக்கதாயும் இஸ்லாம் மதத்திற்கு நேர்முரண்பாடுள்ளதாகவும் இருக்கிறதென்பதைக் கருதி அதன்மீதேற்படும் தப்பபிப்பிராயத்தை நீக்குவான்வேண்டி அதனை நாம் கண்டித்தெழுதக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'முதற்கோணல் முற்றுங் கோணல்' என்றபடி அக்கட்டுரையின் ஆரம்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு "குர்ஆன் 4 : 3" என்று சுட்டிக்காட்டி இருப்பதிற்கிணங்க குர்ஆன்ஷரீபின் 4-வது அத்தியாயம், 3-வது வசனத்திலாகிலும், அல்லது 3-வது அத்தியாயம் 4-வது வசனத்திலாகிலும் இவ்விஷயம் காணப்படவில்லை.

ஆகவே, இவ்வியாசகர்த்தா சுட்டிகாட்டியுள்ள வசனம் அவர் குறிப்பிட்டுள்ள இடத்தில் கிடையாது. எனவே, வியாசகர்த்தா திரு குர்ஆனைச் சரியாகப் படித்துணரவில்லை என்றே புலப்படுகிறது. வியாசகர்த்தாதான் தவறுதலாக எழுதி இருக்கிறாரோவெனின், அதைப் பிரசுரித்தவர்களேனும் கவனித்திருக்கலாம். ஆனால், அவர்களும்கூட இந்தப் பொறுப்பை உணரவில்லை. ஆதலின், வியாசகர்த்தாவும், வியாசத்

தைப் பிரசுரித்தவர்களும் எடுத்த எடுப்பி லேயே தவறிவிட்டனர். இந்தச் சிறு விஷயத் தில் இப்படித் தவறியவர்கள் பிறகு முக்கிய விஷயத்தில் எவ்வளவு தூரம் தவறு செய் திருப்பார்கள் என்பதை இதிலிருந்து நேயர்கள் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வியாசக்கர்த்தா ஸ்திரீகள்பால் அதிக அனுதாபமுள்ளவரேபோல் நடித்துக்கொண் டிருக்கிறார். ஸ்திரீகள் எல்லாருங்கூடி அவர் களுக்குள்ள உரிமைகளை வாங்கிக்கொடுக்குமாறு இவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்களா? அல்லது வக்காலத்து வாங்காமலே ஸ்திரீகளுக் காக வாதாடும் வக்கீலாக இவர் தோன்றி இருக் கிறாரா? என்பதை அவர் அறிவிக்கவில்லை. ஸ்திரீகளும் மனிதர்கள்தாமாகையால், அவர் களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளை ஆடவர் கள் அபகரித்திருந்தால் அவர்கள் தங்கள் உரி மைகளுக்காக வாதாடாமலிருக்க மாட்டார்கள். ஸ்திரீகள் தங்களுக்குள்ளேயே சங்கங்களை ஏற் படுத்தி தங்கள் உரிமைகளைச் சட்டப்படி வாங் கிக்கொள்ள பகிரதப் பிரயத்தனம் செய்து, கவர்ன்மெண்டாரின் உதவியின் பேரில் தங்க ளது உரிமைகளை நிலைநாட்டிவருகின்றனர். இவ்விஷயத்தில் இந்தியாவில், “அகில இந்திய விமின்ஸ் கான்பரன்சு” என்றும், “அகில இந்திய லேடீஸ் கான்பரன்சு” என்றும் பல அகில இந்தியச் சங்கங்களேற்பட்டிருக்கின் றன. இது விஷயத்தில் முஸ்லிம் ஸ்திரீ களுக்குத் தனியாகவும், இந்தியாவிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் பொதுவாகவும் சங்கங் கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை யல்லாமல் “சர்வதேச ஸ்திரீகள் கான் பரன்சு” என்று உலகுக்குப் பெரிய சங்கமும் ஸ்திரீகளுக்கெனப் பிரத்தியேகமாக இருக்கி றது. இச்சங்கங்களெதுவும் இந்த குலாம் என்பவரை வக்கீலாக நியமிக்கவில்லை என்பது பிரத்தியக்ஷம். ஏனெனில், காலஞ்சென்ற போப்பால்பேகம் சாஹிபா அவர்களைத் தலைமை யாகவும், ஹைதராபாத் ஸத்ரு யார்ஜங் பகதூர் அவர்களது பேகம் சாஹிபாவைக் காரியதரிசி யாகவும் கொண்டு முஸ்லிம் ஸ்திரீகளுக்கென பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ள அகில இந்திய லேடீஸ் கான்பரன்சின் 12-வது மகா நாடு ஹைதராபாதிலுள்ள பர்குன்தா புன்யா தில் லேடி ஆஸ்மான் ஜாஹ்வின் தலைமையில் கூடிற்று. அம்மகாநாட்டில், முஸ்லிம் ஸ்திரீ கள் பர்தாவை அனுஷ்டிக்கவேண்டுமா அல் லவா என்ற விஷயத்தைப்பற்றி நீண்ட விவா தம் நடைபெற்று முடிவில் முஸ்லிம் ஸ்திரீகள் பர்தாவை அனுஷ்டிப்பது மிகவும் அவசிய மென்றும், கண்ணியமென்றும் பெரும்பான்மை ஓட்டுகளால் நிறைவேற்றப்பட்டது. இத்தீர் மானத்தைப் பிரேரணை செய்தவர் ஆப்ரு பேகம் என்ற ஒரு ஸ்திரீயேயாவர்.

எனவே, முஸ்லிம் ஸ்திரீகளின் அகில இந் தியகான்பரன்சு, முஸ்லிம் ஸ்திரீகள் பர்தாவை அனுஷ்டிப்பது மிகவும் அவசியம் என்று தீர் மானம் செய்திருக்கும்போது அந்த இனத் தைச் சேராத ஒரு ஆடவர் ஸ்திரீயை ரிக்ஷா வில் உட்காரவைத்துத் தானும் அவளுக் குதவியாகப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு கடற்கரைக்குச் சென்று உலாவிவரவேண்டு மென்று கூறுவது எவ்வளவு தூரம் துணி வானதும் பெண்களை அவமானப்படுத்துவ தாகவுமிருக்கிறது என்பதை நேயர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஷரீஅத்தின் கட்டளைக்கு விரோதமாக கோஷா இல்லாமல், முக்காடில்லாமல், பர்தா இல்லாமல் கடற்கரைக்குச் செல்லும் ஸ்திரீ களைப்பற்றியோ, அல்லது தங்கள் சகோதரி களையோ மனைவிமார்களையோ அழைத்துச் செல்லும் ஆடவர்களைப் பற்றியோ நாம் என்ன செய்யமுடியும்? பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இவ்விஷயத்தைச் சட்டப்படி தடைசெய்ய முஸ்லிம்களால் முடியாது. ஆனால், தங்களது ஆணவத்திற்கும், காம விகாரத்திற்கும் இஸ் லாம் மதச் சட்டத்தைத் துணையாகக் கொள்ள விரும்பும்போது அதனை ஆக்ஷேபித்து, இஸ் லாம்மதத்தில் இதற்கு இடமில்லை என்று எடுத் துக் கூறுவது முஸ்லிம்கள் ஒவ்வொருவ ருடையவும் கடமையாகும்.

முஸ்லிம் ஸ்திரீகள் வீடடங்கி, குடும்பகாரி யங்களைக் கவனிக்க விரும்பும்போது அவர்களை அவ்வாறு செய்யவேண்டாம்; கடற்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்றழைக்க முஸ்லி மாகவுள்ள எவனும் விரும்பான். ஆனால், சன் மார்க்க சட்டதிட்டங்களை சற்றேனும் தெரிந்துகொள்ளாதவர்கள் இம்மாதிரி கூறு வார்கள் என்று நினைப்பதில் ஆச்சரியமொன்று மில்லை. சத்திய இஸ்லாத்தில் சொல்லப்பட்ட சட்டம் ஒன்று, முஸ்லிம் சமூகம் செய்து வரும் சட்டவேறு என்பதாகக்கூறி வியாச கர்த்தா விசனப்படுகிறார். ரிக்ஷாவில் உட்கார

வைத்து கடற்கரைக்கு அழைத்துச் செல்வது தான் இஸ்லாமியச் சட்டமோ? அவ்வாறாயின் அதை வியாசகர்த்தாவே அனுஷ்டித்துக்கொள்வதை ஒருவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். ஆனால், அவர் தனது மனம்போன போக்கில் நடந்துகொள்வதுதான் இஸ்லாமியச் சட்டம் என்று கூறுவாராயின் இதற்குள்ள ஆதாரங்களை அவர் ருஜுப்பித்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறார்.

இவ்வியாசத்தை எழுதியவர் அனாவசியமாக முஸ்லிம் ஆடவர்களைத் தாக்கி இருக்கிறாரே யன்றி நேர்மையான முறையில், இஸ்லாம் மதத்தில், திருகுர்ஆனில், ஹதீது ஷரீபுகளில், இஸ்லாமிய சட்டங்களில் இன்னின்ன விதமான கட்டளைகள் இருக்கின்றன; அச்சட்டத்துக்கு மாறாக முஸ்லிம்கள் நடந்து வருகிறார்கள் என்று எழுதி இருப்பாராயின் அது மிகவும் கன்னியமாக இருந்திருக்கும். அவர் அவ்வாறு செய்யத் தவறிவிட்டார். மேலும், அவர் அவ்வாறு எழுதுவாரென்று எதிர்பார்ப்பதற்குமில்லை. ஏனெனில், தமது வியாசத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள திருகுர்ஆன் வசனம் இன்ன இடத்திலிருக்கிற தென்பதைக்கூட சரியாகத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமையிலில்லாத ஒருவர் நுட்பமான இவ்விஷயத்தின் விபரத்தை எவ்வாறுதெரிந்து கொள்ள முடியும்? ஆதலால், அவருக்கு மதக் கிரந்தங்களில் தக்கபயிற்சி இருக்கும் என்று நம்புவதற்கில்லை.

தவிரவும், இவ்வியாசக் கர்த்தாவுக்கு சரித்திரத்திலும் அதிக ஆற்றலிருக்கவில்லை என்பதை கீழ்க்குறிப்பிடும் அவருடைய வியாசமே அறிவிக்கின்றது. அதாவது,

"இந்தக் கோஷைமுறை மத்திப காலத்தில் பண்டைமார்க்க மக்களின் சகவாச தோஷத்தால் ஏற்பட்டதாகச் சரித்திரம் கூறிக்கொண்டிருக்கிறது. அந்த முறை முஸ்லிம்களால் கைக்கொள்ளும்படி அவசியம் அக்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். அப்பொழுது முஸ்லிம்களைவிட எதிரிகள் பலமுள்ளவர்களாகவும் முஸ்லிம்களை மானபங்கம் செய்வதில் குதூகலங்கொண்டவர்களாகவும் இருந்து கொண்டு வந்த காலத்தில் முஸ்லிம் பெண்கள் வெளியில் தலையைக் காட்டுவதோ, அவர்கள் குரல் வெளியில் வருவதோ, அவர்கள் ஓர் இல்லத்தில் இருக்கிறார்கள் என்று எதிரிகளுக்குத் தெரிந்து விடுவதோ ஆபத்தாக விருந்தது. முஸ்லிம் பெண்களின் கற்பை யழித்து மானபங்கம் செய்து தங்களுக்கு இஸ்லாத்தின் பேரிலும் முஸ்லிம்களின் பேரிலும் உள்ள குரோதத்தைத் தீர்த்துக்கொள்ளக் கங்கணங்கட்டிக்கொண்டிருந்த அந்த மத்திப காலத்தில் முஸ்லிம் பெண்கள் இருக்குமிடந் தெரியாமல் அடைக்கப்பட்டு வைக்கப்படவேண்டியது அவசியமாயிற்று. இங்கிருந்துதான் இந்தக் கோஷாப் பர்தா வழக்கம் முஸ்லிம்கள் மத்தியில் நுழைந்து விட்டதென்று சரித்திரம் கூறுகின்றது"

என்று நண்பர் குலாம் மொட்டையாக அந்தச் சரித்திரப் புத்தகம் இன்னதென்று கூறாது எழுதியிருக்கிறார். அப்படி புத்தகத்தைக் குறிப்பிட்டு எழுதியிருப்பாராயின் அவர் கூற்றின் வண்டவாளம் தெரிந்துவிடும். போகட்டும், அவர் இனிமேலேனும் அந்தப் புத்தகத்தைச் சுட்டி காட்டி தகவல் அறிவிப்பாராக.

இஸ்லாம் மதம் அறபிதேசத்தில் தோன்றி சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள்காலத்திலேயே ஹிஜாஸ், யமன், யமாமா முதலிய பற்பல மாகாணங்களிலும் பரவிவிட்டது. அதாவது, கிட்டத்தட்ட "ஜஸீரத்துல் அறப்" முழுவதிலும் இஸ்லாம் பரவி ஆதிக்கம் வகித்து வந்தது. நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப்பின் நாயியார்கள் கலீபா பதவி வகித்த காலத்தில் இஸ்லாத்திற்கு வெற்றிக்கு மேல் வெற்றி யேற்பட்டு அப்கானிஸ்தான், பெலுச்சிஸ்தான், ஈரான், இராக், ஷாம், பாலஸ்தீன், எகிப்து முதலிய தேசங்களெல்லாம் முஸ்லிம்கள் கைவசமாயின. அன்று முதல் இன்றுவரை முஸ்லிம்களுக்கு அத்தேசங்களில் ஆதிக்கமும் செல்வாக்குமிருந்து வருவது மாத்திரமின்றி, அவைகளில் முஸ்லிம்கள் தாம் பெரும்பான்மையினராக இருந்து வருகின்றனர். நமது இந்தியாவிலுங்கூட சுமார் 850 வருஷகாலம் முஸ்லிம்களின் ஆதிக்கமே ஏற்பட்டிருந்தது. எனவே, இடைகாலத்தில் முஸ்லிம்களுக்கு இத்தகைய பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்குமாயின் அரேபியா, ஏஷியா மைனர், இராக், ஈரான், அப்கானிஸ்தான் முதலிய நாடுகளில் முஸ்லிம் அல்லாதாரின் ஆட்சி 100, 200 வருஷ காலம்வரை ஏற்பட்டிருந்து, அவர்கள் முஸ்லிம்களைச் சொல்லொணாத் துன்பத்திற்குட்படுத்தி

இருந்திருக்கவேண்டும். இப்படித் துன்பமேற் பட்டபோது அவர்கள் பர்தாவை ஏற்படுத்தி முஸ்லிம் ஸ்திரீகளின் கற்பைக் காக்க வழிசெய் திருக்கவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற் பட்டதாக இஸ்லாமியச் சரித்திரமும் கூற வில்லை, உலகச் சரித்திரமும் கூறவில்லை. எனவே, குலாம் என்பவர் சரித்திரமறியாது கண்மூடித்தனமாக தமது கையில் வந்தவாறு வரைந்துவிட்டார் என்று சொல்லுவதைத் தவிர அவரது கூற்றுக்கு வேறு ஆதாரம் இருப்பதாகக் கூறமுடியாது.

போகட்டும், இந்தியாவிலாகிலும் இத்தகைய நிலைமை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டதாவென்று சிந்தித்துப் பார்த்தாலுங்கூட அதற்கும் ஆதா ரமே இல்லை. இந்தியாவில் இஸ்லாம் நுழைந்த காலம் முதல் முஸ்லிம்கள் அதிகாரம் செலுத் தும் அந்தஸ்திலேயே இருந்துவந்திருக்கிறார் கள். பிறமதத்தார் ஆட்சிபுரிந்த பகுதியிலுங் கூடமுஸ்லிம்கள் செல்வாக்காகவும்கண்ணியமாக வுமே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவ்வாறு குலாம் கோஷா முறையை அகற்றுவதற்கு ஆதாரமற்ற — சரித்திர சம்பந்தமில்லாத — பொய்க்கூற்றை ஆதாரமாகக் கூறுவதால், ஏனைய முஸ்லிம்கள் இவருக்கு குலாம்களாகி விடுவார்கள் என்றும், கண்மூடித்தனமாக இவ ரைப் பின்பற்றி கோஷா பர்தா முறையைக் கைவிட்டு ரிக்ஷாவிலேற்றி அவள் அண்டையில் அமர்ந்து கடற்கரைக்கு வந்துவிடுவார்கள் என் றும் அவர் மனப்பால் குடித்துக்கொண்டிருப் பது வீண் பிரயாசையேயாகும்.

குலாம் என்பவர் பெயரில் மாத்திரம் குலா மாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட வியாசம் எழுதத் துணிந்திருக்க மாட்டார். அவருடைய மனப்பான்மையே குலாமாகிவிட்டதால்தான் இந்த நவநாகரீகத்திற்கும், மானங்கெட்டமே னுட்டுப் பழக்கத்திற்கும் குலாமாகி, இப்படிப் பட்ட அபிப்பிராயங்களைக் கூற முன்வந்திருக் கிறார்போலும். இவருடைய வியாசத்தில் இன் னும் பல தவறான கூற்றுகள் மலிந்து கிடக்கின் றனவாதலின் சமயம் வாய்க்கின் அவைகளைத் துபர்படியாய் நேயர்களுக்கு எடுத்துக் காண் பிப்பாம்.

ஆகவே, குலாம் என்பவர் இவைகளைவிட்டு இஸ்லாம் மதத்திற்கு: திருகுர்ஆன், ஹதீது ஷரீபுகளுக்கு குலாமாகி இம்மை மறுமைப் பேற்றுக்கு ஆளாகும் வழியைக் கடைபிடிப் பாராக.

---

# திருகுர்ஆன் அபார சக்தி

துபைல்இப்னு அம்ரதூஸி (ரலி.) இஸ்லாம் மதத்தைத் தழுவிய வரலாறு.

உலகின்கண் மக்கள் ஏகத்துவமுடைய ஆண்டவனை வணங்குவதைவிட்டு, ஒவ் வொரு வர்க்கத்தாரும் தங்களுக்கென ஒரு பிரத்தியேக வஸ்துவை நாயனென ஏற்படுத்திக் கொண்டும், மானிடர் சன்மார்க்க வழியை விட்டு குபிர், ஷிர்க் என்னும் அந்தகாரப் பள் ளத்தில் ஆழ்ந்தும், 'குபிர்' என்னும் இருள் மக்களின் வதனங்களை கருப்பாக்கியும், பாவம் அநீதி அதிக்கிரமம் முதலிய துர்க்குணங்கள் மானிடர்களை நான்கு திசையிலும் சூழ்ந்து கொண்டும், சன்மார்க்க நெறி தவறி நடப்பதே உலக முழுதும் தாண்டவமாடிக்கொண்டும், உலகின் நாசகாலம் சமீபித்துவிட்டதென மக் கள் கருதும்படியான நிலைமை ஏற்பட்டும் உல கின் நிலைமை அதோகதிக்குள்ளாகுவதற்குள்ள சமீபகாலத்தின் அறிகுறிகள் தென்பட ஆரம் பித்த காலை இஸ்லாம் என்னும் ஒளி அவ்விருள் களை அகற்றிக்கொண்டு பாரான் மலையின் உச் சத்திலிருந்து பிரகாசித்தது ; விக்கிரகங்கள் முகங்குப்புற அடித்து விழுந்தது ; குபிர் ஷிர்க், பித்அத், வழிகேடு, மிருகத்தன்மை ஆகியவை களின் பெயர் நாமங்கூட இல்லாதழிந்தொழிந் தது.

இஸ்லாமென்னும் சூரியன் மெள்ள மெள்ள தன்னுடைய ஒளியினால் அநீதி அதிக்கிரமம் அகங்காரம் மமதை என்னும் உறுதியான கோட்டைகளையெல்லாம் தகர்த்துக்கொண்டே, மக்காவின்கண் பிரகாசிக்கஆரம்பித்து கஃபா ஷரீபினுள் பிரவேசித்தது. கம்பளிப் போர்த் துக் கொண்டு ஆட்டை மேய்த்துவந்த அறப்

வாசியான எழுதப் படிக்கத்தெரியாதவர் 'உம்மி' இருஉலகின் அதிபதியாகவும், உலக வழிகாட்டியாயும், உலக மக்களுக்குச் சன்மார்க்கவழி புகட்டிஈடேற்றமடையச்செய்பவர்களாகவுமாய் விடுவார்களென்றும், மணற்பாங்கான அறப் நாடென்ன? உலகம்முழுதிலும்கல்விபொருமை சமானமென்னும் சமுத்திரம் கொந்தளிப்பில் வந்துவிடுமென்றும், பல நூற்றாண்டுகளாய் ஓயாது எறிக்கப்பட்டு வந்த ஈரான் தேசத்து நெருப்பு அமர்ந்துவிடுமென்றும் முற்கூட்டியே எவருக்குத்தான் தெரியும்?

இதனை சூனியமென்றோ மாந்தரீகமென்றோ கூறமுடியுமா? இல்லை, இல்லை. இது அறப் தேசத்திலுதித்த கம்பளி போர்த்திய உம்மி நபியினுடையவும், திருகுர்ஆன் ஷரீபினுடையவும் உண்மைபோதனையினது மின்சார சக்தியின் பிரயோசனங்களேயாகும். மானிடர்களின் ஹிருதயங்கள் தன்பக்கல் கவரும்படி செய்வதும், தன்பால் செவியுறுபவர்களை தன்மீது மோகங்கொண்ட பயித்தகாரர்களைப்போலாக்கிவிடுவதும், அவர்களின் ஹிருதயங்களில் நேர்மையான நிர்ணயங்களையும் உண்மைபேசுவதன் சக்திகளையும் உண்டுபண்ணிவிடுவதும் குர்ஆன் ஷரீபின் நிகரற்ற அற்புதமாக இருக்கிறது. குர்ஆன் ஷரீப் ஒரு மனிதரை தன் வசப்படுத்திக்கொண்ட ஒரு உதாரணத்தைப் பாருங்கள்! நுபுவ்வத்தின் ஆரம்பகாலத்தில், அரப் தேசத்தின் பிரக்யாதிபெற்ற கவிவாணரும் தத்துவ விஞ்ஞான சாஸ்திரியும் கூர்மையான அறிவாற்றலுடையவருமான 'துபைல்இப்னு அம்ர தூஸீ, என்பவர் ஒருமுறை ஏதோ ஒரு காரியமாக மக்கமாநகர் வந்தடைந்தார். அதுகாலை குரைஷியர் இஸ்லாத்தின்மீதும் அதன் திருத்தூதர்' (ஸல்.) அவர்கள்மீதும் கடும்பகைமை கொண்ட விரோதிகளாக இருந்தனராதலின், இவர்மீது எதுவும் குர்ஆனின் சூனியமேற்பட்டு விடக்கூடாதென்பதையுன்னி உடனே அவரிடஞ்சென்று, "சோதர! முஹம்மது (ஸல்.)பெரிய சூனியகாரராக இருப்பதால், அவர் எங்களை பெரும் தடுமாற்றத்திலாக்கி வைத்திருக்கிறார்; எங்களால் தெய்வமென்று வணங்கப்பட்டு வருவதை குறைகூறுகின்றார்; அவருடைய வார்த்தையில் சூனிய குணமிருப்பதால் ஒவ்வொரு கூட்டம் குடும்பங்களுக்கிடையில் பிரிவினையை யுண்டுபண்ணி தகப்பன் பிள்ளைகள்மீதும் பெண்சாதி புருஷன்மீதும், சகோதரன் சகோதரியின்மீதும் வெறுப்புக் கொள்ளுமாறு செய்திருக்கிறார். ஆகவே, அவருடைய சூனியம் உங்கள்மீது வேலை செய்துவிடாது ஜாக்கிரதையாக இருந்துகொள்ளுமாறு வேண்டுகிறோமெனத் தெரிவித்துக்கொண்டார்கள். இதனை செவியுற்ற துபைல் சிறித்த தொனியில், "அவருடைய சூனியம் என்னிடம் செல்லமாட்டாது; அதுவிஷயமாய் நீங்கள் நிம்மதியோடிருங்கள்" எனக்கூறினார். அதற்கு அந்த குரைஷியர், நீங்கள் இந்த மமதையில் ஏமார்ந்துவிடாதீர்கள்; அவரிடம் மலையையுங்கூட மெழுகுபோலாக்கிவிடக்கூடிய சூனிய சக்தியிருக்கும்போது உங்கள் ஜம்பம் அவரிடம் பலியாது போய்விடும் எனத் தெரிவித்துக்கொண்டார்கள். நல்லது, அவருடைய வார்த்தைக்கூட காதில் படாதிருப்பதற்கும் முஹம்மதை (ஸல்.) சந்திக்காதிருப்பதற்குமான முன் ஜாக்கிரதை செய்துகொள்ளுகிறேன் என துபைல் கூறினார்.

அதிகாலையில் துபைலிப்னு அம்ரதூஸி பள்ளிவாசலின் பக்கல் நடந்து செல்லுவதற்குள்ள சந்தர்ப்பமேற்பட்டு அங்கு போகுங்கால், சூனிய வாக்கியங்கள் காதில் படக்கூடாதென்பதற்காக இருசெவிகளுக்குள்ளிலும் துணி வைத்து அடைத்துக்கொண்டார். இவ்வாறு அவர் தூய்மைபொருந்திய திருவசனத்துக்குச் செவிமடுக்காமலிருப்பதற்கு முயற்சி செய்துவருங்காலை அல்லாஹ் தஆலாவின் நாட்டமானது பிரக்யாதிபெற்ற தத்துவ சாஸ்திரியின் இச்செயலைக்கண்டு சிறித்துக்கொண்டிருந்தது. கம்பளி போர்த்திக் கொண்டிருக்கும் உம்மி நபியின்முன் துபைல்இப்னு அம்ரதூஸி தன் சிரசைப் பணியச்செய்து விடவேண்டுமென்பது அல்லாஹ்வின் நாட்டத்திலிருந்தது போலும். தூய்மைபொருந்திய திருவேத வசனங்களுக்கு அவர் செவிமடுக்கவேண்டுமென்பது அல்லாஹ்வின் நாட்டத்திலிருந்ததால் அவர் பள்ளிவாசலுக்குச் சமீபம் வந்தபோது, இந்தவசனங்களை ஒருமுறையாகிலும் கேட்டு வைக்கவேண்டுமென்னும் எண்ணம் மேலிட்டவராய் மனதை தைரியப்படுத்திக்கொண்டு அங்கு நின்று நபிகள் பெருமானார் (ஸல்.) தொழுகை நிறைவேற்றுவதைப் பார்த்தார். அதுபொழுது தூய்மைபொருந்திப திருவசனத்தின் திவ்விய வாக்கியங்கள் அவரின் ஹிருதயகமலத்தைப்பற்றிக்கொண்டுவிட்டபோது, யான் அபார அறிவுடைய புத்திசாலியென மக்கள் யாவரும் என்னைப்போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவதால்.

எனக்கு, சூனிய வார்த்தைகளுக்கும் அல்லாஹ்வின் திருவசனங்களுக்கு மிடையில் வித்தியாசம் தெரியாமலா போய்விடும்? ஆகவே, அவசியம் இவ்வசனத்தைச் செவியுற்று, உண்மையாகவே இது அல்லாஹ்வின் திருவஸனமாக இருக்குமாயின் அதை ஒப்புக்கொள்வேன்; இல்லாதுபோயின் அடியோடு மறுத்துச் சென்று விடுவேன் என்னும் எண்ணத்தை மனதில் ஸ்திரப்படுத்தியவராய் அங்கு நின்று விட்டார்.

வெகு நேரம் வரை அங்கேயே நின்று திருவசனங்களுக்குச் செவி மடுத்துக்கொண்டிருந்துவிட்டு, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுகையை முடித்துக்கொண்டு வீடு திரும்புங்காலை இவர் பெருமானார் (ஸல்.) அவர்கள் முன்வந்து பாதாரவிந்தத்தை முத்தமிட்டவராய் நிகழ்பெற்ற விஷயங்களை முறைபோல் கூறமுற்பட்டு, "சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களே! குரைஷியர் தங்கள் விஷயமாய், எனக்கு அளவுக்கதிகமான பயங்காட்டியதால் தங்கள் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தையைச் செவியுறலாகாதென காதில் துணி வைத்து அடைத்துவந்தேன். ஆனால் அல்லாஹ்வின் நாட்டம்இதற்குமாறாக இருந்ததால், நான் அந்த இடத்திலேயே நின்று கொண்டு திருவசனங்களைக் கேழ்ப்பதற்குள்ள சந்தர்ப்ப மேற்பட்டுப்போயிற்று" எனத்தெரிவித்துக் கொண்டார்கள். அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் துபைலிப்னு அம்ரதூஸி அவர்களை இஸ்லாத்தை ஒப்புக்கொள்ளுமாறு அழைத்து குர்ஆன்ஷரீபின் திவ்விபவாக்கியங்களை ஓதிக்காண்பித்தார்கள். உடனே துபைல் தன்னுணர்வற்றவராகி கொஞ்ச நேரம் வரை அப்படியே இருந்து விட்டார். பின்னர் தூய்மைவாய்ந்த இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்ட சிறிது காலத்திற்கெல்லாம் சுயபதி சென்றகால், விர்த்தாப்பியதிசையுடைய அவர்களது தந்தை சந்திப்பதற்காக முன்வந்தார். அதுபொழுது துபைல் அவரை நோக்கி, "சங்கை பொருந்திய எனது அருள் தந்தையே! தாங்கள் என்னில் நின்றும் தூரத்திலாய் விடுங்கள்; நம்மிருவருக்கும் எவ்வாறான சம்பந்தமும் துடர்பு மில்லாதிருக்கிறது" என்று கூறினார். இதனை செவியுற்ற தந்தையானவர் மிக்கஆச்சரியத்தோடு காரணமென்னவென வினவினார். அதற்கு துபைல், யான் இஸ்லாம் மதத்தைத் தழுவி இருப்பதும் தாங்கள் காபிராக இருப்பதும்தான் காரணமாகும்; இனி நம்மிருவருக்கிடையில் எவ்வாறான சம்மந்தமிருத்தலும் சாலாது எனத்தெரிவித்துக் கொண்டார். இதனை செவியுற்ற தந்தை, "அருமை மகனே! உண்மையிலே நீர் பின்பற்றியிருக்கும் மார்க்கம் நன்மையளிக்கக் கூடியதாக இருக்குமாயின் என்னையும் அதில் சேர்த்துக் கொள்ளும்" எனத்தெரிவித்துக் கொண்டார். உடனே துபைல் அவரை குளிப்பாட்டி துப்பறவான உடை அணியச்செய்து துய்ய கலீமாவைச் சொல்லிக் கொடுத்து இஸ்லாத்தின் பந்தத்தில் சேர்த்துவைத்து விட்டார். இவ்வாறே அவர் தன் பெண்சாதியையும் இஸ்லாம் மதத்தைத் தழுவச் செய்து விட்டார். இது தூய்மைபொருந்திய குர்ஆன் ஷரீபின் சிறியதோர் அற்புத சக்தியாகும். இது ஒன்று மாத்திரமல்ல, இவ்வாறான கணக்கற்ற சம்பவங்கள் நிகழ்பெற்றதாக இஸ்லாமிய சரித்திரங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. இதனால் இஸ்லாமிய பிரசாரம் குர்ஆன்ஷரீப் மூலம் தக்க முறையில் நடைபெற்று வந்ததென்பதை நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

ஹஸ்ரத் ஸைபிதுனா உமரபாரூக் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைக்கொண்டு சிறப்பிக்கப்பட்டதும் குர்ஆன்ஷரீபின் அற்புத சக்தியேயாகும். அவர்கள் உருவிய வாளைக் கையிலேந்தியவர்களாய் சன்மார்க்கத்தூதர் (ஸல்.) அவர்களது சிரசைக்கொண்டு போகவேண்டும், இஸ்லாம் என்னும் நாமங்கூட உலகிலில்லாது அழித்தொழித்து விடவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆக்ரோஷம் ததும்பியவர்களாய் வெளியில் கிளம்பி வருங்காலை, வேட்டைப்புலி தானே கூண்டில் அடங்கிவிட்டதுபோல், குர்ஆன்ஷரீபினது இனிமையானவும் மனக்கவர்ச்சியை அளிக்கவல்லவுமான ஓசை செவிக்கெட்டியவுடன் தன்னுணர்வற்றவர்களாய் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதற்றஸூலுல்லாஹி என்று ஓதிக்கொண்டு எழுந்தார்கள். இதுவன்றோ இஸ்லாத்தினுடையவும் குர்ஆன் ஷரீபினுடையவும் அபாரசக்தி.

# ஹஸ்ரத் ஷேக் நஜ்முத்தீன் (றஹ்.)

கிரீடாதிபதியாகிய அவ்ரங்கஜேப் ஆலம்கீர் சக்கிரவர்த்தி அவர்களின் உஸ்தாது ஹஸ்ரத் ஷாஹ் நஜ்முத்தீன் (றஹ்.) அவர்கள் ஹிஜ்ரி 1037ம் ஆண்டு றபீஉல் அவ்வல்மீ 14-ந் திகதி பக்தாத் நகரிலுள்ள 'பாபுஷ்ஷேக்' என்னுமிடத்தில் ஜனனமானுர்கள். ஹஸ்ரத் அவர்கள் ஆரம்பமுதல் கூரிய அறிவாற்ற லுள்ளவர்களாயும், நுண்ணிய சிந்தனையுடைய வர்களாகவுமிருந்ததால் 11 பிராயத்திற்குள் குர்ஆன்ஷரீபை மனனஞ்செய்து ஹாபிஸாய் விட்டார்கள். பின்னர் உஸ்தாது ஹஸ்ரத் அப்துற்றஹ்மான் ஆலிம் அவர்களது பிரத்தியேக அனுக்கிரஹத்தால் பெரியபெரிய கஷ்டமான முக்கிய மஸ்அலாக்களையும் வெகுசுலுவில் விளக்கிவைக்கும் ஆற்றல் பெற்றவர்களாய் விட்டார்கள். இவ்வாறு வெளிரங்கக்கல்வியில் ஹஸ்ரத் அவர்கள் தேர்ச்சிபெற்றபின் அல்லாஹ்தஆலாவின் பாதையில் தெண்டிப்புச் செய்வதற்கான சேவையில் தங்கள் முழுநேரங்களையும் செலவிடுவதற்கு முற்பட்டு, சுமார் 11 ஆண்டுகள் வரை இஷாவுக்குச் செய்த ஒலுவைக்கொண்டு பஜ்ர் தொழுகையை நிறைவேற்றி வந்திருக்கிருர்கள். இவ்வாறு வணக்கம் புரிந்துவருங்கால், இராக்காலங்களில் தூக்கம் மிகைத்துவிடுமாகில் ஒருகாலில் நின்றவர்களாய் குர்ஆன்ஷரீப் ஓத ஆரம்பித்து சுப்ஹ் நேரம் வரை மிகபக்தியோடு அதிலேயே ஈடுபட்டிருப்பார்கள்.

அனேக ஆண்டுகள்வரை இராக் தேசத்திய வனங்களில் ஹஸ்ரத் அவர்கள் வணக்கம் புரிந்துகொண்டும், அவ்வனங்களில் கிடைக்கும் பேரீச்சம்பழங்களை தின்றுகொண்டும், இடுப்பில் ஒரு வேஷ்டியும் திரேகத்தில் ஒரு துப்பட்டியும் அணிந்துகொண்டுமிருந்தார்கள் என்றும் அவை இரண்டிலும் அழுக்குப்படிந்துவிடுமாயின் தண்ணீர் துறைக்குச்சென்று துவைத்து சுத்தஞ் செய்துகொண்டு வணக்கத்திலீடுபட்டு விடுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

## இஸ்லாமியப் பிரசாரம்

ஹஸ்ரத் அவர்கட்கு இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதில் அபரிமிதமான விருப்பமேற்பட்டிருந்ததால், தங்களுடைய நேரத்தின் அநேக பாகங்களை அவ்வுத்தமச்சேவையில் செலவிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சொற்பெருக்காற்றுங் காலை அதன் ஒவ்வொருவார்த்தையும் அர்த்த புஷ்டியுள்ளதாகவும் மனக்கவர்ச்சியை அளிக்கவல்லதாயு மிருந்துகொண்டிருந்தது. இந்நிலைமையில் ஒருநாளன்று 'பாபுஷ்ஷேக்' என்னுமிடத்தில் அர்த்தபுஷ்டியுள்ள சொற்பெருக்காற்றினுர்கள். அதனைச் செவியுற்ற யூத கிறிஸ்தவர்களில் 120 பேர்வரை இஸ்லாமைக் கொண்டு சிறப்பிக்கப்பட்டதாக 'தத்கிரத்துல் உப்பாத்' எனும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## சற்குணம்

ஹஸ்ரத் அவர்கள் சற்குணமிக்க சாந்தசீலரான மார்க்கஞான வல்லுனராய்த் திகழ்ந்ததுடன் இனியமொழிகளை இன்பமுடன்எடுத்து இயம்பும் ஆற்றல்பெற்றவர்களாயும் இலங்கினுர்கள். அத்துடன் தயாளத்தன்மையையும் அல்லாஹ்தஆலா அளித்திருந்ததால், அவர்களிடம் வந்து ஒரு வஸ்துவை கேழ்ப்போர் வெறுங்கையோடு திரும்பிச்சென்றது கிடையாது. மேலும், அகப்பெருமை கோபிக்கும் தன்மை முதலிய துர்க்குணங்கள் ஹஸ்ரத் அவர்கள்பால் கொஞ்சங்கூட காணப்பட்டது கிடையாது. ஆனுல் பணக்காரர்களிடம் ஒரு பொழுதும் அடங்கி நடந்தது கிடையாது. அவர்களில், இதரர்களிடம் தங்கள் தேவையைக் கேட்டுக்கொள்ளும் வழக்கமில்லாதிருந்ததால் பிரயாசையோடு முக்கியத் தேவைக்கு வேண்டியவைகளைச் சம்பாத்தியஞ் செய்துகொள்ளுவார்கள்.

## சுன்னத்தைப் பின்பற்றல்

ஹஸ்ரத் அவர்களுக்கு நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றுவதில் அபரிமிதமான பிரீதி ஏற்பட்டிருந்தது. எனவே, தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திலும் பெருமானுர் (ஸல்.) அவர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நடந்துவந்தார்கள். சதாவும் ஏழை சக்தியற்றோர் முதலியவர்களுக்கு உதவிபுரிந்துகொண்டும் வியாதியஸ்தர்களைக் கண்டு அவர்களின்

அவசியங்களை விசாரித்துக்கொண்டுமிருந்தார்கள்.

### சத்தியத்தை வெளியாக்குதல்

ஹஸ்ரத் அவர்கள் தனம் ஐசுவரியங்கள்மீது விருப்பமற்றவர்களாக இருந்தார்களாயின், எவருக்கு முன்பும் உண்மையை வெளிப்படுத்துவதில் சற்றேனும் பின்னடைவதில்லை. இச் சந்தர்ப்பத்தில் ஒருமுறை பக்தாத் நகர கவர்னர், ஹஸ்ரத் அவர்கள் சமுகம்வந்து ஹஸ்ரத் அவர்களை நோக்கி, ஹஜ்ரத்! தாங்கள் ஒரு போதும் என் வீட்டுக்குவந்ததில்லையே என தாழ்மையோடு அறிவித்துக் கொண்டார். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், 'யார் தன்னை மனிதத்தன்மைக்கு மேம்பட்டவரெனக் கருதுகின்ருரோ, இன்னும் எவர் அளவற்ற மமதை கொண்டுமிருக்கிருரோ, எவரின் தர்பாருக்கு ஏழைகள் வருவது பாவமானகாரியமெனக் கருதப்படுகிறதோ, எவர் செய்யும் வேலையில் சிறிய குற்றப்பாடுகூடச் சொல்லுவது கொல்லப்படுவதற்குக் காரணமாக இருக்கிறதோ அந்த அதிகாரியின் சந்திப்பை யான் பெருமையைக் கொள்ளவில்லை. அமீரே! வாழ்க்கையின் இவ்வொளி ஒருகாலத்தில் அமர்ந்துவிடக்கூடியதென்பதையும், நீர் மௌனமுடையவீடடங்கி விடக்கூடியவரென்பதையும், அவ்விடத்தில் இந்த சொத்து சுதந்திரம் தலைமைத்தனம் முதலியயாவும் பிரயோசன மளிக்கமாட்டாதென்பதையும் ஞாபகத்துக்குக் கொண்டுவருவீராக, ஆகவே சாந்தகுணத்தைக் கைகொண்டு நடப்பீராக. தலைமைத்தனத்தைக் கொண்டு பெருமை பாராட்டுவதின் அஸ்திவாரத்தையே இஸ்லாம் மதம் அசைத்துவிட்ட தென்பதும், மனிதன் இதரர்களை வம்பறியாக அடக்கி ஆளுவதை துண்டந்துண்டமாகச் செய்துவிட்டதென்பதும்உமக்குத்தெரியாதா? எனக் கூறினர்கள். ஹஸ்ரத் அவர்களின் இவ்வாக்கியங்கள் பக்தாத் கவர்னரின் ஹிருதயத்தில் அம்பு பாய்வதுபோல் பாய்ந்துவிட்டதால், அவர் தாம் செய்துவந்த தவறுகளையெல்லாம் நினைத்து வருந்தி அல்லாஹ் தஆலாவினிடம் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டார்.

ஒருமுறை திமஷ்க் நகரின் அதிகாரியொருவர் சில தங்கநாணயங்களை ஹஸ்ரத் அவர்களது சமுகம் அனுப்பிவைத்தார். தாங்கள், ஒரு அநியாயக்காரரின் கரம் எந்த வஸ்துவைத் தொட்டிருக்கிறதோ அதனை யான் ஒருபோதும் தொடுவதற்கு விரும்ப மாட்டேன் எனக் கூறி அதனை ஒப்புக்கொள்ளுவதை மறுத்து விட்டார்கள்.

### தியாககுணம்

ஹஜ்ரத் அவர்கள் ஏழைகளின் தேவைகளை விசாரித்து அவைகளை நிறைவேற்றிவைப்பவர்களாயும் தியாக உணர்ச்சி ததும்பியவர்களாயும் மிளிர்ந்து காணப்பட்டார்களாதலின் அநேக நேரங்களில் தாங்கள் பசியோடிருக்கும் நிலைமையில் இதரர்களின் பசியைத் தீர்த்துவைப்பவர்களாக இருந்தார்கள். அவர்களின் சிநேகிதர் சிஷ்யர்களிடமிருந்து ஏதாகிலும் சன்மானம் வருமாகில் ஏழைமாணவர்களையும் அதில் சேர்த்துக் கொள்ளுவார்கள். சாப்பிடுவதற்கு உட்காரும் சமயம் அயல்பாகக்காரர்களில் ஏழையாகவுள்ளவர்களின் விஷயத்தை விசாரித்து, அவர்களில் யாரும் பசியுடனிருப்பார்களாயின் தங்கள் சாப்பாட்டை அவர்கள் வீட்டுக்கு அனுப்பிவிட்டு தாங்கள் சும்மாயிருந்து விடுவார்கள். இஸ்லாமிய சமத்துவத்தையுங்கூட தாங்கள் தக்க முறையில் கொண்டாடுபவராக இருந்தார்கள். எனவே, ஏழைகளுடன் சமத்துவ முறையில் நடந்துகொண்டு அவர்களின் சுகதுக்கங்களில் கலந்து கொள்ளுவார்கள்.

### இந்தியா வருதல்

ஹஸ்ரத் அவர்கள் ஈ. பி. கோ. 1658-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தார்கள். அவ்ரங்ஜேப் ஆலம்கீர் சக்கிரவர்த்தி ஹஜ்ரத் அவர்களின் கீர்த்தி பிரதாபத்தைத் தெரிந்து கொண்டு தன்னிடம் அழைத்து அவர்களின் புகழுக்குரிய சற்குணங்களைக்கண்டு பெரும் உணர்ச்சி பெற்றதுடன் ஹஸ்ரத் அவர்களின் சிஷ்யராகவுமாகி விட்டார். இதுசம்பவம் ஹிஜ்ரீ 1135-ம் ஆண்டில் நடைபெற்றதாகும். பின்னர் ஹஸ்ரத் அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மக்கமா நகரை நோக்கிப் பிரயாணமாகி அதனை முடித்துக்கொண்டு திரும்பி வந்தார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் ஆலம்கீர் சக்கிரவர்த்திக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் :—

" சகல புகழும் ஏகனுகிய அல்லாஹ் தஆலாவுக்குரியதாம். ஸலவாத்தென்னும் கருணை கடைசி நபியாகிய நம் பெருமானுர் (ஸல்.) அவர்கள்பால் உண்டாகக்கடவது. இக்கடிதம் அல்

லாஹ்வின் அடியானுகிய நஜ்முத்தீன் என்பவரால் ஆலம்கீர் பாதுஷாவுக் கெழுதப்பட்டதாகும். அல்லாஹ்வின் கருணை உம்மீது உண்டாவதாக. பிரிவுதலின் காலம் சமீபத்துவிட்டதால் தான் இக்கடிதம் எழுத நேர்ந்தது. ஒருக்கால் இதுகடைசி கடிதமாகவு மிருக்கப்போதும். இக்கடிதத்தில் உம்மை ஏகமாய்ப் புகழ்ந்து, "அஃலாஹஸ்ரத் மேன்மை பொருந்திய சக்கிரவர்த்தி அவர்கள் திருச்சமுகத்துக்கு" என்றெல்லாம்பலவாறு எழுதுவதும் அதனைக்கண்டு தாம் சந்தோஷமடைவதற்கும் இடம் பாடிருந்தது. ஆனல் நான் இவ்வாறு போற்றிப் புகழ்வதை விரும்பவில்லை. சகலவகையான புகழும் அல்லாஹ்வுக்குச் சொந்தமானதாகும். அவனைத்தவிரயுள்ள வஸ்துக்களெல்லாம் அழிந்து நாசமாகக் கூடியவையே. இவ்வாறான வெளிரங்கப் பெருமைகளெல்லாம் அதி சீக்கிரம் முடிவுபெற்று விடக்கூடியவையாகும்.

ஏ பாதுஷாவே! அல்லாஹ் உம்மை அநேக மக்களின் காவல்காரராக ஏற்படுத்தியிருப்பதால், நீர் அவர்களின் பாத்தியா பாத்தியதைகளின் பொறுப்பாளியாக இருந்துவருகிறீர். உமக்கு ஏதாகிலும் கஷ்டம் சம்பவித்துவிடுமாகில் அதைப்பற்றி குற்றமொன்றுமில்லை. ஆனல் எவ்வகையிலும் குடிமக்களுக்கு கஷ்டமேற்படும்படி செய்யலாகாது. தாம் ஒவ்வொரு நாளும் செய்யும் காரியமும், இதுதான் கடைசி நாள் வேலை எனக் கருதிச் செய்யவேண்டும். இவ்வாறான உணர்ச்சி ஏற்பட்டுவிடுமாயின் நீர் இவ்வுலகவாழ்க்கைவிட்டு நிம்மதியாகச் செல்லுவதற்கு ஹேதுவேற்பட்டுவிடும். இதுதான் எனது கடைசி உபதேசமாகும்" என்பதே.

பின்னர் ஹிஜ்ரீ 1139-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல்மீ 7-ம் திகதிக்குச் சரியான ஈ. பி. கோ. 1720-ம் ஆண்டு ஜுலைமீ 23உ இப்பொய்யுலக வாழ்க்கையை நீத்து அல்லாஹ்வின் சன்னிதானமடைந்தார்கள்.

---

## ஸீரத் பிரசங்கத்திலும் தடுமாற்றமா?

### பா. தாவுதுஷாவின் மார்க்கமுரணான கூற்று.

(தென்காசி மௌலவீ முகம்மதுஷாஹ் சாகிப் பாக்கவி வரைவது)

அன்புற்ற நேயர்காள்!

ரபீஉல் அவ்வலென்னும் புனித மாதத்தில் உண்மை முஸ்லிம்கள்வசிக்கும் ஒவ்வொரு ஊர்களிலும் இவ்வருடத்திய மீலாத் ஷரீப் விழாவிற்காக கூட்டப்பெற்ற பற்பல மகாநாடுகளில், நமது உலகரக்ஷகர் சமாதானத் தூதர் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகில் திருஜனனம்புரிந்ததன் சிறப்பும் வாழ்க்கைச் சரிதையின் வரிசையும், நற்குண நல்லொழுக்கத்தின் மேன்மைகளும், பெருமானர் (ஸல்.) அவர்களால் மக்கள் அடைந்துள்ள பற்பல பிரயோசனங்களும் தக்கமுறையில் எடுத்துக்கூறப்பட்டதுடன் ஸீரத் பிரசுரங்களும் வினியோகிக்கப்பட்ட தென்பது உலகறிந்த உண்மையாகும். இவ்விருட விழாவிற்கென்றே பற்பலராலும் பலவிதமான ஸீரத் பிரசங்கமியற்றப்பட்டு எமது பார்வைக் கெட்டியவைகளில், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது ஜனனம், அக்கால அரபிகளின் நிலைமை எவ்வாறிருந்தது, குப்ர் என்னும் அந்தகாரத்தை எவ்வாறு போக்கினர்கள், மக்களுக்கு சற்குண நல்லொழுக்கத்தை எவ்வாறு கற்பித்தார்கள், மக்கள் அடைந்துள்ள பிரயோசனம், உலகமடைந்த சீர்திருத்தம் யாது? என்பனபோன்ற விஷயங்கள் அவைகளில் மிளிர்ந்து காணப்படாநின்றிலங்குகின்றன.

விஷயம் இவ்வாறிருக்க, நம் தென்னிந்தியாவில் காதியானிக் கொள்கையைப் பிரசாரம்புரிந்தும் எழுதியும் வருகிற பா. தாவூத்ஸா சாஹிபால் எழுதப்பெற்ற "மகான் முஹம்மது நபி (ஸல்.) சீர்திருத்தங்களும் யுத்த தர்மமும்" என்னும் புஸ்தகத்தை எடுத்துக்கொள்வோம். அதில் காதியானிக்கொள்கைகள் இடை இடையே புகுத்தப்பட்டும் குர்ஆன் ஷரீபின் ஆயத்துகளுக்கு குடார்த்தங்கள் செய்யப்

பட்டுமிருப்பதுடன் நம் சுத்த சத்திய இஸ்லாத்துக்கு முற்றும் முரண்பாடான பல விஷயங்கள் அதில் காணக்கிடப்பது சாதாரண அறிவுடையோர்களுக்குக்கூட மறைந்த விஷயமன்று. அத்தவறுகளிற் சிலவருமாறு:— ஷெ புத்தகம் 24-ம் பக்கத்தில்,

"நிச்சயமாக நுங்களுக்கு நுங்கள் இரட்சகனிடத்திலிருந்து தெளிவான திருஷ்டாந்தங்கள் வந்திருக்கின்றன; ஆதலின் எவனேனும் (அது உண்மை எனக்) காண்பானாயின் (அதன் நன்மை) அவனது ஆன்மாவிற்கேயாம்; மேலும் எவனேனும் (அவற்றின் உண்மை தேராது) அந்தகனாயிருப்பின் (அதன்கேடு) அதற்கேயாம்" 6-105. "நீங்கள் நன்மைபுரிந்தால் நுங்கள் ஆன்மாவுக்கே நன்மைபுரிவீர்கள்; மேலும் நீங்கள் தீமையிழைப்பின் (அதன்தீயபலன் அவற்றிற்கேயாம்" 17-7 என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். இந்த இரண்டு திருவசனங்களுக்கும், நன்மையும்தீமையும் மனிதனுடைய ஆன்மாவிற்கேயாம் என்று பொருள் செய்திருப்பது இஸ்லாமிய மூலக்கொள்கைக்கு முற்றும் மாற்றமானதாக இருக்கிறது. இவ்வாறு எழுதியதன் நோக்கம், மிர்ஸா குலாம் அஹ்மதால் உர்தூவில் எழுதப்பட்டு இவரால் (பா. தா. வால்) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள 'இஸ்லாமிய ஞானபோதம்' (ஞானபேதம்) என்னும் புத்தகம் பக்கம் 210, 211-ல் "சுவர்க்கம் நரகம் எனப் படுபவைகளெல்லாம் இங்கிருப்பதே போன்ற ஸ்தூல உலகங்களல்லவென்பதையும், ஆனால், அங்குள்ள ஸூக்ஷ்ம உலகத்தின் காரியங்களுக்குரிய மூலங்களெல்லாம் நம்முடைய இகலோகத்தின் ஆத்மார்த்த நிலைமைகளே தமக்கு ஆதார அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றனவென்பதையும் செவ்வனே அறிந்து கொள்ளுகிறோம்" என்று கூறி, மறு உலக வாழ்க்கைகளெல்லாம் ஆத்மார்த்தம் (ரூஹி) என்று எழுதியிருப்பதை ஸ்திரப்படுத்துவதற்காகவே மேலே கூறிய இரண்டு வஸனத்திற்கும் குடார்த்தங்கள்—தப்பானவியாக்கியானங்கள்—செய்திருக்கிறார். இதுசுத்தத்தவறான காதியானிக் கொள்கையாகுமென்பதிலய்யமில்லை. ஆகவே, அவ்விருதிருவஸனங்களும் ஆத்மா சரீரம் இவ்விரண்டையும்தான் குறிக்குமேயல்லாது இவர் கூற்றுப்படி ஆத்மாவை மட்டும் குறிக்காது. உதாஹரணமாக, நிச்சயமாய் நன்றியாளர் (உண்மை விசுவாசி) கள் சுவர்க்கத்திலிருப்பார்கள்; இன்னும் நிச்சயமாக கெட்டவர் (காபிறீன்) கள் நரகத்திலிருப்பார்கள், (82 - 13, 14) என்று அல்லாஹ் தனது திருமறையில் கூறியிருப்பதில் ஆத்மா மட்டும் சுவர்க்கம் நரகத்தின் இன்பத்தை அனுபவிக்குமென குறிப்பிடப்பட்டிருக்கிறதெனக் கூறமுடியுமா? இதுபோலொத்த வஸனங்கள் குர்ஆன்ஷரீபின் அநேக இடங்களில்காணப்படுகின்றன. அவைகளை ஊன்றி கவனிப்போர் உண்மையைக் கண்டுகொள்வர்.

மேலும் அப்புத்தகம் 29-ம் பக்கத்தில்,

"அன்னிய மதத்தைச் சார்ந்த நங்கையரை வாழ்க்கைத் துணைவிகளாய்க் கொள்ளுதல் ஆகுமென அனுமதி (குர். 5: 5) அளிக்கும் ஒருமார்க்கம், அம்மதவாதிகளோடுஉறவாடுதலை விலக்குதல் எவ்வாறு சாலும்? என வரையப்பட்டிருக்கிறது.

குர்ஆன் ஷரீபின் 5: 5. வஸனத்திற்கு இம்மாதிரி பொருள் செய்திருப்பது மகா மோசடியும் ஏமாற்றமுள்ள பெருந்தவறாக இருப்பதுடன் அல்லாஹ்வின்மீது படுதூறு கூறுவதாகவு மிருக்கிறது.

நேயர்காள்! இவ்வுலகில் எஹூதி நஸாறா மஜூஸி முஷ்ரிக் தஹ்ரீ காதியானீ இன்னும் இதுபோலொத்த அநேக மதஸ்தர்களிருக்கின்றார்கள். இவர்களடங்கலும் இஸ்லாத்துப் புறம்பான அன்னியர்களேயாகும்.

ஆகவே, குர்ஆன் 5:5ல் கூறப்பட்ட ஆயத்தின் தாத்பரியம், கிதாபிய்யத்தான பத்தினித்தனமுடைய பெண்களை (மணம் முடித்துக் கொள்வதை) உங்களுக்கு ஹலாலாக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். மேலும் கிதாபிய்யத்தான பெண் என்றால் முந்திய இருகூட்டமாகிய எஹூதி, நஸாறாவிலுள்ள பெண்களை மட்டும் குறிக்குமேயன்றி மற்றமதத்திலுள்ள பெண்களைக் குறிக்காது. இந்நிலைமையில், பொதுவாக அன்னியமதத்தைச் சார்ந்த நங்கையரை வாழ்க்கைத் துணைவிகளாய்க் கொள்ளுதல் ஆகுமென பா. தாவூத்ஷா சாஹிப் எழுதியிருப்பது எவ்வளவு தூரம் மோசடியாகுமென்பதை நன்கு கவனித்துப் பாருங்கள்!

இவ்வித குடார்த்தம் எந்த தப்ஸீரிலிருந்து தான் எழுதினாரென்பது எமக்குப் புலனாகவில்லை. ஒரு சமயம் லாகூர் முஹம்மதலி காதியானியின் ஆங்கில தப்ஸீரிலிருந்து காப்பியடித்திருக்கலாம், அல்லது வான்கோழி தன்னை மயில் என்று எண்ணிக்கொண்டது

போல் இவரும் தன்னை ஒரு முபஸ்ஸிரென்று எண்ணிக்கொண்டு தம் மனதில் தோன்றியதை எழுதியிருக்கலாம், அல்லது பவல்பூர் சமஸ்தானக் கோர்ட்டில், காதியானிகள் முஸ்லிம் சமூகத்தை விட்டுப் புறம்பானவர்களென தீர்மானிக்கப்பட்டு, காதியானீ மதத்தில் சேர்ந்துகொண்ட ஒரு ஆணுக்கும் முஸ்லிமாகவுள்ள அவனுடைய பெண்சாதிக்கு மிடையிலுள்ள விவாகப்பந்தம் நீங்கிவிட்டதெனத் தீர்மானமாயிருப்பதை மாற்றி, எந்த சமூகத்தினருடனும் விவாக சம்பந்தஞ் செய்துகொள்ளலாமெனக் கூறுவதற்காக இவ்வாறு எழுதியிருக்கிறாரோ அறிகிலேம்.

ஆகவே 1-7-35-ல் வெளியான ஹி. இ. ல் "ஸீரத் பிரசங்கத்திலும் காதியானிப் பிரசாரமா?" என்ற தலையங்கமிட்டு நண்பர் மௌலானா அபுல்ஹஸன் சாஹிப் மத்ராஸீ அவர்கள் அறைந்த ஆணித்தரமான வினாக்கட்குத் தக்கவிடை அளிப்பதுடன் எம்முடைய வீரமான கேள்விகட்கும் விரைவாக விடை தரும்படி அறைகூவி அழைக்கின்றேன். இவ்வாறு கூடார்த்தங்கள் செய்து மக்களை வழி கேட்டிலாக்க முயற்சிப்பது காதியானிக்கொள்கையை கைவிடாது பரத்திவர முயற்சிப்பதற்குள்ள அறிகுறியாகுமென்பது சுன்னத்ஜமாஅத்துக் கொள்கையுடைய உண்மை முஸ்லிம்களுக்கு மறைந்த விஷயமன்று. எனவே பா.தா. ஸீரத் பிரசங்க புத்தகத்தில் தாம் இழைத்துள்ள சன்மார்க்கமுரணான தவறுகளை உணர்ந்து அவைகளைத் திரித்தி அமைக்க தைரியமாய் முன்வருவாராக. சத்தியத்தைத் தெரிந்து தயங்காமல் அதனைக் கைகொண்டவர்கட்கு அல்லாஹ்வின் அருட்கொடை உண்டாவதாக.

---

சென்ற ஜுலை மாதத்திய இதழ் 260-ம் பக்கத்தின் இரண்டாவது காலம் 42 வது வரியில் 'ஜனனமானர்கள்' என்றிருப்பதை மரணமானர்கள் என்று திருத்தி வாசித்துக்கொள்க.

---

## சத்திய இஸ்லாத்தின் அசத்தியப் பிரசாரம்

நாகூர் M. K. A.-வின் சரித்திர ஆராய்ச்சித் திறமை!

சென்ற ஜுலைமீ 19உ வெளியான மன்னார்குடி "சத்திய இஸ்லாம்" என்ற பத்திரிகையில் நாகூர் ஜனப் M. K. A. என்பவரால் வரையப்பட்டதாக "ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் புதுமைகள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு வியாசம் வெளியாகி இருக்கிறது. இவ்வியாசத்தைப் பார்த்த எவருக்கும் சிரிப்புண்டாகாதிருக்க முடியாது. வெனெனில், நமது நாட்டிலுள்ள சில மூடர்கள் மார்க்கக்கல்வி, சரித்திர ஆராய்ச்சி முதலியன இல்லாமல் தோன்றித் தங்களைப் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக்கொண்டு பலவாறு எழுதித் தங்களது அறியாமையைக் காட்டிக்கொள்வதற் கொப்ப, இவ்வியாசக் கர்த்தாவும் தமது அறியாமையைக் காட்டிக்கொண்டிருக்கிறார். அதாவது, ஹஸ்ரத்ஸெய்யதுனாமுஹிய்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றழி.) அவர்கள் பிறந்த காலத்தில் இஸ்லாமிய உலகமிருந்த நிலைமையையும் அப்பெரியார் பிறந்து வளர்ந்து இஸ்லாத்திற் காற்றிய தொண்டுகளையும்பற்றி ஜுலை மாதத்திய ஹிபாஜத்துல் இஸ்லாமில் வெளியிடப்பட்ட "ஞான தினகரன்" என்ற கட்டுரையில் ஏதோ தவறிருப்பதாக ஷை கட்டுரையாளர் உளரிக்கொட்டியிருக்கிறார். அவருடைய உளரல்களைப்பற்றி யாரும் லக்ஷியம் செய்யப்போவதில்லை. என்றாலும், பொதுஜன நன்மையை உத்தேசித்து அவ்வியாசத்தில் சொல்லப்பட்ட தவறுகளைப்பற்றிச் சிறிது கூற விரும்புகிறோம். ஷை வியாசத்தில் அவர்,

> "தலை கீழ்ப்பாடமாக்கி முஹ்யித்தீன் ஆண்டகைக்கு முன் உலகமே அந்தகாரத்தில் மூழ்கியிருந்ததென்று விஸ்தரிப்பது விந்தையினும் விந்தையே"

என்று எழுதி இருக்கிறார். "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்றபடி ஒன்று நினைக்க ஒன்றை எழுதித் தமது அழுக்காற்றைக் காட்டிக்கொண்டிருக்கிறார். ஷை யாரின் வியாசத்தில் எழுதப்பட்டிருப்பதாக யாம் மேலே எடுத்துக் காட்டிய வாக்கியத்தின் கருத்து "ஹிபாஜத்

துல் இஸ்லாம்'' பத்திரிகையின் பிரஸ்தாப வியாசத்தில் இருப்பதாக அவர் ருஜூப்பிக்கு மாறு அறைகூவி அழைக்கிறோம். போகட்டும். இக்கட்டுரையாளர் கூறும் கூற்று ஒவ்வொன்றுக்கும் மறுப்பாக யாம் சரித்திரப் பூர்வமாக ருஜூப்பிக்க முடியும். ஆனால், இக் கட்டுரையாளரும் இதனைப் பிரசுரித்தவரும் தங்கள் தாவாவை ருஜூப்பிக்க தைரியமாகமுன் வருவார்களா என்று வினவுகின்றோம். தவிரவும், இவ்வியாசகர்த்தா மார்க்கக்கிரந்தங்களைப் பார்த்து இவ்விஷங்களைத் தெரிந்துகொள்ளாது ஏதோ பத்திரிகைகள் மூலமாக அறிந்துகொண்டிருப்பதாகக் கூறுகின்றார். ஆகவே, இவருக்கு ஒரு பத்திரிகையில் எழுதப்பட்ட வியாசத்தில் சந்தேகந் தோன்றுமாயின் அப் பத்திராசிரியரிடம் எழுதிக்கேட்டால் அதற்குரிய சான்றுகளைச் கூறி அவரது சந்தேகத்தை நிவர்த்திசெய்துகொள்ளலாம். நேர்மையான இம்முறையை விட்டுவிட்டு குதர்க்கவாதம் புரியத் தலைப்பட்டு விட்டதால் நாம் அதற்கு மறுப்பு எழுத நேர்ந்திருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள், ஸஹாபிகள், தாபியீன்கள், தபஉதாபியீன்கள் ஆகிய நான்கு காலத்திற்குப் பின் பஸாதுடைய காலம் தோன்றுமென்றும், ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஜத்திதுகள் தோன்றி முஸ்லிம்களைச் சீர்திருத்தி அவர்களை விழுப்பஞ் செய்வார்கள் என்றும் எம்பெருமான் (ஸல்.) அவர்கள் முன்னறிக்கைகள் செய்திருப்பதும், இந்த ஹதீதுகளின்படி அப்படிப்பட்ட பஸாதான காலம் 400-வது வருஷத்திற்குப் பிறகுதான் என்றும் "ஸீரத்துன்னபி" மூன்றாவது வால்யூம் 652-653-ம் பக்கங்களில் தக்க ஆராய்ச்சியுடன் குறிப்பிட்டிருப்பதும் இக்கட்டுரையாளருக்குத் தெரியவில்லைபோலும்.

தவிர, ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம்கஸ்ஸாலீ (றஹ்) அவர்கள் இதே ஹிஜ்ரி 450-ல் பிறந்து 505-ம் வருஷம்வரை ஜீவித்திருந்து அக்காலத்தில் தோன்றியுள்ள மார்க்கப்புரட்டர்களையும், மதப்பேதகர்களையும் தர்க்கவாதங்களின் மூலமாக மட்டுமில்லாமல், "இஹ்யா உல் உலூம்", "அத்தப்ருகத்பைனல் இஸ்லாமி வஸ்ஸந்தகா" முதலிய நூற்றுக் கணக்கான நூல்களை எழுதி குதர்க்கவாதிகளையும் முல்ஹிதுகளையும், காபிர்களையும், யூத கிறிஸ்துவர்களையும், மஜூஸிகளையும் அடக்க முயன்றதுடன் குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளாக முஸ்லிம்களுக்குள் முளைத்த வழிகேடர்களையும், அநியாய அரசர்களையும் அடக்குவது சம்பந்தமாய் பல அரிய பெரிய கித்தாபுகள் எழுதியதும் உலகமறிந்த விஷயம். இதே காலத்தில்தான் நமது ஷெய்குனா வஸெய்யிதுனா கௌதுல் அஃலம் முஹியத்தீன் அப்துல்காதிக் ஜெய்லானி (றஹ்.) அவர்கள் பிறந்ததும் சீர்திருத்தங்கள் செய்ததும் உலகமறிந்த இரகசியமாகும். இப்பெரியார்கள் இம்மாதிரியான ஊழியஞ் செய்ததனாலேயே இமாம்கஸ்ஸாலீ(றஹ்.) அவர்களுக்குமுஹிய்புஸ்ஸுன்னா'' என்றும், ஹுஜத்துல் இஸ்லாம்'' என்றும், ஸெய்யிதுனா அப்துல்காதிர் ஜீலானி (றஹ்.) அவர்களுக்கு முஹிய்யுத்தீன் என்றுஞ் சிறப்புப் பெயர்களுண்டாயின. அக்காலத்தின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதுபற்றி மௌலானா ஷிப்லீமர்ஹூம் அவர்கள் "அல் கஸ்ஸாலீ" என்ற கித்தாபில் எழுதி இருப்பதையும் பார்த்துக் கொள்ளலாம். உருது பாஷையிலுள்ள இந்த கித்தாபைப் படித்துப் பார்க்கவும்கூட இவ்வியாசக் கர்த்தாவுக்கு சக்தி இல்லையானால் உத்தமபாளையம் மௌலவி S.S. முகம்மது அப்துல் காதிர் சாகிப் பாக்கவி அவர்களால் எழுதப்பட்ட "இமாம் கஸ்ஸாலீ" என்ற தமிழ்ப் புத்தகத்தைப் பார்த்தாலுங்கூட ஓரளவு உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். தமிழ்ப் புத்தகங்களையுங்கூட வாங்கிப் படித்து சரித்திரங்களை ஓரளவேனும் உணர்ந்துகொள்ளாதவர் சரித்திரப் பூர்வமான சமாசாரங்களில் ஆழந்தெரியாமல் காலைவிட்டுக்கொண்டு தத்தளிப்பது விந்தையேயாகும். இனியேனும் இவ்வியாச கர்த்தா சிறுபிள்ளைகளைப்போல், அழுக்காறு கொண்ட அறிவிலிகளைப்போல், ஒன்றுமுணரா மூடர்கள் தங்களைப் பெரிய மேதாவிகள் என்று நினைத்துக்கொண்டு வாய் வேதாந்தம் பேசியும் பொறுப்பற்ற தன்மையில் எழுதியும் வருவதுபோல் எழுதாமல் நன்கு யாராய்ந்து விஷயங்களை தக்கபடி உணர்ந்து வியாசம் எழுதக்கற்றுக் கொள்வாராக.

மேலும் அவர் தமது கட்டுரையில், "ஒரு சில தேசிய உள்நாட்டுக் குழப்பங்களால் மட்டும் இஸ்லாத்தில் குபிர், இல்ஹாத் பரவிற்றென்பது எவராலும் ஒப்புக்கொள்ளப்படாத

விஷயம் என்று எழுதி இருக்கிறார். அக்கால ராஜியநிலைமையும், அக்காலத்திற்றோன்றியுள்ள வகுப்புப் பிணக்குகளும், மந்திரி பிரதானிகள் கொலை செய்யப்பட்டதும், பாத்தினியா வகுப்பினர், இஸ்மாயிலிய்யா வகுப்பினர் செய்த மதகுதர்க்கங்களும், பூலோக சுவர்க்கம் உண்டாக்கி கள்சாராயம் குடிப்பதுங்கூட ஹலால் என்று வாதித்ததும், அக்காலத்தில் ராஜீயவிஷயங்களுக்காகத் தோன்றிய இக்கூட்டத்தினர் ஷியாக்களென்று பெயர் வைத்துக்கொண்டு ஷியாக்களிலே பலபிரிவுகளை யுண்டாக்கியதும் சில முஸ்லிம்கள் விஷயந் தெரியாது அவர்களில் கடப்பான ஷியாக்களுடன் கலந்துறவாடியும் வந்ததால் அது விஷயமாக உலமாக்கள் பத்வாக் கொடுக்க நேர்ந்ததும் இஸ்லாமியச் சரித்திரத்தில் தெள்ளத் தெளியக் கிடக்கின்றது. இஸ்லாமிய சரித்திரத்தின் வாசனையைக்கூட அறியாத இந்த கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமெதற்கு என வினவுகின்றோம்.

“முஹ்யித்தீன் என்பதற்கு ‘தீனை—சன்மார்க்கத்தை உயிர்ப்பித்தவர்’ என்பதுதான் பொருளே யல்லாது, வழுக்கடைந்திருந்த உலகத்தை உயிர்ப்பித்தவர் என்பதல்ல” என்று கட்டுரையாளர் கூறுகிறார். முஹிய்யுத்தீன் என்ற பதத்துக்கு ஹி. இ. -ல் “வழுக்கடைந்திருந்த உலகத்தை உயிர்ப்பித்தவர்” என்று பொருள் செய்யப்படவில்லை. வழுக்கடைந்திருந்த உலகத்தை உயிர்ப்பித்தவர் என்ற வார்த்தைகளுக்கு துன்மார்க்கத்தைப் பரவச்செய்தவர் என்ற கருத்து தோன்றுமே யல்லாது, துன்மார்க்கத்தைப் போக்கியவர் என்ற கருத்து ஏற்படாது. ஆகவே, பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும் என்றபடி, ஷை கட்டுரையாளர் வழுக்கடைந்திருந்த உலகத்தை விழுப்பஞ் செய்பவர் என்ற பொருள் என்றேனும் எழுதி இருந்தால் இவருக்குத் தமிழிலேனும் சிறிது ஞானமுண்டு என்று சொல்லலாம். பொறாமை தலைக்கேறி இருப்பதால் இப்பதங்களை எப்படி உபயோகிக்கவேண்டும் என்பதைக்கூட அவர் தெரியால் வரைந்திருக்கிறார். இவரது ஆத்திரத்தின் போக்குத்தானென்னே! ஹி. இ. -ல் “உலகத்துக்கு மெஞ்ஞான வழிகாட்டி, சன்மார்க்கத்தை உயிர்ப்பித்தவர்கள் என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஹஜ்றத் ஷெய்கு முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றஹ்.)” என்று எழுதி இருப்பதை இக்காமாலைக் கண்ணார் பார்க்கவில்லை என்பதை நேயர்கள் அறிவார்களாக.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் உலகத்துக்கு வழிகாட்டினார்கள் என்ற வாக்கியத்துக்கு, பெருமானார் (ஸல்.) அவர்களின் போதனையைச் சிரமேற்கொண்டு மகான்களான ஸஹாபிகள் எவ்வாறு நடந்துவந்தார்களோ அவ்வாறே உலகம் முடியும்வரை எல்லாரும் இருப்பர் என்று கருத்தமைத்துக்கொண்டு ஷை கட்டுரையாளர் “முஹிய்யுத்தீன் ஆண்டகைக்குமுன்தோன்றிய முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் என்ன செய்தார்கள் அன்னாரால் உலகம் சீர்படவே அவர்கள் அனுப்பப்பட்டதாக ஆண்டவன் சொல்வதன் கருத்தென்ன? அவர்கள் பிரசாரத்தால் உலகத்திற்கு ஒருபயனும் விளையவில்லையா?” என்று வினவி இருக்கிறார். தங்களுக்குபின் அநேக வழிகேடர்கள் தோன்றி சன்மார்க்கத்திற்கு பல இன்னல்களை விளைவிப்பர், என்னுடைய உம்மத்துகளில் தோன்றக்கூடிய முக்கியஸ்தர் அதனை அடக்கி சீர்திருத்தம் செய்துவிடுவர் என நம் பெருமானார் (ஸல்.) அவர்களே முன்னறிக்கை செய்திருக்கும் விபரங்கூட இவ்வறிவிலிக்கித் தெரியாது போலும். இவருடைய வினாவிற்கு “பின் 470 வருஷம் வரை தோன்றிய சஹாபாக்களும், தாபியீன்களும், தபஉதாபியீன்களும் மற்றுமுள்ள இமாம்களும் நமது நாயகம் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செய்த எத்தனையோ அரியபெரிய தியாகங்கள் என்னவாயிற்று” என்று அக்கட்டுரையாளர் எழுதி இருக்கும் வாக்கியங்களே தக்க பதிலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எவ்வாறெனில், நாயகம் (ஸல்.) அவர்கள் செய்த சிறந்த காரியங்களைக் கெடுக்க முயன்ற குதர்க்கவாதிகளை ஸஹாபாக்களும், தாபியீன்களும், தபஉதாபியின்களும், இமாம்களும் அரியபெரிய தியாகம் செய்து அடக்கி ஒடுக்கிவைத்தது போல், ஹிஜ்ரீ 470-ல்தோன்றியமுல்ஹிதுகளையும், ஜிந்தீக்குகளையும், மற்றுமுள்ள குபிர் கூட்டத்தாரையும் நமதுஷெய்குனா அவர்கள் அடக்கி ஒடுக்கி, அவர்களால் உண்டாக்கப்பட்ட இல்ஹாதுகளையும் குப்ரியாத்துகளையும் ஒழித்தார்கள் என்பதை இவர் உணருவாராக.

ஹஸ்ரத் கௌதுல் அஃலம் (றஹ்.) அவர்கள் செய்த சீர்திருத்தங்களை விபரிப்பதானது எம்பெருமானார் (ஸல்.) அவர்களது மேன்மை

யைக் குறைக்கக்கூடியதென்று இவ்வியாச கர்த்தா குறிப்பிடுகின்றார். இவருடைய அறியாமைக்கு வருந்தாதிருக்கமுடியவில்லை. எம் பெருமானார் (ஸல்.) அவர்கள், உலகம் முழுவதும் இருள்சூழ்ந்து அந்தகாரத்திலிருந்த காலத்தில் இஸ்லாத்தின் ஞானதீபத்தைக் கொழுத்தி அதனை உலகமுழுவதிலும் பரவச் செய்வதற்குள்ள அஸ்திவாரத்தையும் நிலை நாட்டி அதற்கேற்படக்கூடிய இடையூர்களையும் அவைகளைக் களையவேண்டிய மார்க்கங்களையும் விபரமாக அறிவித்தார்கள். அதனைப்பின் பற்றியே சஹாபாக்களும் தாபியீன் தபஅத் தாபியீன்களும் இமாம் குத்புமார்களும் சேவை புரிந்து இஸ்லாத்தின் கம்பீரத்தை நிலைநாட்டி வைத்தார்கள். மேலும், அறப்நாட்டிலிருந்து உலகின் நாலுபக்கங்களிலும் இஸ்லாம் சன்னஞ் சன்னமாக நாளிதுவரை பரவிக்கொண்டே போகிறது. இத்தோரணையில் ஹஸ்ரத்கௌதுல் அஃலம் (றழி.) அவர்கள் செய்த பிரசாரமும் சீர்திருத்தமும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடைய மேதை மரியாதையை அதிகப்படுத்தக் கூடியவைகளேயன்றி பெருமானார் (ஸல்.) அவர்கள் செய்யத்தவறிய காரியத்தை ஹஸ்ரத் ஷெய்குனா அவர்கள் செய்ததாகக் கூறி பெருமானார் (ஸல்.) அவர்களின் பதவிக்குக் குறைவு ஏற்பட்டுவிட்டுவதாக எழுவது அறிவின்மையேயன்றி வேறில்லை.

மேலும், ஹஸ்ரத் அவர்களும் அவர்களின் முரீதீன்களில் தோன்றிய மகான்களும், இஸ்லாத்தின் பெயர் நாமங்கூடக் கேட்டில்லாத அநேக தேசங்களுக்குச் சென்று அங்கே இஸ்லாத்தின் துவஜத்தை உயர்த்தி மிளரச்செய்தார்களென்பது சரித்திரச் சான்றாகும். இவைகளெல்லாம் பெருமானார் (ஸல்.) அவர்களின் மரியாதையைக் குறைக்கக் கூடியவைகளா (ஆஹ்! அப்ஸோஸ்.)

வலிமார்களில் குத்பியத்துடைய பதவியை அடைந்தவர்கள் அவ்வக்காலத்திலுள்ள குறைகளை கவனித்து அதற்குவேண்டிய சீர்திருத்தங்களைச்செய்துவருவார்களென்பது சாமான்ய முஸ்லிம்களும் அறிந்திருக்கக்கூடிய விஷயமே. ஆனால் இது சம்மந்தமாக விபரிக்கப்புகின் கட்டுரை விரிந்துவிடும் என்றாலும் வாசகநேயர்களின் நன்மையைக் கருதி அதனை மற்றொரு சமயம் விபரிப்போம். நாகூர் ஷரீபிலுள்ள பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் இவ்வாறான விஷயத்தில் குறுக்கிட்டது மிகமிக ஆச்சரியமே.

ஷெ ச. இ. பத்திராதிபர்கள் ஹி. இ. விஷயமாக ஏதாகிலும் எழுதிவிடவேண்டுமென்னும் நோக்கத்தோடு பலவாறு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அதற்கொன்றும் வழி தோன்றாது இவ்வாறான குறுக்கு வழியில்—சற்றும் பொருத்தமில்லாத சரித்திர ஆராய்ச்சியற்ற வழியில்—இறங்கி ஏதோமறுப்பு எழுதிவிட்டதாகத் தோன்றும்வகையில் பிதற்றியிருக்கின்றார்கள். இவர்களது உண்மையற்ற தன்மை நேயர்களுக்குத் தெரியாமற்போகாதென்பது திண்ணம். (தொடரும்)

---

# பாவலரின் விடை மழுப்பல்

சிங்கை, ஜனாப் இ. மு. முஹம்மது யூசுப் அவர்கள் வரைவது

21-6-35-ல் வெளிவந்துள்ள மன்னார்குடி "சத்திய இஸ்லாம்" வாரப் பத்திரிகை தனது தலையங்கத்தில் "காதியானிகள் முஸ்லிம்களா? அல்லாதவரா?" என்ற மகுடந்தாங்கி வெளிவந்த வியாசத்தை கண்ணுற்ற முஸ்லிம் சகோதரர் யாவர்க்கும் மேற்படி சத்திய இஸ்லாம் ஆசிரியரின் உண்மையற்ற மனப்பான்மை பிரத்தியக்ஷமாய்த் தெரியவருமென்பது திண்ணம்.

ஏனெனின், பிரஸ்தாப மகுடத்தை நம் முஸ்லிம் சகோதரர்களில் ஒருசிலர் வினவாக வினவியிருப்பதையும், அவ்வினாவிற்கு ஆசிரியர் ஜனாப் பாவலர் S. M. முஹம்மது யூசுப் சாஹிபின் விடைமழுப்பலையும் ஊன்றி கவனிப்பவர் வருந்தாதிரார்.

அஃதாவது :—"காதியானிகள் முஸ்லிம்களா? அல்லாதவரா?" என்ற வினாவை எடுத்துக்கொண்டோமாயின், அஃதொரு போதிய

விளக்கமற்ற வினாவாகவே யிருக்கிறது; ‘காதியானி’ என்பது காதியான் என்ற ஊரை யுடையவர் என்றே பொருள்படும். இந்நிலைமையில், காதியான் என்ற ஊரையுடையவர்களை, முஸ்லிம்களென்றும், அல்லாதவரென்றும் முடிவுகூறுதல் எங்ஙனம் சாலும்?’ என்று பாவலர் வெகு தந்திரமாய் விடைமழுப்பியிருப்பதை நாம் எடுத்துவிளக்கத் தேவையில்லை.

மேலும் அவர், “காதியான் என்ற ஊரையுடையவர்கள் அவர்களின் கொள்கைக்கிணங்க முஸ்லிம்களாகவோ அல்லது அல்லாதவராகவோ இருக்கலாம். அப்படியிருக்க, பொதுவாகக் காதியானிகள் இன்னார்தாம் என்று வரையறுத்துக் கூறுதல் அறியாமையின் கூற்றேயாகிவிடும்.” என்று வரைந்திருக்கிறார். இதுவும் நேர்த்தியான மழுப்பலென்பது தெளிவு.

இதுபொழுது ‘காதியானிகள்’என்றால்மிர்ஜா குலாம் அஹ்மத் என்பார் தோற்றிவைத்த இயக்க (மத)த்தை பின்பற்றியவர்களென்பது உலகமறிந்த உண்மை. இதற்கு நேர்மாறாய், ‘பாவலர்’ பட்டம் வகித்து பத்திரிகைக்கு ஆசிரியராய் திகழும் ஒருவர், காதியானிகள் என்றால் இன்னார்தாமென்பதை இன்றுவரையறியாதிருப்பது இழுக்கன்றோ?. பிரஸ்தாப வினாவின் கருத்துதானென்ன? உலகமறியகிடக்கத்தக்க ஒரு சமயத்தாரைச்சுட்டிக்காட்டவில்லையா? எனவே, ஒரு பத்திரிகையின் ஆசிரியரென்ற பதவியிலிருப்பவர் இவ்வளவு சாதாரண நபராயிருப்பது பெரிய ஆச்சரியமல்லவா?

மேலும் பாவலர், “பொதுவாக ஒரு சிலரால் குறை கூறப்பெறும் காதியானிகளென்போர்” என வரைந்திருக்கிறார். இவ்வாசிரியரின் கூற்றைக் கண்டு நகையாதிருக்க முடியுமோ? “சூரியனை சுளகால் மறைப்பதாக இருக்கிறது.” என்று சாதாரணமாய் சொல்லிக்கொள்ளும் பழமொழிக் கொப்பாயிருக்கிறது பாவலரின் இக்கூற்று. இவ்வுலக முழுவதும் வதியும் ஸுன்னத் வல் ஜமாஅத் முஸ்லிம்கள் ஏகோபித்து ஒருமுகமாய் எதிர்த்து நிற்கும் காதியானி சமயத்தாரை, “ஒருசிலரால் குறைக்கூறப் பெறும் காதியானிகளென்போர்” என பாவலர் கூறுவது சூரியனை சுளகால் மறைப்பது போலல்லவா?

நம் நாட்டிற்கு ஆயிரக்கணக்கான மயில்களுக்கப்பால் உள்ள துருக்கி தேசத்தில், ஒரு காலத்தில் தலைநகராய் விளங்கி இஸ்லாத்திற்கு கௌரவ மளித்துவந்த கான்ஸ்தாந்திநோபிளில் இஸ்லாத்தின் பரிசுத்த உரிமைகளை கார்க்க “ஹிபாஜத்துல் இஸ்லாம்” என அழகியநாமம் சூட்டப்பெற்ற சங்கத்தை நிறுவி சன்மார்க்கப் பிரசாரமூலமாய் இஸ்லாத்திற்கு நேர்மாறாயுள்ள காதியானீயத்தைத் தொலைக்க முன்வந்திருப்பதையும், மேற்படி தேசத்தின் குடியரசுத் தலைவர் காஜீமுஸ்தபா கமால் பாஷா அவர்கள் வழி கெட்ட காதியானி மிர்ஜாயி வகுப்பை ஒழிக்க நியாயமான சகல முறைகளையும் அனுஷ்டிப்பதற்குத் தாம் உதவியாக இருப்பதாயும் அவ்வழிகெட்ட கொள்கையைக் தகர்த்து வெற்றிபெற வேண்டுமென சமீபத்தில் அவர் கூறியிருப்பதும் இவ்வுலகமறிந்தவிஷயமே. உண்மை இங்ஙனமிருக்க, ச. இ. ஆசிரியர் இதற்கு முற்றிலும் மாற்றமாக, காதியானியத்தை உணராதவரைப்போல் வரைந்திருப்பது இவரின் உள்ளக்கிடக்கையை நன்கு விளக்குகிறதல்லவா?

அல்லாமலும், “காதியானிகளென்போர் எத்தகைய கொள்கையை உடையவர்களென்பது எங்களுக்கு இதுகாறும் தக்க ஆதாரத்தோடு தெரியாமலேயிருந்து வருகிறது.” எனக்கூறுகிறார். இவரின் மனச்சாக்ஷியின் போக்குதானென்னே? சற்று கவனிப்போம். சமீபத்தில் மீரத்வாசியான மௌலானா மௌலவீ அல்ஹாஜ்ஷாஹ் முஹம்மதுஅப்துல்அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் தென்னாட்டு சுற்றுப் பிரயாணத்தின்போது சென்னை லாலிஹாலில் புரிந்த பிரசங்கத்தில் ‘பஹாயி’மதம் ஆரம்பமானது முதல் காதியானிமதம் தோன்றியவரையில் இதற்கு இடைகாலநிகழ்ச்சியுட்பட பலவற்றையும் தக்க ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இப்பிரசங்கம் நம்தென்னாட்டுமுஸ்லிம் பத்திரிகைகளில் கொட்டைஎழுத்தால் தலையங்கம் தாங்கி வெளிவந்ததை பாவலரின் கண் காணாதுபோனதுதான் விந்தையிலும் விந்தை!

“காதியானிகள் காபிர்கள்தாம்” என்பதற்கு போதிய ஆதாரங்களுடன் அகில உலக மேதாவிகளான மாண்பு மிக்க உலமாக்களின் ‘பத்வாவும்’ ஏகமுஸ்லிம்களின் ஒற்றுமையான முடிவும் அத்தாக்ஷியாக நம் முன் இருக்கிறது. இதற்கு சான்றாக காதியானிகள் காபிர்களாகுமென 2-8-29ல் ‘தாருல் இஸ்லாம்’ பத்திரிகையில் பிரகடனப்படுத்தியிருப்பதால் அதனையும் நமது வாசகர்களின் பார்வைக்குக் குறிப்பிடுகிறேன்.

அது வருமாறு:—"இவ்வுலக முழுதும் காபிரெனப் பறையபறையப்படும் அந்த காதியானிகளை யாம் என்னென்றழைப்பது...........காதியானிகள் காபிர்களென்று இவ்வுலக முஸ்லிம்களால் ஒதுக்கி தள்ளப்படுகின்றனர். மேலும் இந்த காதியானிகளும் ஏனைய முஸ்லிம்களையெல்லாம் காபிர்களென்றழைக்கின்றனர். இன்னமும் இவர்கள் நபிகள் பெருமானின் (ஸல்.) இறுதி நபியென்னும் தத்துவத்தை நிராகரிக்கின்றனர். அந்த இறுதி நபி அவர்களின் புர்கானுல் மஜீத் என்னும் இறுதிமறையையும் அடியோடு புறட்டுகின்றனர். இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவத்தையும் குலைக்கின்றனர்........ இறுதி முஹம்மதை (ஸல்.) ஒத்துக்கொள்ளாத காதியானிகளுக்கு அந்த இறுதி நபியின் இறுதி மறையில் யாது சம்பந்தம் இருத்தல் கூடுமென்பது இவ்வடியேனுக்கு விளங்கவில்லை." என்பதே. இதைத்தவிர்த்து இன்னம் அனேக ஆதாரங்கள் வரைவதானுல் விரிவாகும். ஆதலின் நிறுத்திக்கொள்கிறேன். ஆகவே, மேதாவிகளான சுன்னத்து வல் ஜமா அத்து முஸ்லிம்களால் கூறப்படுபவைகளில் ஒருக்கால் நமது பாவலருக்கு நம்பிக்கையில்லாது போய்விடினும் தா. இ. எழுதுவதில் தக்க நம்பிக்கை ஏற்பட்டுவிடும். எனவே இனியேனும் ஆசிரியர் ஜனுப் பாவலர் அவர்கள் உண்மைவழியிலேயே தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் கருணைப்பாலிப்பானுக. வஸ்ஸலாம்.

---

# ஓர் இனிய கதை

ஷாஹித்து என்பவன் பி. ஏ. டிக்ரி பெற்றது முதல் ஷேக்அப்துஸ்ஸமதின் பாடு அதோகதியான ஆபத்திலாய்விட்டது. ஷாஹிது என்பவனுக்கு ஐரோப்பாவுக்குச் செல்லவேண்டுமென்னும் பித்து சிரஸில் ஏறிவிட்டதால் அவன் சிநேகிதரும் உறவினரும் எவ்வளவோ தூரம் உபதேசம் செய்தும் எவ்விதப் பிரயோசனமுமேற்படவில்லை. "விலக்கப்பட்ட வஸ்துவின்மீது அதிக விருப்பங்கொள்வது மானிட சுபாவம்" என்னும் சொல் நமது ஷாஹிது விஷயத்தில் முற்றும் நிதர்சனமாய்க் காணப்பட்டது. எனவே, உற்றார் உறவினர் எவ்வளவு தூரம் அவனுக்கெடுத்துரைத்தார்களோ அவைகளுக்கு நேர்மாற்றமாய் ஐரோப்பாசெல்லும் எண்ணம் அவன்மனதில் அதிகரித்துக்கொண்டேபோயிற்று. ஐரோப்பிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தமது கவனத்தைச் செலுத்துவதிலேயே நேரத்தைப் போக்கிவந்தான்; அவனது முழுஎண்ணமும் ஐரோப்பிய பிரயாணத்தின் ஆசை நிறம்பியதாக இருந்தது; அவனுடைய சிந்தனை சக்திமுழுதும் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத் திட்டத்தை ஏற்படுத்துவதிலேயே செலவாகிக் கொண்டிருந்தது.

ஷேக் அப்துஸ்ஸமத் வெகு சாமர்த்தியத்தோடு தமது வாழ்க்கையை சாதாரணமான முறையிலேயே கழித்துவந்தார். தாசீல்தார் உத்தியோகம் வகித்திருந்தகாலை ஒவ்வொரு மாதச் சம்பளத்திலும் ஒருபாகத்தை மீதப்படுத்திவைப்பது அவரது முக்கிய காரியமாக இருந்தது. அதுபொழுது கிராமவருமானத்தில் அவர் கைகூடவைக்காது அதனை அப்படியே மீதப்படுத்திக்கொண்டே இருந்தார். உத்தியோகத்தைவிட்டு பென்ஷன் பெற்ற பின்போ ஷேக்சாஹிபுடைய விஷயத்தைச் சொல்லவும் வேண்டுமோ? இதற்கு உலோபித்தனம் என்று சொல்லக்கூடாது. அவருடைய சாப்பாடு உடுப்பு குடிஇருப்பு முதலியவைகள் அவருடைய அந்தஸ்துக்கு மேம்பட்டதாகவே இருந்தது. ஆனுல், இதரர்களைப்போல் வீண்டாம்பீகச் செலவிலீடுபடுவது, பெயர் பிரக்யாதிக்காகச் செலவுசெய்வது முதலியவைகள் அவரிடத்தில் மிகமிகப்பாவமான காரியமாக இருந்தது. அவர், ஷாஹிதின் விருத்த சேதனவைபவத்தில் முன்மாதிரியாகக்கொண்டது யாவரும் பின்பற்றக்கூடியவையேயாகும். அவர் அவ்வூரிலுள்ள 'எதீம்கானு' அனுதைச் சாலையிலுள்ள சிறுர்கட்கு உடுப்புத்தைத்துக் கொடுத்ததுடன் ஏழைகட்கும் நெறுங்கிய பந்துக்களுக்கும் ஒரு வேலைதஅவத்துச் செய்துவிட்டு குறிப்பிட்ட காரியத்தை முடித்துவிட்டார். இவ்வாறு அடக்

கத்துடன் காலங்கழித்துக்கொண்டு வரும் ஒருவருக்கு, ஐரோப்பாசென்று கல்வி கற்பிப்பதற்குச் செலவுசெய்ய வேண்டும் என்னும் விஷயம் எவ்வளவு தடுமாற்றத்தையும் கஷ்டத்தையும் கொடுக்குமென்பது நேயர்கள் அறிந்தவையே. ஆனால், ஏகபுத்திர வாஞ்சையானது ஷேக் சாஹிபின் வழக்கத்தையும் கடுமைத் தன்மையையும் மாற்றி அனுமதியளிப்பதற்குள்ளவற்புறுத்தல் செய்துவிட்டதால் வகையற்ற நிலைமையில் அவர் அனுமதியளிக்கும் நிற்பந்தத்துக்குட்படுத்தப் பட்டவராகிவிட்டார்.

எவ்வகையிலும் தந்தையின் அனுமதி கிடைத்தவுடனே, ஷாஹிது வெகு தீவிரமாய் பிரயாணத்துக்குவேண்டிய சாமான்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டு, பலடஜன் சூட்டுகளென்ன? பூட்டுகளென்ன பெட்டிகளென்ன அநேக சாமான்களை சேகரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவர்கள் அவன் திரும்ப வராது ஐரோப்பாவுக்கே ஹிஜ்ரத் சென்றுவிடுவதற்கு முயற்சிக்கின்றானென எண்ணிக்கொள்வதற்கு ஹேது வேற்பட்டிருந்தது. ஷேக்அப்துஸ்ஸமதும், ஷாஹிதின்மாமாவும் வழியனுப்புவதற்காக பம்பாய்வந்தார்கள். ஷாஹித் 'விக்டோரியா' கப்பலில் லண்டன்மாநகர் பிரயாணமாய்விட்டான். ஆனால் கப்பல் புறப்படுங்காலை மனக்கலக்கத்தைக் கொடுக்கும் விஷயம் ஆங்கு நடைபெற்றது. ஷெய்கு சாஹிபின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தவண்ணமாக இருக்கும் நிலைமையில் அவர் தமது அருமைகுமாரர்பால் ஆசீர்வாதம் புரிந்துகொண்டிருந்தார். தந்தையின் இந்நிலைமையைக்கண்ட ஷாஹிதின் மனதில் இரக்கமேற்பட்டதாயினும் ஐரோப்பாப் பிரயாணத்தின்மீது அவன்கொண்டிருந்த மோகமானது அதனை மாற்றிக்கொண்டு கண்களில் வடியும் தண்ணீரை உலரவைத்துக் கொண்டிருந்தது. சுயதேசப் பற்றானது அசைக்கமுடியாதவும் யாராலும் மாற்றமுடியாதவுமாகிய ஒரு வஸ்துவாக இருப்பதனால், ஷாஹிது பம்பாய் பட்டணத்தின் சின்னங்கள் மறையும்வரை கப்பலின் வராண்டாவில் நின்ற வண்ணம் அவைகளைப் பார்த்துக்கொண்டே இருந்தான். இதற்குச் சற்றுநேரத்திற்கெல்லாம் சாப்பாட்டுமணி படிக்கப்பட்டதால் நமது ஷாஹிது போஜனவிடுதிக்கு விரைந்தோடினான். ஷாஹிது அநேகமாய் இந்திய முறையிலேயே சாப்பிடுவது வழக்கம்; ஏதோ இரண்டொரு தடவை காலேஜில் ஐரோப்பிய முறையில் சாப்பிடுவதற்குள்ள சந்தர்ப்பமேற்பட்டிருந்ததுண்டு. இந்நிலைமையில் சாப்பாட்டு மேஜையின் சிங்காரிப்பு அழகையும் வேலையாட்களின் அலங்கார தோற்றத்தையும் கத்தி முள்ளு வைக்கப்பட்டிருக்கும் நேர்த்தியையுங் கண்டு ஷாஹிதின்மீது ஓர்விதமான நிலைமை ஏற்பட்டுப்போயிற்று. அதுபொழுது ஷாஹிது பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்துக்கொண்டு தின்பதிலும் பலமுறைத் தவறுகளேற்பட்டுவிட்டது. எனவே, சரியானமுறையில் கத்தியை உபயோகிக்கத் தெரியாது மிக தெண்டிப்போடு அதில் பழகி மேனாட்டுப் பழக்கத்தில் தேர்ச்சி பெறுதற்கு பெரிதும் முயற்சி செய்துகொண்டிருந்தான். ஆனால் சிறிய மறதியும் கொஞ்ச அஜாக்கிரதையும் அவனது முழுபிரயாசையையும் தண்ணீர்கொண்டு அலசிவிட்டது. அவன் மீன் துண்டமொன்றை அந்த முள்ளினால் எடுத்து தகாதமுறையில் வாயில் வைத்ததின் பயனாக அந்த முள் உதட்டில் பட்டு இரத்தம் வடிய ஆரம்பித்தது. ஷாஹிதின் இரத்தங் கலந்த முகத்தைக்கண்ட யாவருக்கும் தன்னை அறியாமலே சிறிப்பு ஏற்பட்டுவிட்டது. அவனது நெற்றியிலிருந்து வியர்வை வடிந்து கொண்டிருக்கும் நிலைமையில் பார்வையை மேஜையின்மீது செலுத்தியவனாய் வெட்கத்தால் தலைகுனிந்து அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். இந்நிலைமையில் கைக்குட்டைக்குப் பகரமாய் மேஜைவிரிப்பைக்கொண்டு இரத்தத்தைத் துடைத்துக்கொண்டதால் அந்த விரிப்பில் இரத்தக்கறை ஏற்பட்டுவிட்டது கண்டு அதிக சஞ்சலமடைந்தான். இது முதல் தடவை ஏற்பட்ட ஆரம்ப சம்பவமாகும். இதன்பின் 3, 4 நாட்கள்வரை ஷாஹிது நாணமடைந்தவனாய் வெகு ஜாக்கிரதையோடு சாப்பிட்டு வந்தான். ஆனால் சில நாட்களின் பழக்கத்தால் அவனுடைய கோழைத்தனமெல்லாம் நீங்கி கத்தி முள்ளு இவைகளை உபயோகிப்பதில் தக்க பாண்டித்துவம் பெற்றவனாகிவிட்டான்.

இவ்வாறு ஒவ்வொரு விஷயமும் கீழ்தேய நடவடிக்கைக்கு மாற்றமானதாக இருந்தும் ஷாஹிது அதன்மீது மோகங்கொண்டு அவைகளைத் தெரிந்துகொள்வதி லீடுபட்டிருந்ததால் லண்டன் போய்ச் சேருவதற்கு முன்பே பல வகையிலும் கால் ஐரோப்பியனாகிவிட்டான்.

(தொடரும்)

## பாடால் பெயின்பாம்

பாடால் பாம் "ஒரிஜினல் பார்முலா" ருஷியா தேசத்து பிரபல வைத்திய சாஸ்திரியான புளஸ்கோஸ்கி என்பவருடையதாகும்.

இந்த பாம தலைவலி, சுளுக்கு, காயம்பிடிப்பு, இருமல், ஜலதோஷம், வீக்கம், கீழ்வாய் குடைச்சல், மார்வலி, கொசு, பூச்சிக்கடி, மூலம், சொரி சிரங்குகள், கபாலஜுரம் இவைகளைப் போக்குவதில் நிகாற்றதாகும்

நூற்றுக்கான ரூபாய்களைச் செலவு செய்யக்கூடிய அநேக கொடிய வலிகளையும் குத்தல்களையும் குடைச்சல்களையும் சொற்ப செலவில் குணமாக்கி விடுவதால் இதன் பெருமையையும் குணத்தையும்பற்றி அதிகம் சொல்வது அனுவசியமாகும்.

ஒருமுறை பரீக்ஷித்தால் தானே தெரிந்துவிடும்.

**புட்டி 1-க்கு விலை அணா 7.**

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

எல்லா இடங்களிலும் ஏஜண்டு தேவை.

ஆசியாவக்கு டிஸ்டிரி பியூட்டர்ஸ்,

**A. M. அப்துல்லா சாஹிப் ஸன்ஸ்,**

5, ஆண்டர்ஸன் தெருவு, சென்னை.

---

## சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஷிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும் அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பாவிய வரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் விபரமும் விபரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் மூஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் அட்ரசுக்கு தபால் சிலவு 0—0—9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

# திருமறை தமிழுரை விற்பனை.

கூத்தானல்லூர், சாந்திப்பிரகடன சபையினரின் நன்முயற்சியால் வெளியிடப் பெற்ற 'திருமறைத் தமிழுரை' குர்ஆன் ஷரீப் மொழிபெயர்ப்புக்கு, அச்சிடப் பெற்ற கூலி, பைண்டு கூலி சில கொடுபடாமல் பொது ஜனப் பிரயோசனத்திற்கு விற்பனை செய்யத் தடைபட்டிருந்ததை மேற்படி சங்க மெம்பர்களில் ஒருவரின் அனுமதியின்பேரில் பொது நன்மையைக்கருதி, பிரதிப்பிரயோசனத்தையும் நாடாது கொஞ்சம் பொருளுதவியும் செய்து, ஷை தர்ஜுமா சம்மந்தமாக பலவழிகளிலும் விளம்பரப்படுத்தி என்றால் விற்பனை செய்யப்பட்டுவந்ததில், ஷை சாந்திப் பிரகடன சபை மெம்பர்களிற்சிலர் அவ்வாறு விற்பனை செய்வது கூடாதென்று ஆட்சேபித்ததால் என்னிடம் இருந்த பிறதிகளையும் கணக்கையும் அவர்களிடம் வாபஸ் கொடுத்து விட்டேன். ஆகையால் இனி என் விலாசத்திற்கு ஆர்டர் அனுப்பாமலிருக்கும்படி நேயர்களுக்கு அறிவித்து கொள்ளுகிறேன். சில ஆர்டர்களுக்கு அனுப்பதற்கும் இதுவே காரணமாகும்.

SCANNED

**ஓ. எஸ். சதக்தம்பி மரைக்காயர்**

பிரிட்டிஷ் இண்டியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின்
அதிகாரம்பெற்ற புரோக்கர்;
ஸ்டாண்டர்டு வாக்கும் ஆயில் கம்பெனியின் சப் ஏஜண்டு

36, அரண்மனைக்காரன் தெரு.,
ஜி. டி., மதராஸ்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Sa.
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.